உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 தை 15 ஞாயிற்றுக்கிழமை (28-01-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:62

பூமியதிர்ச்சியால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 15,000க்கும் அதிகம்!

இந்தியாவில் பேரவலம்

லண்டன், ஜனவரி28

இந்தியாவின் மேற்கு மாநிலமான குஜராத்தை மையமாகக் கொண்டு நேற்றுமுன்தினம் நிகழ்ந்த பெரும் பூமியதிர்ச்சியில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 15 ஆயிரத்துக்கும் அதிகம் என்று அறிவிக்கப்படுகின்றது.

அப்பாவிப் பொதுமக்களை ஆயிரக்கணக்கில் கூண்டோடு காவு கொண்ட இந்தப் பேரவலச் சம்பவத்தின் கொடூரத்தில் இருந்து மீளமுடியாத அதிர்ச்சியில் இந்திய மக்கள் மூழ்கியிருக்கின்றனர்.

நெஞ்சை உலுப்பும் இயற்கையின் இந்தக் கோரத் தாண்டவத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை பத்தாயிரத்துக்கும் அதிகம் என்று இந்திய அதிகாரிகள் நேற்றுமாலை தெரிவித்தனர்.

சில கட்டடங்கள் அரைகுறையாக மிஞ்சின.

கட்டட இடிபாடுகளில் சிக்கி கையைப் பறிகொடுத்த பெண்ணுக்குச் சிகிச்சை.

ஆனால் ஆளும் பாரதிய ஜனதாக் கட்சியின் செயலாளர் நாயகம் நரேந்திர மோடி ஹெலிக்கொப்டர் மூலம் பாதிக்கப்பட்ட இடங்களைச் சுற்றிப் பார்வையிட்ட பின்னர் இறந்தோர் எண்ணிக்கை 15 ஆயிரத்துக்கும் அதிகம் என்று அறிவித்தார்.

கரையோர சதுப்பு நிலங்களைக் கொண்ட குச் மாவட்டத்தில் மட்டும் 13 ஆயிரத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்திருப்பதாக அவர் சொன்னார்.

உயிரிழந்தோர் எண்ணிக்கை 15 ஆயிரத்துக்கும் அதிகம் என்று பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் ஆதாரம் காட்டி 'ஸ்ரார் ரீ.வி' அறிவித்தது.

பூமியதிர்ச்சி நிகழ்ந்த சமயம் அன்ஜார் என்ற இடத்தில் நீண்ட - ஒடுங்கிய - சந்து ஒன்றில் அணி நடை நிகழ்ச்சியில் பங்கு பற்றிக் கொண்டிருந்த மாணவர்கள் அணி அருகில் இருந்த கட்டடங்களின் இடிபாடுகளுக்குள் சிக்கி அமிழ்ந்து போனதாகவும் -

முந்நூற்று ஐம்பது மாணவர்களும் ஐம்பது ஆசிரியர்களும் இந்தச் சம்பவத்தில் உயிரிழந்ததாகவும் -

மற்றும் ஐம்பது பேர் இந்த இடிபாடுகளுக்கு நடுவில் இருந்து உயிருடன் மீட்கப்பட்டதாகவும் -

ரொய்ட்டர் தெரிவித்தது.

மற்றொரு பாடசாலையில் இருந்த மாணவர்களில் 30 பேர் பூமியதிர்ச்சியால் பயந்து கட்டடத்தை விட்டு ஓடித்தப்ப முயன்ற சமயம் படிக்கட்டுகளோடு இடிபாடுகளுக்குள் புதையுண்டு மரணித்தனர்.

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் அகமதாபாத்தில் புதிதாகக் கட்டப்பட்ட நன்பறுப் பாடசாலை ஒன்றில் கம்பியூட்டர் வகுப்பில் கல்வி பயின்று கொண்டிருந்த 40 மாணவர்கள் கட்டட இடிபாடுகளுக்குள்

(14ஆம் பக்கம் பார்க்க)

இதுவரை புகலிடம் தந்த வீடு தகர்ந்து கிடக்கிறது. இனிமேல் ஆகாயம்தான் இந்தக் குடும்பத்தின் வீட்டுக் கூரை.

வீட்டையும் உறவினர்களையும் பூமியதிர்ச்சிக்குப் பலிகொடுத்த பெண் தன் சிசுவைக் கட்டி அழும் காட்சி.

மீன்பிடிப் படகுகள் அபகரிப்பு

கொழும்பு,ஜன.28

வாழைச்சேனைப் பகுதியிலிருந்து கடந்த வியாழனன்று கடற்றொழிலுக்குச் சென்ற மீனவர்களின் ஐந்து படகுகள் கல்குடாக் கடற்பகுதியில் வைத்துக் கொள்ளையிடப்பட்டிருப்பதாகப் பொலீஸா ருக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.(உ)

தென்மராட்சியில் மீட்கப்பட்ட 6 மோ.சைக்கிள்கள்

தென்மராட்சி,ஜன.28

பொதுமக்கள் இடம்பெயர்ந்த பின்னர் தென்மராட்சிப் பகுதியில் கைவிடப்பட்ட நிலையில் படையினரால் மீட்கப்பட்ட 6 மோட்டார் சைக்கிள்கள் வரணி சிவில் நிர்வாக அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன எனவும் -

உரியவர்கள் மோட்டார் சைக்கிள்களின் 'செஸி' இலக்கத்தைக் குறிப்பிட்டு அவற்றை எடுத்துச் செல்லலாம் எனவும் -

மேற்படி சிவில் நிர்வாக அலுவலக அதிகாரிகள் அறிவித்துள்ளனர். (உ-7-117)

பொங்கு தமிழை ஆதரித்து வன்னியில் எழுச்சி

வவுனியா,ஜன.28

யாழ்பல்கலைக்கழக சமூகத்தின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட 'பொங்கு தமிழ்' நிகழ்வுக்கு ஆதரவு தெரிவித்து நேற்று புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வன்னிப் பிரதேசத்தில் அப்பகுதிக் கல்விச் சமூகத்தினர் எழுச்சி நிகழ்வு ஒன்றை நடத்தினர்.

விஸ்வமடு மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அப்பிரதேச அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், சிற்றூழியர்கள்

(14ஆம் பக்கம் பார்க்க)

எழுதுமட்டுவாழில் 3 புலிகள் மரணம்

வவுனியா,ஜன.28

கடந்த 19 ஆம் திகதி எழுதுமட்டுவாழ் பகுதியில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் தமது தரப்பில் மேஜர் பகீரதி (தயாபரராசா கிருபாலஷ்மி - யாழ்ப்பாணம்), மேஜர் கவிபா (சிவபாலு; உதயா - யாழ்ப்பாணம்), லெப்.இன்பன்(ஆறுமுகம் பேரின்பராசா. - யாழ்ப்பாணம்) ஆகியோர் உயிரிழந்ததாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.(உ-7-164)

யாழ்.டாக்டர்கள் நாளை அடையாள வேலைநிறுத்தம்

யாழ்ப்பாணம்,ஜன.28

விசேட மேலதிகக் கொடுப்பனவுகளை வழங்கும் விடயத்தில் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் கடமையாற்றும் - வடக்கு - கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த - வைத்தியர்களுக்கு சுகாதார அமைச்சு பாரபட்சம் காட்டுவதாகத் தெரிவித்து, அதற்குத் தமது எதிர்ப்பைக் காட்டும் விதத்தில் நாளை ஒரு நாள் தாங்கள் அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபடப்போவதாக அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் யாழ். கிளை அறிவித்துள்ளது.

இந்த அடையாள வேலை நிறுத்தம் காரணமாக -

நாளை யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சைகள் வழங்கும் பணிகள் மட்டுமே நடைபெறும் என்றும் -

அன்று முழுநாளும் வெளிநோயாளர் பிரிவு, கிளினிக்குகள் என்பன நடைபெறமாட்டா என்றும் -

அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் யாழ்.மாவட்டக் கிளை அறிவித்துள்ளது. (உ)

தெற்கிலும் இனிமேல் சீனி பங்கீட்டு அடிப்படையில்!

கொழும்பு,ஜன.28

தென்னிலங்கையிலும் ஒரு பாவனையாளருக்கு இரண்டு கிலோ என்ற அளவில் பங்கீட்டு அடிப்படையில் சீனி வழங்கப்பட இருக்கின்றது.

இவ்வாறு கட்டுப்பாடு விலையில - பங்கீட்டு அடிப்படையில் - சீனியை விற்பனை செய்ய கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் முடிவு செய்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டு நாணயங்களுக்கு எதிரான டொலரின் பெறுமதியை மத்திய வங்கி தீர்மானிப்பதைக் கைவிட்டு, அதனை மிதக்க விடுவதாக அறிவித்ததை அடுத்து நாட்டில் பல்வேறு அத்தியாவசியப் பொருளகளின் விலைகள் கிடுகிடுவென உயர்ந்தது தெரிந்ததே.

அந்த வகையில் நாளுக்கு நாள சீனியின் விலையும் எக்கச் சக்கமாக உயர்ந்து செல்வது குறிப்பிடத்தக்கது. இதனையடுத்தே நுகர்வோரப்

(14ஆம் பக்கம் பார்க்க)

தென்மராட்சி மக்களை மீளக்குடியமர்த்த ஏற்பாடு

விவரங்களைப் பதிவுக் கோரிக்கை

தென்மராட்சி,ஜன.28

இடம்பெயர்ந்துள்ள தென்மராட்சி மக்களை மீண்டும் அவர்களது சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்த ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகவும் -

இவ்வாறு மீளக்குடியமர விரும்புபவர்கள் எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு முன்பாக தத்தமது கிராம அலுவலர்களிடம் குடும்ப விவரங்களைப் பதிவு செய்து கொள்ள வேண்டுமெனவும் -

வரணியில் உள்ள படையினரின் சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது.

தென்மராட்சி மக்களை மீண்டும் அவர்களது சொந்த இடங்களில் குடியமர்த்துவது தொடர்பான கூட்டம் ஒன்று நேற்று மேற்படி சிவில் நிர்வாக அலுவலகத்தில் நடைபெற்றது.

(14ஆம் பக்கம் பார்க்க)

வேட்டையாடச் சென்றவர் வேட்டுக்குப் பலியானார்

வாகரைப் பகுதியில் சம்பவம்

மட்டக்களப்பு,ஜன.28

மட்டக்களப்பு மாவட்டம் - வாகரை திரிமிச்சம் காட்டுப் பகுதியில் நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணியளவில் வேட்டையாடச் சென்ற இளம் குடும்பஸ்தர் ஒருவர் சீருடையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தார். மற்றும் மூவர் படுகாயமடைந்தனர்.

மூன்று பிள்ளைகளின் தந்தையான வேலாயுதம் வசந்தகுமார் (வயது 29) என்பவரே உயிரிழந்தவராவர். சின்னத்தம்பி யோகராஜா (வயது 26),ஆறுமுகம் சந்திரமோகன் (வயது 22) ஆறுமுகம் மோகன் (வயது 31) ஆகியோர் காயமடைந்தனர்.

மேற்படி காட்டுப் பகுதிக்கு பொதுமக்கள் வேட்டையாடச் செல்வதும் தேன் எடுக்கச் செல்வதும் வழமை என்றும் -

காட்டுப் பகுதியில் காவலுக்கு நின்ற சீருடையினரே இவ்வாறு துப்பாக்கிச் சூடு நடத்தினர் எனவும் -

கிரிமிச்சம் காட்டுக் கிராமவாசிகள் செய்தியாளர்களிடம் தெரிவித்தனர்.

(உ-7-21)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

இலவச கணனிப் பயிற்சித்திட்டம்

324, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.

ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின கீழ் அரச திணைக்களங்களைக் கணனிமயப்படுத்துவதில் பெரும் பங்காற்றிய எமது நிறுவனத்தினர் 2001 ஆம் ஆண்டில் இலவச பயிற்சித் திட்டம் ஒன்றை முன்வைத்துள்ளார்கள்.

பிரிவு II ஆரம்பம் 28-01-2K+1 காலை 9.30

(C/15027)

நீதி உதவி நாடகக் காட்சி

கொக்குவில் இந்துக் கல்லூரி இன்ரறக்ட் கழகத்தின் நிதி வளர்ச்சிக்காக நடத்தப்படும்

பு.கணேசராஜாவின் - (மாயவலையும்) (நாடகம்)
செ.சுந்தரேசின் - (ஊன்றுகோலும்) (நாடகம்)

காலம் :- இன்று (28.01.2001) ஞாயிற்றுக்கிழமை
நேரம் :- பி.ப.2.00மணி (பழைய நேரம்)
இடம் :- கொக்குவில் இந்துக் கல்லூரி மண்டபம்.

இன்ரறக்ட் கழகம்,
கொக்குவில் இந்துக் கல்லூரி.

விளம்பர அன்பளிப்பு :-
பிள்ளையார் சிவல்டிங் சென்ரர்,
கே.கே.எஸ் வீதி, சிவன்கோயிலடி,
யாழ்ப்பாணம். (83515)

தும்பளை நெல்லண்டை
ஸ்ரீ பத்திரகாளி அம்மன் கோயில்

மகா கும்பாபிஷேகம்

தும்பளை நெல்லண்டை பத்திரகாளி அம்மன் கோயில் பஞ்ச குண்ட மகா கும்பாபிஷேகம் 2001.01.29ஆம் திகதி திங்கட்கிழமை காலை 7.39 மணிக்கு நடைபெறவுள்ளது.

பக்கதர்கள் பால்காப்பு, எண்ணெய்க்காப்பு சாத்துதல் 2001.01.28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணி வரை நடைபெறும்.

சகல அடியார்களையும் பங்குபற்றி இத்தி மரத்தாள் நெல்லண்டைப் பத்திரகாளியின் அருளைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

(C/15021) -தரும பரிபாலன சபையினர்.

ஏழாலை தெற்கு, வசந்தபுரம்
அருள்மிகு
வசந்த நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானம்
மணிக்கோபுர கும்பாபிஷேகம்

500 கிலோ எடையுள்ள இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்ட அசையாமணியை 57 அடி உயரக் கோபுரத்தில அமைக்க அம்பாள் திருவருள் கைகூடியுள்ளது.

காலம் : நாளை (29.01.2001) திங்கட்கிழமை
நேரம் : நண்பகல் 12 மணி
பிரதமகுரு: தியாக. கெங்காதரக்குருக்கள்

அம்பிகை அடியார்கள் அனைவரும் அன்னையின் அருளைப் பெற்று பேரானந்தம் பெறுக!

(C/15018) -தேவஸ்தானம்.

அருள்வளர் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோயில்
நூதன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம்

29.01.2001 திங்கட்கிழமை ஆரம்பம்.
காலை 7.00 மணி முதல் 8.33 மணி வரை.

எமது அன்புக்கும் மதிப்புக்கும் உரிய
சிவ ஸ்ரீ சுந்தரேஸ்வரக் குருக்கள் (தர்மகர்த்தா)
அவர்களின் முயற்சியால் இவ்வாலயம் ஆரம்பிக்கப்பட்டது.

சில உதவிகள் புரிந்த
யாழ்.வேணி களஞ்சிய உரிமையாளர்,
ஸுப்பி சிறக்ஸ் உரிமையாளர் – சிநுல்லியடி.
இவர்களுக்கும் எமது நன்றிகள் !

வாலா சோப் தொழிற்சாலை

அச்சுவேலி. (C/15024)

மேடையேறும் இரு நாடகங்கள்

யாழ்ப்பாணம்,ஜன.28

கொக்குவில் இந்துக் கல்லூரி இன்ரறக்ட் கழகத்தின் நிதியுதவிக்காக ஒழுங்கு செய்யப்பட்டுள்ள பு. கணேசராஜாவின் "மாயவலை" மற்றும் செ.சுந்தரேசின் "ஊன்று கோல்" ஆகிய இரு நாடகங்களும் இன்று பிற்பகல் 2.00 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

(உ-7)

நாவற்குழியிலிருந்து செஞ்.குழு மூவரைக் கூட்டி வந்தது

யாழ்ப்பாணம்,ஜன.28

படையினரால் மீளவும் கைப்பற்றப்பட்ட நாவற்குழிப் பகுதிக்கு நேற்றுச் சென்று வந்த செஞ்சிலுவை சர்வதேசக் குழுவின் யாழ். அலுவலகப் பிரதிநிதிகள் நாவற்குழி மகாவித்தியாலயத்தில் தங்கியிருந்த இரு பெண்கள் உட்பட மூன்று வயோதிபர்களை மீட்டு வந்தனர்.

வயதான பெண்கள் இருவரும் அவர்களது உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர். மற்றைய வயோதிபர் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார். அவரது உறவினர் களும் ஆஸ்பத்திரிக்கு வந்து அவரைப் பொறுப்பேற்றனர்

(உ)

SHAMROCK

1 J/சோமசுந்தரம் அவனியு,
* Gr.6 முதல் O/L வரை
* A/L கலை, வர்த்தக, கணித, விஞ்ஞான பிரிவுகள்
2 கிளை:-
J/ஈச்சமோட்டை வீதி.
* Gr.4 முதல் 8 வரை
* Gr.5- புலமைப் பரிசில் நடைபெறுகின்றது.
* Gr.9, 10, 11 விரைவில் ஆரமபிக்கப்படும்.

(C/15022)

புலமைப் பரிசில் - 2001

24 ஆவது பரீட்சையில் அதி கூடிய புள்ளி பெற்றோர்

- க.கபிர்த்தனா - 174
  சுன்னாகம் நாகேஸ்வரி வீதி.
- ந.திருத்தணிகன் - 173
  யா/இ.ஆ.பா.
- வெ.ஜெயப்பிரசாந்த் - 162
  யா/இ.ஆ.பா.
- உ.நிவேதிகா - 161
  நி.ஜனலக்ஷன் - 160
  யா/இ.ஆ.பா.

BOND - யாழ்நகர்

(83513)

லஷ்மி இணைவில்

2ஆவது வாரமாக
விஜயகாந்த், மீனா
நடித்த
வானத்தைப் போல
(நீல்ஸ்)
காட்சிகள் 10.30, 2.30 (ம.நே.)

(833518)

நாகம்ஸ்
சுன்னாகம்
டைட்டானிக்
(தமிழ் ~ நீல்ஸ்)
காட்சிகள்:10.30, 2.30 (புதிய நேரம்)
29.01.2001 முதல்
வெண்ணின் மனதைத் தொட்டு

(C/15023)

ராஜா யாழ்ப்பாணம்
பிரசாந்த், சிம்ரன்
நடித்த
யார்த்தேன் ரசித்தேன்
காட்சிகள்: 10.30, 2.00(பு.நே.)
நாளை முதல்
அலைபாயுதே

(C/15051)

மரண அறிவித்தல்கள்

செல்வி பிருந்தா பத்மநாதன்

(பகுதி நேர ஆங்கில ஆசிரியை, நீர்வேலி றோ.க.த.க.பாடசாலை)

நீர்வேலி வடக்கைச் சேர்ந்த செல்வி பிருந்தா பத்மநாதன் காலமானார். அன்னார் க.பத்மநாதன்(காமாட்சியம்பாள் கைத்தொழிற்சங்கம்) - பாக்கியம் தம்பதிகளின் பாசமிகு மகளும், பவானி(சுவிஸ்), பிரபாகரன் (பிரான்ஸ்), ரதீபன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், மகேந்திரனின்(சுவிஸ்) மைத்துனியும், சுவிபன், மதுஜன்(சுவிஸ்) ஆகியோரின் சித்தியும், காலஞ்சென்ற இராசரத்தினம், பூமணி ஆகியோரின் பெறாமகளும்,சத்தியதேவி, (பிரான்ஸ்), தனேஸ்வரன்(ஜேர்மனி), ஸ்ரீலாவதி, யோகேஸ்வரன்(சுவிஸ்) பத் மாவதி, உமாவதி(பிரான்ஸ்) ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரியும், காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை, தங்கம்மாவின் அன்புப் பேத்தியும், சண்முகதாஸ் (ஜேர்மனி), கிருஷ்ணபகவான்(கொழும்பு), கணேசையா(கனடா), ஆகியோரின் மருமகளுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 28-01-2001 இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகள் மாசுவன் மயானத்தில் நடை பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நீர்வேலி வடக்கு, நீர்வேலி. (83509)

க.பத்மநாதன் (தகப்பன்)

துரையப்பா தணிகாசலம்

வண்ணார்பண்ணை ஐயனார் கோயிலடியைச் சேர்ந்த ஓய்வு பெற்ற புகையிரத நிலைய அதிபர் துரையப்பா தணிகாசலம் நேற்றுக் காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பிஸ்கால் துரையப்பா, மீனாட்சி தம்பதிகளின்சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்ற பத்மாவதியின் அன்புக் கணவரும், பத்மநாதன் (ஓய்வு பெற்ற உத்தியோகத்தர், இலங்கை வங்கி), கதிர்காமநாதன்,(ஓய்வு பெற்ற பாடசாலை அதிபர்), உமாதேவி (ஓய்வு பெற்ற உத்தியோகத்தர், மக்கள்வங்கி), பஞ்சநாதன்(நியூசிலாந்து), Dr.ஆறுமுகநாதன்(அமெரிக்கா) மற்றும் காலஞ்சென்றவர்களான சண்முகநாதன்(ஓய்வு பெற்ற உத்தியோகத்தர், எழுதுனர் சேவை), இரகுநாதன், யோகதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆலாலசுந்தரம்(ஓய்வு பெற்ற நிதியாளர், யாழ்.பல்கலைக்கழகம்), கனகாம்பிகை, இந்திரா, கருணாதேவி, தபோநிதி அம்பாள் (நியூசிலாந்து), நந்தினி (அமெரிக்கா), ஆகியோரின் அன்பு மாமனாரும், ஈஸ்வரியம்மா, காலஞ்சென்றவர்களான துரைஐயா, துரைசிங்கம், துரைரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 28-01-2001 ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல்மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

17/7,ஐயனார் கோயில் வீதி, வண்ணார்பண்ணை. யாழ்ப்பாணம். (83504)

தகவல்: பிள்ளைகள், மருமக்கள், உறவினர்கள்.

செல்லப்பா ஐயம்பிள்ளை

கேசரி வீதி, தையிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்போது கொழும்பில் வசித்தவருமான செல்லப்பா ஐயம்பிள்ளை நேற்று 27.01.2001 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லப்பா தம்பதிகளின் அன்பு மகனும், புனிதவதியின் அன்புக் கணவரும், யோதிநாதன்(ஹொலண்ட்), குமரகுருநாதன்(ஜேர்மனி), இரகுநாதன்(ஜேர்மனி), செல்வநாதன், ஸ்ரீரங்கநாதன் (லண்டன்), துஷ்யந்தினி (கொழும்பு), கயந்தினி(சுவிஸ்), பிரசாந்தினி (கொழும்பு), ஆகியோரின் அன்புத்தகப்பனாரும், மதியழகன், சுபா, சாயி, குமரன், வாசுகி, திருமதி குமரகுருநாதன் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (28.01.2001) ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுதுமலை வடக்கு, மானிப்பாய். தகவல்:- தருமலிங்கம் குடும்பம் (ஜமுனா)மச்சாள். (83514)

இராமலிங்கம் வேலுப்பிள்ளை

(இளைப்பாறிய அதிபர், யா/நெடுந்தீவு சைவப்பிரகாச மகா வித்தியாலயம், நெடுந்தீவு.)

நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும், கோண்டாவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்டவரும் தற்பொழுது இல 223, கஸ்தூரியார் வீதியில் வசித்தவருமாகிய இ.வேலுப்பிள்ளை (இளைப்பாறிய அதிபர்) 27.01.2001 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை புஸ்பராணி (இளைப்பாறிய ஆசிரியை) அவர்களின் அன்புக்கணவரும், இராமலிங்கம் சுந்தையா (இளைப்பாறிய அதிபர்) அவர்களின் சகோதரனும், காலஞ்சென்ற கனகசுந்தரம் (தொழில் நுட்பவியலாளர் CDE), காலஞ்சென்ற வேதநாயகி, காலஞ்சென்ற ஆலாலசுந்தரம்-குமரகுருபரசுந்தரம்(நேரு,V.Kசுந்தரம்), வடபிராந்திய போக்குவரத்துச் சபை-கோண்டாவில்), பரமேஸ்வரநாயகி(ஆசிரியை, கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்), அமரசோதி(ஆசிரியை, யாழ்.நல்லூர் தெற்கு விக்கினேஸ்வரா வித்தியாலயம்), பஞ்சாட்சரம்(இந்தியா) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், நளாயினிதேவி (மல்லாவி), தில்லைநாயகி(நெடுந்தீவு), பிறேமகுமாரி(யாழ்ப்பாணம்), கணபதிப்பிள்ளை (A.K.R மில் உரிமையாளர், கோண்டாவில்), மகேந்திரராசா (யாழ்ப்பாணம்), ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற துஸ்யந்தன், பிரதீப், அஸ்ராஜ், சதீஸ், சிவானந்தி(வினிநொச்சி), சிவஜினி (ப.நோ.கூ.சங்கம், நெடுந்தீவு), யனோசன், பானுஜன், காஷனா, ராகுலன், துவாகரன், ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல 223, கஸ்தூரியார் வீதியிலுள்ள இல்லத்தில் இன்று 28.01.2001 நண்பகல் 12.00மணிக்கு நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் கோம்பையன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

223,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் (83512)

தகவல்:-
வே. குமரகுருபரசுந்தரம்
(மகன்-நேரு V.K. சுந்தரம்)
வடபிராந்திய போக்குவரத்துச் சபை,
கோண்டாவில்சாலை.
அ.கணபதிப்பிள்ளை
(A.K.R மில், கோண்டாவில்)
(மருமக்கள்)
ப.மகேந்திரராசா

உதயன்

போசாக்குப் போர்

வலிகாமம் தென்மேற்குப் பகுதியில் நான்கு கிராமங்களில் மட்டும் செய்யப்பட்ட ஆய்வில் 178 சிறுவர்கள் போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டிருப்பது கண்டறியப்பட்டுள்ளது. ஆய்வுக்கு உள்ளாகப்பட்ட ஒன்று தொடக்கம் ஐந்து வயது வரையுள்ள சிறுவர்களில் அரைவாசிப்பேர் போசாக்கின்மையால் பாதிப்புற்றுள்ளனர்.

குடாநாடு முழுவதிலும் ஆய்வு செய்யப்படின் மேற்கண்ட வயதெல்லை உடைய சிறுவர்களில் சுமார் 25 சத விகிதத்தினருக்கு மேற்பட்டவர்கள் போசாக்கின்மையால் பாதிப்புறுவது வெளிச்சத்துக்கு வரும்.

இடம்பெயர்வு, வேலை வாய்ப்பின்மை ஆகிய இரண்டினாலும் குடாநாட்டு மக்கள் மத்தியில் வறுமை பெருகி உள்ளது. அதனால் பிள்ளைகளுக்குப் போசாக்கான உணவுகளை வழங்க முடியாத நிலையில் அவர்கள் உள்ளனர்.

போசாக்கு உணவின் அவசியம், அதனைப் பெறுவதற்கான பொருளாதார வலு, குறைந்த செலவில் போசாக்கு உணவைப் பெறும் வழிமுறைகள் தெரியாதிருப்பது, அது குறித்த அறிவும் அனுபவமும் இல்லாமை என்பன பக்கக் காரணிகள்.

போரின் பல பக்கவிளைவுகளில் போசாக்கின்மையும் ஒன்றாகும். வருமானம் குறைந்த தரப்புகளையே இது பெரிதும் பாதிக்கிறது. இடம் பெயர்ந்து முகாம்களில் வாழும் தரப்பினரை மட்டுமன்றி 1995, ஆம் ஆண்டுக்குப் பின்னர் மீளக் குடியமர்ந்தவர்கள் தரப்பிலும் இந்தப் பாதிப்பு உண்டு.

முகாம்களில் வாழும் மக்கள் நிவாரணப் பொருள்களில் மட்டுமே தங்கியிருக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை காணப்படுகிறது. தமது சொந்தக் கிராமங்களில் பல வகைகளாலும் கிடைக்கக்கூடிய வருமானவலாம் அவர்களுக்கு இல்லை. பிரதானமான தொழில் வசதியும் இல்லாது போய்விடுகிறது. அரசு வழங்கும் நியமத்துக்குக் குறைந்த அளவுடைய உலர் உணவு நிவாரணம் சிறுவர்களை மட்டுமன்றிப் பெரியவர்களையும் போசாக்கின்மைக்கு ஆளாக்குகிறது.

மீளக்குடியமர்ந்தவர்களில் அன்றாட உழைப்பாளிகளும் மாதச் சம்பளமற்ற ஏனையோரும் தமது தொழில்களை முழு அளவிலும், சுதந்திரமாகவும் செய்து போதிய வருமானம் தேட முடிவதில்லை. அதனால் அவர்களாலும் தமது குடும்ப அங்கத்தவர்களுக்குப் போசாக்கு உணவைப் பெறும் பொருளாதாரத் தகுதி இல்லாமற் போகிறது.

குறைந்த வருமானம் உடைய குடும்பங்களிலும் கசிப்பு மற்றும் மதுப் பழக்கமுடையோர் குடும்பங்களிலும் சிறுவர்கள் மத்தியில் போசாக்கின்மை காணப்படுவது வழமை.

சிறுவர்கள் பலவகையான ஆபத்தான நோய்களுக்கு ஆளாக, போசாக்கின்மை வித்திடும் — வழிசெய்யும், உயிரபத்தையும் தோற்றுவிக்கும். பயனுள்ள சுகதேகிகளாக எதிர்காலப்பிரஜைகளை உருவாக்குவதற்கு போசாக்கின்மை போக்கப்படுவது மிக இன்றியமையாததாகும். இதனைப் பெரும் ஆபத்தான சமூகப் பிரச்சினையாகக் கருதி உடனடியாகச் செயற்பட வேண்டும்.

அரசாங்கத்தை எதிர்பார்க்காது — நம்பியிருக்காது தொண்டர் நிறுவனங்கள் இப்போதே இது விடயத்தில் அவசர அக்கறை கொள்வது அவசியம். கொத்தத்தில் போசாக்குப் போர் முனைப்புற வேண்டும்.

வடக்கு -- கிழக்கு டாக்டர்களுக்கு சுகாதார அமைச்சு பெரும் பாரபட்சம்

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் யாழ்.கிளை குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜன. 28

வடக்கு — கிழக்கு மாகாணத்தில் கடமையாற்றும் — வடக்கு—கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த — வைத்தியர்களுக்கு விசேட மேலதிக கொடுப்பனவுகளை வழங்காமல்; சுகாதார அமைச்சு பாரபட்சம் காட்டுவதாக அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் யாழ். கிளை குற்றஞ்சாட்டியுள்ளது.

இது தொடர்பாக நாளை அடையாள வேலை நிறுத்தம் ஒன்றை மேற்கொள்ளவும் அச்சங்கம் முஸ்தீபு செய்துள்ளது. இது தொடர்பாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்துக்கு நேற்று அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் யாழ். கிளை கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது. அந்தக் கடிதத்தில்தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

வடக்கு—கிழக்குமாகாணத்தில் கடமையாற்றும் அரசவைத்திய அதிகாரிகளுள் வடக்கு—கிழக்கு மாகாணத்திற்கு வெளியே நிரந்தரவசிப்பிடங்களைக் கொண்டவைத்திய அதிகாரிகளுக்கு மட்டும் 2000ஆம் ஆண்டு முழுமைக்குமான விசேட மேலதிக கொடுப்பனவுகளை சுகாதார அமைச்சு வழங்கியுள்ளது.

இங்கு வைத்திய அதிகாரிகள்,வைத்திய நிபுணர்களுக்கு ஏற்பட்டுள்ள பாரிய பற்றாக்குறையினால் அதிகரித்த வேலைப் பளுவுடன் இங்கு நிலவும் உயிராபத்தான சூழ்நிலை,அதிகரித்த வாழ்க்கைச் செலவு, போக்குவரத்துச் சிரமங்கள் ஆகியவற்றுக்கு மத்தியில் தொடர்ந்தும் கடமையாற்றிக் கொண்டிருக்கும் வடக்கு—கிழக்கு மாகாணத்தைத் தமது சொந்த இடமாகக் கொண்ட அரசவைத்தியர்களுக்கு இவ்விசேட கொடுப்பனவுகள் மறுக்கப்பட்டுள்ளமை சுகாதார அமைச்சின் பாரபட்சமான நடவடிக்கை என நாம் கருதுகின்றோம்.

சுகாதார அமைச்சின் இந்த பாரபட்சமான நடவடிக்கையை கண்டித்தும் மேற்படி விசேட கொடுப்பனவுகளை எந்தவித பாரபட்சமுமின்றி வடக்கு — கிழக்கு மாகாணத்தில் கடமையாற்றும் அரசவைத்தியர்கள் அனைவருக்கும் உடனடியாக வழங்க வேண்டும் என வலியுறுத்தியும் நாம் 29 ஆம் திகதியன்று ஒருநாள் அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளோம்.

சுகாதார அமைச்சு எமது கோரிக்கைக்கு உடனடியாக உரிய சாதகமான பதிலளிக்காவிட்டால் நாம் மேற்கொண்டு தொடர்ச்சியான தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டிய நிலை ஏற்படும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றோம் —என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

வீடுகளைப் பார்வையிடுவதற்காக கொழும்புத்துறை சென்ற மக்கள் படையினரால்திருப்பிவிடப்பட்டனர்

அரியாலை, ஜன 28

கொழும்புத்துறை மேற்குப் பகுதிக்கு வீடுகளைப் பார்க்கச் சென்ற மக்கள் இராணுவத்தினரால் திருப்பி அனுப்பப்பட்டனர்.

வளன்புரம், துண்டி,சுவாமியார் வீதி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் நேற்று சனிக்கிழமை காலை வீடுகளுக்குச் சென்றிருந்த சமயம் அங்கு வந்த படையினர் உடனடியாக அங்கிருந்து செல்லுமாறு பணித்தனர்.

வீடுகளைப் பார்வையிட வருவது போன்று உட்புகும் விஷமிகள் சிலர் பொருள்களைச் சூறையாடி வருகின்றனர். இதனைத் தடுக்கும் முகமாகவே இராணுவத்தினர் அனைத்து பொது மக்களையும் திருப்பியனுப்பியதாகத் தெரிவிக்கப்பட்டது

இதேவேளை மாம்பழம் சந்தியில் உள்ள இராணுவ சிவில் நிர்வாக அலுவலகத்தில் அனுமதி பெற்று வந்தால் மட்டுமே பொருள்களை எடுத்துச் செல்லலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க-17)

சமய சந்நிதிகளில்

காரைநகர், ஜன. 28

காரைநகர் பயிரிக்கூடல் சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் வருடாந்த மகோற்சவம் நாளை மறுதினம்செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்து நாள்கள் நடைபெற உள்ளது.

அடுத்த மாதம் 7ஆம்திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் 8ஆம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெற உள்ளன. (ஐ-73)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜன. 28

ஏழாலை தெற்கு, வசந்தபுரம் நாகபூஷணி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த அலங்காரஉற்சவம்நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து பத்து நாள்கள் நடைபெறவுள்ளது

எதிர்வரும் 7 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும். (ஐ-10)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜன. 28

சங்கானை கிழக்கு நிகரை அருள்மிகு ஞானவைரவர் ஆலய சம்புரோக்ஷணபஞ்சகுண்ட மகாகும்பாபிஷேகம் நாளை திங்கட்கிழமை காலை 6.[illegible] மணிக்கும் 8 மணிக்கும் இடையில் நடைபெறவுள்ளது.

இன்று காலை 7 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை எண்ணெய்க் காப்பு சாத்துதல் இடம்பெறும். (உ-7)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜன. 28

அளவெட்டி கணேஸ்வரக் குருக்கள் கிணற்றடிப் பிள்ளையார் ஆலய மகாகும்பாபிஷேகம் நாளை காலை 7.30 மணிக்கும் 8.06 மணிக்கும் இடையில் நடைபெறவுள்ளது.

நேற்று ஆரம்பமான எண்ணெய்க காப்பு சாத்தும் நிகழ்வு இன்று நண்பகல் 12 மணிவரை இடம்பெறும். (உ-7)

★ ★ ★

சாவகச்சேரி, ஜன. 28

வடமராட்சி கொற்றாவத்தை—பொலிகண்டி கண்டுப்புளியடி. வைரவர் தேவஸ்தானத்தின் மகாகும்பாபிஷேகம் நாளை திங்கட்கிழமை காலை 7.30 மணி தொடக்கம் 8 மணி வரையுள்ள சுப முகூர்த்தத்தில் நடைபெறவுள்ளது.

எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு இன்று ஞாயிறு காலை 7 மணி தொடக்கம் மாலை 5 வரை நடைபெறும். கும்பாபிஷேகத்தை ஆலய பிரதம குருக்கள் சிவஸ்ரீ—ச. வைத்தியநாதக் குருக்களும், சிவஸ்ரீ கி. வாசுதேவக் குருக்களும் நடத்துவார்கள். (க-31)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜன, 28

கொக்குவில் முத்தமிழைக் [illegible]ந்தசுவாமி ஆலய கும்பாபிஷேக தினமும், மணவாளக் கோல விழாவும் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை நண்பகல் 11 மணி முதல் நடைபெறவுள்ளன.

மாலை 5 மணிக்கு சுவாமி வீதி வலம் வரும் நிகழ்வும் இடம்பெறும். (உ-7)

நாளை

நாள் 16

திங்கட்கிழமை

திதி: பஞ்சமி

பின் இரவு 3.07 வரை.

நட்சத்திரம்: உத்தராட்டாதி பின் இரவு 4.03 வரை.

சுபநேரம்: 12.36—2.06

மாகாலம்: 8.06 —9.36

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

உதயவாக்கு

துன்பப்படுகிறவன்தான் வாழ்க்கையில் வெற்றி பெறுகின்றான்.

புலோலி கூ.சங்கப் பணியாளருக்கு அதிகரித்த புதிய சம்பளத்திட்டம்

பருத்தித்துறை, ஜன. 28

புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் இம் மாதம் முதல் பணியாளர்களுக்கு 31 — 99 சுற்றறிக்கைக்கு அமைய அதிகரித்த புதிய சம்பளத்தை வழங்கியுள்ளது.

புதிய அதிகரித்த சம்பளத் திட்டத்தின் அடிப்படையில் கடந்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் பணியாளர்களுக்கு சம்பளத்தை வழங்குமாறு கூட்டுறவு உதவி ஆணையாளர் கே. சண்முகநாதன் அங்கீகாரம் வழங்கியுள்ளார்.

இதற்கமைய கடந்த ஆண்டுக்கான சம்பள நிலுவையை சங்கத்தின் இலாபத்தைப் பொறுத்து கட்டம் கட்டமாக வழங்குவதென சங்க நெறியாளர் குழு தீர்மானித்துள்ளது

அத்துடன் அரசினால் அறிவிக்கப்பட்ட வாழ்க்கைச் செலவுப்படியான நானூறு ரூபாவையும் சங்க இலாபத்தைப் பொறுத்து வழங்குவதென இந்தக் குழு கூட்டுறவுப் பணியாளர் தொழிற்சங்கத்துக்கு அறிவித்துள்ளது. (ஐ 178-173)

உரும்பிராய் பகுதி விவசாயிகள் கவலை

உரும்பிராய், ஜன 28

மழை,கடும் காற்று காரணமாக அழிந்த வாழைகளுக்கு நிவாரணம் வழங்க உரும்பிராய்ப் பகுதியில் எவ்வித ஏற்பாடும் செய்யப்படவில்லை.

ஏனைய பிரதேசங்களில் அழிவு சம்பந்தமான கணக்கெடுப்பு இடம்பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது!

இதனால் விவசாயிகள் மிகுந்த வேதனை அடைந்துள்ளனர். (க-154)

கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜன. 28

ஜி.சி.ஈ. உயர்தர புள்ளிகளின் அடிப்படையில் தமிழ் மொழி மூல ஆசிரியர்களை நியமிப்பதற்கான நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றி நியமனம் கிடைக்காதவர்களுக்கான கலந்துரையாடல் இன்று ஞாயிறு முற்பகல் 11 மணிக்கு ஆரியகுளம் சந்தியிலுள்ள திருட்டன் கல்வி நிலையத்தில் நடைபெறும். ஐ.173)

எம்.பிக்கள் வாரத்தில் 2 நாள்கள் தம் தொகுதியில் இருக்கவேண்டும்

சு.கவினருக்கு ஜனாதிபதி பணிப்பு

கொழும்பு ஜன. 28

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் வாரத்தில் இரண்டு நாள்கள் தமது தேர்தல் தொகுதிகளில் தங்கியிருந்து பொதுமக்களின் அன்றாட பிரச்சினைகளுக்கு உடனுக்குடன் பரிகாரம் காணவேண்டும்.

—இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா உத்தரவிட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைப்பாளர்களுக்கான கூட்டம் நேற்று மூன்றாவது நாளாக நடைபெற்றது அதில் கூட்டத்திலேயே ஜனாதிபதி இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

நாட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் யுத்தம் தொடர்பாகவும், வாழ்க்கைச் செலவீனம் உயர்ந்திருப்பது தொடர்பாகவும் தற்போதைய நிலைவரத்தை மக்களுக்கு விளக்கிக்கூற வேண்டிய பொறுப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு உண்டு என்றும்—

நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் நாடாளுமன்ற கூட்டங்களில் தவறாது கலந்து கொள்ளவேண்டும் என்றும் —

இக்கூட்டத்தில் ஜனாதிபதி வலியுறுத்திக் கூறினார் எனத் தெரிவிக்கப்பட்டது.

மருந்துகள் கூடிய விலையில் விற்பனை

செயலக அதிகாரிகள் அசட்டை

5 வருடங்களாகத் தொடரும் நிலை குறித்து மக்கள் அதிருப்தி

யாழ்ப்பாணம், ஜன. 28

காலாவதியான மற்றும் அதிகரித்த விலைகளில் மருந்து வகைகள் யாழ்ப்பாணத்திலுள்ள மருந்து விற்பனை நிலையங்களில் விற்பனை செய்யப்பட்டு வருவதாக பரவலாக புகார் கூறப்படுகிறது. ஆனால் யாழ். செயலக விலைக்கட்டுப்பாட்டுத் திணைக்களம் இது குறித்து கவனம் எடுப்பதாகத் தெரியவில்லை. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கண்டும் காணாதது போல் கடந்த 5 வருடங்களாக நடந்து வருகின்றனர் என்று பாவனையாளர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மருந்து வகைகள் அதிகரித்த விலைகளில் விற்பனை செய்யப்படுகின்றன என்றும் காலாவதியான மருந்துகள் புதிய பைக்கெட்டுகளில் போடப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன என்றும் பாவனையாளர்கள் முறையிடுகின்றனர்.

இந்த விற்பனை நிலையங்களில் பரிசோதனைகள் எதுவும் நடத்தப்படாத நிலையில் நோயாளர்கள் தொடர்ந்து பாதிக்கப்படுகின்றனர்.

அண்மையில் யாழ் நகரிலுள்ள மருந்து விற்பனை நிலையம் ஒன்றில் அதிகரித்த விலையில் மருந்துப்பொருளை பெற்றுக் கொண்ட சுகாதாரத் திணைக்கள அதிகாரி ஒருவர் பொலீஸ் நிலையத்திற்கு புகார் செய்யச் சென்றார்.

பொலீஸார் விலைக் கட்டுப்பாட்டுத் திணைக்கள அதிகாரிகள் மூலம் இந்த முறைப்பாட்டினை செய்யுமாறு கூறி அவரைத் திருப்பி விட்டுள்ளனர்.

இதேவேளை—

மருந்துப் பொருள்களின் விலைகளைக் கட்டுப்படுத்துவது தொடர்பான கூட்டம் ஒன்று அண்மையில் யாழ். செயலகத்தில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் செயலகம் மற்றும் சுகாதாரத் திணைக்கள அதிகாரிகள் கலந்து கொண்ட போதிலும் விலைக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தைச் சேர்ந்த எவரும் கலந்து கொள்ள வில்லையாம்.

மருந்து விற்பனை நிலையங்களைப் பரிசோதனை செய்து உரிய நடவடிக்கைகள் எடுப்பதற்கு விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிகளை ஈடுபடுத்துவதற்கு யாழ். செயலக அதிகாரிகள் அக்கறை காட்டுவதாக இல்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

சம்பந்தப்பட்ட அதிகாரிகளே இவ்வாறான போக்கில் இருக்கும் போது குறிப்பிட்ட வர்த்தகர்களின் அதிக லாபம் பெறும் செயலை எவ்வாறு சட்டுப்படுத்த முடியும் என்று சுகாதார திணைக்கள அதிகாரி ஒருவர் கேள்வி எழுப்பினார். (க-5)

நன்றி நவிலல்

நீர்வேலி வாய்க்காற் தரவைப்பிள்ளையார் கோயில் பிரதமகுருக்கள் ஆ. சந்திரசேகரக் குருக்கள் தம்பதியினரின்
பீமரத சாந்தி பவளவிழா

வைதீகக் கிரியைகளை நடத்திவைத்த மயிலணி பிரம்மஸ்ரீ சோமாஸ்கந்தக் குருக்கள், வேதபாராயணம் நடத்திய தர்மசாஸ்தா குருகுல அதிபர் பிரம்மஸ்ரீ தா. மகாதேவக்குருக்கள், மாணவர்கள் விழாவிலே தக்ஷிணாமூர்த்தி சகஸ்ரநாம நூலை வெளியிட்டு வைத்த பேராசிரியர் கலாநிதி பிரம்மஸ்ரீ கோபால கிருஷ்ண ஐயர் (தலைவர் — இந்து நாகரிகத்துறை யாழ். பல்கலைக்கழகம் நியந்த்ரீ) மற்றும் வாழ்த்துரை, வாழ்த்துமடல் வழங்கிய சிவாச்சாரியார்கள், அந்தணப் பெருமக்கள், பந்துக்கள், நல்லை ஆதீன முதல்வர், விழாவுக்கு ஆதரவு தந்த தெல்லிப்பழை துர்க்கை அம்மன் தேவஸ்தான தலைவர், பிரபல தேவஸ்தானங்களுக்கும், மங்கள வாத்தியம் இசைத்தவர்களுக்கும் இன்னும் பல வழிகளிலும் முன்வந்து வைபவத்தைச் சிறப்புற நடத்தி முடிக்க ஒத்துழைத்த அனைவருக்கும் குடும்பசார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

—குருக்கள் குடும்பத்தினர்.

நீர்வேலி வடக்கு.

(83503)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற
ஆணையாளராகக் கடமையாற்றிய
உயர்திரு. வே. பொ. பாலசிங்கம்

வடக்கு — கிழக்கு உள்ளூராட்சி ஆணையாளராகப் பதவி உயர்வு பெற்று திருகோணமலையில் பதவி ஏற்றிருப்பதைப் பாராட்டுவதுடன் அவர் மேன்மேலும் பல பதவி உயர்வுகள் பெற்று நீடூழி வாழவேண்டுமென நல்லைக்குமரன் தாள்பணிந்து வணங்குகிறோம்.

பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள்
யாழ். மாநகராட்சி மன்றம்.

(83446)

31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 04 — 01 — 1932

உதிர்வு 29 — 12 — 2000

அமரர் இளையதம்பி தம்பு
(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

எம் குடும்ப விளக்கே! எம்மை விட்டுச் சென்று ஒருமாதம் கடந்தாலும் உங்கள் நினைவுகள் என்றும் மறையாது.

பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

"பழமுதிர்ச் சோலை"
மில் ஒழுங்கை,
ஏழாலை மேற்கு, ஏழாலை.

(83368)

பயிற்சி வகுப்புக்கள் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜன. 28

யாழ். கிரிக்செட் மத்தியஸ்தர்கள் சங்கம் புதிய மத்தியஸ்தர்களை உள்வாங்கும் பொருட்டு பிரதி ஞாயிறு தோறும் நடத்தி வந்த பயிற்சி வகுப்புக்கள், மெய்வன்மை பரீட்சை, உதைபந்தாட்டப் பரீட்சை போன்ற பரீட்சைகள் நடைபெறுவதை யொட்டி மேலும் இரு கிழமைகளுக்கு ஒத்திவைக்கப்பட்டு உள்ளது. இந்தப்பயிற்சி வகுப்புக்கள் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 11 ஆம் திகதி முதல் வழமை போன்று நடைபெறும் என்று மத்தியஸ்தர்கள் சங்கச் செயலாளர் எஸ் சிறீகாந்தன் அறிவித்துள்ளார்.

இதேவேளை—

19 வயதுக்குட்பட்ட பாடசாலைகளுக்கு இடையிலான கிரிக்கெட் போட்டிகள் ஆரம்பமாகியுள்ளதால், இப்போட்டிகளுக்கு மத்தியஸ்தர்கள் நியமனங்களை மேற்கொள்ளும் முகமாக சகல கிரிக்கெட் மத்தியஸ்தர்களையும் பிரதி ஞாயிறு தோறும் காலை 10 30 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரிக்கு சமுகம்கொடுக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது. (ஐ)

வெளிமாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி பெற்றோர் விவரம்

யாழ்ப்பாணம், ஜன. 28

இம் மாதம் 26 ஆம் திகதி வரையும் வெளியிடங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டோரின் இலக்கங்கள் பிரதேச செயலர் ரீதியாக வருமாறு,

யாழ்ப்பாணம்

(144598ஏ), (173521ஏ), (173562ஏ), (173562பி), (173562சி), (175240ஏ), (175240பி), (175450ஏ), (177501ஏ), (178165ஏ), (178165பி), (178169ஏ), (178294ஏ), (178303ஏ), (178303பி), (178360ஏ), (178365ஏ), (178381ஏ), (178381பி), (178410ஏ), (178410பி), (178504ஏ), (178505ஏ), (179837ஏ), (179837பி), (179868ஏ), (179872ஏ), (179872பி), (179872சி), (179872டி), (179872ஈ), (179898ஏ), (179929ஏ), (179929பி), (179929சி), (179929டி), (179929ஈ), (179933ஏ), (179940ஏ), (179940பி), (179940சி), (179940டி), (179940ஈ), (179971ஏ), (179971பி), (179971சி), (180015ஏ), (180028ஏ), (180070ஏ), (180080ஏ), (180090ஏ), (180140ஏ), (180141ஏ).

கோப்பாய்

(159687ஏ), (159687பி), (159687சி), (159687டி), (159687ஈ), (168252ஏ), (168252பி), (168252சி), (168252டி), (168346ஏ), (168346பி), (168346சி), (168346டி), (168378ஏ), (168378பி), (168378சி), (168386ஏ), (168386பி), (168386சி), (168386டி), (168386ஈ), (168386எவ்), (168389ஏ), (168400ஏ), (168400பி), (168949ஏ), (168949பி), (168949சி), (173220ஏ), (173227ஏ), (173227பி), (173227சி), (173227டி), (173252ஏ), [173284ஏ], [173285ஏ], [173285பி], [173285சி], [173285டி], [173285ஈ], [173300ஏ], [113300பி[, [173301ஏ], [173301பி], [173303ஏ]. [173313பி], [173327]ஏ], [173327பி]. [173342ஏ], [17334 பி], [173377ஏ].]173377பி], [173377சி]. [173399ஏ], [173399பி], [173399சி], [173399டி]. [137400ஏ]. [173400பி], [173400சி], [173407ஏ]. [173407பி], [177339ஏ]. [177340ஏ], [177340பி].

நல்லூர்

(170030ஏ), (173455ஏ), (173455பி), (177475ஏ), (178056ஏ), (178056பி), (178056சி), (178447ஏ), (178447பி), (179925ஏ), (180000ஏ), (180078ஏ), (176963ஏ), (176963பி), (176963சி).

தெல்லிப்பழை

(179312ஏ), (179312பி).

உடுவில்

(178764ஏ), (178764பி), (178821ஏ), (178838ஏ), (178891ஏ), (179047ஏ), (179047பி), (179072ஏ), (179079ஏ).

(ஐ-10)

மந்திகை ஆஸ்பத்திரியில் மருந்துகளுக்குத் தட்டுப்பாடு

நெல்லியடி, ஜன. 28

மந்திகை மருத்துவமனை வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெறும் நோயாளர்கள் எண்ணிக்கை அதிகரித்துள்ள அதேசமயம் இங்கு சகலவிதமான மருந்து வகைகளுக்கும் தட்டுப்பாடு நிலவுகின்றது.

ஆஸ்துமா நோய்க்குரிய மருந்து வகை, இரத்த அழுத்த நோய்க்குரிய மருந்து வகை என்பவற்றுடன் விசர் நாய்க்கடிக்கு உரிய ஏ. ஆர். வி. ஊசி; பாம்புக்கடிக்கான ஊசி மருந்து, ஏற்பு ஊசி, பென்சிலின் ஊசி போன்றவைக்கும் புண்ணுக்குப் பூசும் மருந்துக்கும் தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

இதனால் இங்கு சிகிச்சை பெற வரும் நோயாளிகள், டாக்டர்களின் குறிப்புத் துண்டுகளை வாங்கிக் கொண்டு தனியார் வர்த்தகர்களை நாடவேண்டியுள்ளது.

(க-109)

கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜன. 28

பருத்தித்துறை தும்பளை நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன் கோயில் மகா கும்பாபிஷேகம் நாளை திங்கட்கிழமை நடைபெறும்

இதற்கான ஆரம்ப கிரியைகள் கடந்த 15 ஆம் திகதி ஆரம்பமாகியுள்ளன. நாளை ஞாயிறு காலை 7 மணிக்கும் பிற்பகல் 3 மணிக்கும் பக்தர்கள் எண்ணெய்க்காப்பு சாத்துதல் நடைபெறும்.

(ஐ-15)

படையினரின் அனுமதியின்றி கைதடி வடக்கில் மக்கள் குடியமர்வு

கைதடிப் பகுதியில் படையினர் மக்களை அனுமதிக்காத நவபுரம், கைதடி வடக்கு ஆகிய பகுதிகளில் 200 க்கும மேற்பட்ட குடும்பங்கள் மீள குடியேறியுள்ளதாக அங்கு சென்று திரும்பியவர்கள் தெரிவித்தனர்.

இங்கு சேதமடையாமல் உள்ள வீடுகளில் தங்கியுள்ள இவர்கள் மீதமாகக் காணப்படும் பொருள்களைப் பாதுகாக்கும் நோக்கத்துடனும் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காகவும் அங்கு தங்கி உள்ளதாகத் தெரிவித்தனர்.

இதேவேளை நுணாவில் சந்தி வரை சென்று திரும்பியவர்கள் அங்குள்ள வீடுகள் சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றன என்றும் வீடுகளில் பொருள்கள் ஏதும் இல்லை என்றும் கூறினர்.

[க-117]

மாதாந்த உதவிப்பணம்

வலி. கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப்பணம் மற்றும் புற்றுநோய், தொழுநோய் ஆகியவற்றுக்கான கொடுப்பனவுகளைப் பெறுவோர் ஜனவரி மாதக் கொடுப்பனவுகளை தமக்கு ஒதுக்கப்பட்ட தபாலகங்களில் நாளை திங்கட்கிழமை தொடக்கம் பெற்றுக்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தபால் சேவையில் ஏற்பட்ட தாமதத்தினால் வழமையான கால அட்டவணைப்படி கொடுப்பனவுகளை வழங்க முடியவில்லை எனவும் பெப்ரவரி மாதத்திலிருந்து கால அட்டவணைப்படி வழங்கப்படும் என்றும் பிரதேச செயலர் தெரிவித்துள்ளார்.

[ஐ-10]

அன்பளிப்பு

நெல்லியடி, ஜன. 28

மந்திகை மருத்துவமனையில் உள்ள மனநோய் வார்ட் நோயாளிகளின் நலன்கருதி, இலங்கை செஞ்சிலுவைச்சங்க பருத்தித்துறை கிளையினர் பிளாஸ்ரிக் கோப்பைகள், குளிர் பாத்திரங்கள் போன்றவற்றை அன்பளிப்புச் செய்துள்ளனர். (க-109)

போர்முனையில் இருந்த கவனத்தை ஈர்த்துவிட்ட பொருளாதாரச் சிக்கல்

வெளிநாட்டு நாணயமாற்று வீதங்களைத் தீர்மானிக்கும் பொறுப்பில் இருந்து இலங்கை மத்திய வங்கி திடீரென விலகிக் கொண்டதை அடுத்து இலங்கை ரூபாவின் பெறுமதி மளமளவென வீழ்ச்சி கண்டுவருகிறது. இதன் பாதிப்பு நாட்டின் பட்டி தொட்டி எங்கும் எதிரொலிக்கத் தொடங்கி உள்ள இந்த வேளையில் ரூபாவை சுதந்திரமாக மிதக்க விடுவதன் சாதக பாதகங்களை விளக்குகிறது இக் கட்டுரை.

பிரபல பொருளியல் ஆசிரியர் வரைந்தஇக் கட்டுரையின் முதற் பகுதி இன்று பிரசுரமாகின்றது.

வடக்கு-கிழக்கில் இடம்பெறும் பாரிய யுத்தத்தின் மத்தியில் பொருளாதார யுத்தம் ஒன்றுக்கும் முகங்கொடுக்க வேண்டிய ஓர் இக்கட்டான நிலைக்கு இலங்கை அரசு தற்போது தள்ளப்பட்டுள்ளது.

ஆனையிறவை நோக்கிப் படைகளை நகர்த்த முனைந்து நெருக்கடிகளை எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் அதேநேரம், ரூபாவை சுதந்திரமாகத் தளம்பவிட்டதன் மூலம் டொலருக்கெதிரான ரூபாவின் பெறுமதித் தேய்வைத் தடுத்து நிறுத்துவதற்கு பொருளாதார ரீதியில் மூர்க்கத்தனமாக மோதவேண்டியுள்ளது.

இலங்கையில் 1977 நவம்பர் 15 நள்ளிரவு முதல் 2001 ஜனவரி 23 வரை மத்திய வங்கியினால் நாணய மாற்றுவீதம் முன்கூட்டியே அறிவிக்கப்பட்டு வந்தது. ஜனவரி 23 இல் இருந்து அந்தந்த வீதங்களை அறிவிப்பதிலிருந்து விலகியிருப்பதாக மத்திய வங்கி அறிவித்துள்ள நிலையில் டொலருக்கெதிராக ரூபாவின் பெறுமதியில் திடீர் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

17 ஆண்டுகளாக தொடர்ந்த யுத்தத்தின் விளைவாகவே இத்தாக்குதல் பொருளாதாரத்தின் மேல் விழுந்துள்ளது. இதுபற்றி இன்று சகல தரப்பிலும் பலத்த அச்சவுணர்வு காணப்படுகின்றது. எனவே இவை பற்றி விளங்கிக் கொள்ளும் வகையில் இக் கட்டுரையில்

. i நாணயமாற்றுவீதம்
ii நாணய மாற்றுவீத முறைகள்
iii ரூபாவைச் சுதந்திரமாக மிதக்க விட்டதன் பின்னணி
iv அதன் சாதக விளைவுகள்
v அதன் பாதக விளைவுகள்
vi அறைகூவல்கள்

என ஆறு உப தலைப்புகளின் கீழ் ஆராயப்படுகின்றது.

i நாணய மாற்றுவீதம்

ஒரு நாட்டு நாணயத்தை மற்றொரு நாட்டு நாணயத்திற்காகப் பரிமாற்றிக்கொள்ளும் வீதமே நாணய மாற்றுவீதமாகும். அதாவது ஒரு நாட்டு நாணயத்தின் விலையினை இன்னொரு நாட்டு நாணயத்தின் வடிவில் கூறுவதே நாணயமாற்று வீதமாகும். எனவே உள்நாட்டுப் பண அலகொன்றின் பெறுமதியை வெளிநாட்டுப் பணத்தின் மூலம் காட்டுவது அல்லது வெளிநாட்டுப் பண அலகொன்றின் பெறுமதியை உள்நாட்டுப் பணத்தின் மூலம் காட்டுவது நாணயமாற்று வீதமாகும். உதாரணமாக ஓர் அமெரிக்க டொலர் = 98 இலங்கை ரூபா

அல்லது 1 ரூபா = 1/98 அமெரிக்க டொலர்.

ii நாணய மாற்றுவீத முறைகள்

உலக நாடுகளில் பின்வரும்

வே.கருணாகரன்

மூன்று வகையான நாணயமாற்றுவீத முறைகள் பின்பற்றப்படுகின்றன.

1) நிலையான நாணயமாற்றுவீதம் (Fixied Exchange Rate)

2) சுதந்திரமாக மிதக்கும் நாணயமாற்றுவீதம் (Freely - Floating Exchange Rate)

3) முகாமை செய்யப்பட்ட நாணயமாற்றுவீதம் (Managed Floating Exchange Rate)

ஒரு நாட்டின் உள்நாட்டு நாணயம் வெளி நாணயத்திற்குப் பரிமாற்றம் செய்யப்படும் விகிதத்தை நாணய அதிகாரிகள் (மத்திய வங்கி) எவ்வித மாற்றமும் இன்றிப் பேணி வருவது நிலையான நாணய மாற்று வீதமாகும். இம்முறையில் நாணய மாற்று வீதம் உறுதியாக இருக்கும். 1977 நவம்பர் வரை இத்தகைய முறையே இலங்கையில் இருந்தது. நாணய அதிகாரிகளின் உத்தியோகபூர்வ தலையீடுகளின்றி வெளிநாட்டு நாணய

ரூபாவைச் சுதந்திரமாக மிதக்க விடுவது பாதிப்பா?

மாற்றுச் சந்தையில் (Foreign Exchange Market) வெளிநாட்டு நாணயங்களுக்கான கேள்வி, நிரம்பல் காரணிகளின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படும் நாணய மாற்றுவீதம் சுதந்திரமாக மிதக்கும் நாணயமாற்று வீதமாகும். இது பொருள்சந்தையில் கேள்வி நிரம்பலின் அடிப்படையில் விலை நிர்ணயிக்கப்படுவதைப் போன்றதோர் முறையாகும். பொருள்கள் சேவைகளின் இறக்குமதி, மூலதனக் கொடுப்பனவுகள் என்பவற்றின் மூலம் வெளிநாட்டு நாணயங்களுக்கான கேள்வியும், பொருள்கள் சேவைகளின் ஏற்றுமதி, வெளிநாட்டு முதலீடுகள், வெளிநாட்டுக்கடன் உதவிகள் என்பவற்றின் மூலம் வெளிநாட்டு நாணயங்களின் நிரம்பலும் ஏற்படுகின்றன. இம்முறையில் நாணய மாற்று வீதம் பெருமளவு தளம்பலடையும். இலங்கையில் தற்போது இம்முறையே அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

நாணய அதிகாரிகளின் கட்டுப்பாட்டின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் மிதக்கும் நாணயமாற்றுவீத முறையே முகாமை செய்யப்பட்ட மிதக்கும் நாணய மாற்றுவீதமாகும். வெளிநாட்டுச் செலாவணிக்கான கேள்வியையும், நிரம்பலையும் கவனத்திற் கொண்டு இந்நாணய மாற்றுவீத முறையில் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன. குறிப்பிட்ட நாட்டு நாணயத்தின் பெறுமதி அளவுக்கு மீறித் தேய்வடைகின்றது எனக் கருதும் போது மத்திய வங்கி தன்னிடமுள்ள வெளிநாட்டு ஒதுக்குகளை விற்பனை செய்து குறிப்பிட்ட நாட்டு நாணயங்களைக் கொள்வனவு செய்வதன் மூலம் நாணயத்தின் பெறுமதித் தேய்வு கட்டுப்படுத்தப்படும். மாறாக குறிப்பிட்ட நாட்டு நாணயத்தின் பெறுமதி உயர்கின்றது எனக் கருதும்போது மத்திய வங்கி குறிப்பிட்ட நாட்டு நாணயங்களை விற்பனை செய்து வெளிநாட்டு நாணயங்களைக கொள்வனவு செய்வதன் மூலம் நாணயத்தின் பெறுமதி உயர்வு கட்டுப்படுத்தப்படும்.

சில நாடுகள் குறித்த சில நாணய வகைகள் அடிப்படையாகக் கொண்டு நாணயமாற்று வீதத்தினைத் தீர்மானிக்கின்றன. வெளிநாட்டுக் கொடுக்கல் வாங்கல்களின் போது அந்த நாண்யங்கள் வகிக்கும் முக்கியத்துவத்துக்கேற்ப நிறையிடப்படுவதன் மூலம் இது மேற்கொள்ளப்படுகின்றது. நாணய வகைகளிடையே ஒவ்வொரு நாணயக் கூடையிலும் (BASKET) உள்ளடக்கப்படும் வெளிநாட்டு நாணயங்களின் அளவுகள் மாற்றமடையும் போது அவ்வெளிநாட்டு நாணயத்தின் பெறுமதியும் அதற்கேற்ப மாற்றமடையும். இவ்வகையில் முகாமை செய்யப்பட்ட நாணய மாற்றுவீதம் மிதக்கும் நாணயமாற்று வீதத்தை விடக் குறைவாகவே தளம்பலடையும். 1977-2001 ஜனவரி 23 வரை இலங்கையில் இம்முறையே பின்பற்றப்பட்டது.

III பின்னணி

இலங்கையில் 1977 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட தாராள பொருளாதாரக் கொள்கையுடன் இணைந்த வகையில் முகாமை செய்யப்பட்ட மிதக்கும் நாணய மாற்றுவீத முறை அறிமுகம் செய்யப்பட்டதிலிருந்து ரூபாவின் நாணய மாற்றுப் பெறுமதி சங்கிலித் தொடர் போல் தேய்வடைந்தே வந்துள்ளது. 17 ஆண்டுகளாகத் தொடரும் வடக்கு - கிழக்குப் போர்ச் செலவுகளும் அதனோடு இணைந்த வகையில் நலிவடைந்துள்ள உள்நாட்டுப் பொருளாதாரப் பின்னணி உலக சந்தையில் பெற்றோலியப் பொருள்களின் விலையுயர்வு என்பவற்றின் விளைவாக ரூபாவின் பெறுமதி சக்கையாகப் பிழியப்பட்டுள்ளது.

வாழ்க்கையைச் சீராகக் கொண்டு நடத்த செலவுக்கேற்ற வருமானம் பெற வேண்டும். இல்லையேல் பிரச்சினைகள் தோன்றும். அது போன்ற நிலையே இலங்கைக்கும் ஏற்பட்டுள்ளது. போர்ச் செலவினங்கள், எண்ணெய் விலை உயர்வு போன்றவற்றால் வெளிநாட்டுக் கொடுப்பனவுகள அதிகரித்துள்ள போதும், வெளிநாட்டு வருமானங்கள் அதிகரிக்கவில்லை. இதன் காரணமாகவே இத்தகைய நாணய நெருக்கடி பொருளாதார நெருக்கடி தோன்றியுள்ளது.

உலக வங்கி (WB) சர்வதேச நாணய நிதியம் (IMF) போன்றவற்றிடம் கையேந்தி நிற்கும் அரசானது அவற்றின் நிபந்தனைகளுக்குட்பட்டாலே உதவிகளைப் பெறமுடியும். இன்றுள்ள நிலையில் உதவிகள் பெறாவிட்டால் பாரிய பொருளாதார நெருக்கடியை அரசு எதிர்கொள்ள வேண்டியிருக்கும். எனவே அவற்றின் வழிகாட்டுதலை ஏற்று வெளிநாட்டு நாணய மாற்றுச் சந்தையை சுதந்திரமாக இயங்க விடவேண்டிய நிலை அரசுக்கு ஏற்பட்டுள்ளது. பாரிஸில் நடந்த உதவி வழங்கும் நாடுகளின் குழுக்கூட்டத்திற்கு முன்னராக கடந்த 2000 ஆம் ஆண்டு ஜுன் மாதம் முதல் ஒவ்வொரு தினத்திலும் டொலரினது வாங்கல் விலைக்கும் விற்றல் விலைக்கும் இடையிலான வித்தியாசத்தை விரிவுபடுத்தியதன் மூலமாக அந்நிய நாணயமாற்றுச் சந்தை மேலும் கூடுதலான அளவிற்குச் சுதந்திரமாகச் செயற்பட அனுமதிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறெனினும் சந்தைநிலை வரங்களின் அடிப்படைகளுக்கு (Fundamentals in the market) முரணான வகையில் ரூபாவின் பெறுமதி தொடர்ச்சியாகக் குறையும் என்ற எதிர்பார்ப்புக்களைச் சந்தைச் சக்திகள் கொண்டிருக்கக்கூடிய ஒரு நிலையை இது ஏற்படுத்தியதனால் நாணயமாற்று வீதத்தை உறுதியாக வைத்திருக்க உள்ளூர் வட்டிவீதங்களை அதிகரிக்க வேண்டிய அவசியம் ஏற்படுவது அவதானிக்கப்பட்டது.

இதன் விளைவாக மத்திய வங்கி 2001 ஜனவரி 23 இலிருந்து டொலரின் வாங்கல் மற்றும் விற்றல் விலைகளை முன்கூட்டியே அறிவிப்பதைத் தவிர்த்துக் கொண்டதுடன், சந்தையில் டொலரினதும் ஏனைய வெளிநாட்டு நாணயங்களதும் விலைகளை வர்த்தக வங்கிகளே நிர்ணயித்துக் கொள்ளவும் அனுமதித்துள்ளது. இதன காரணமாக வெளிநாட்ட நாணய மாற்றுவீதங்களைக் கேள்வி நிரம்பல (Demand and Supply) ஆகிய சந்தைச சக்திகளே (Market Forces) தீர்மானிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

எனினும் நாணயமாற்று வீதத்தைத் தீர்மானிப்பதற்கான இடையீட்டு நாணயமாக (Intervention Currency) தொடர்ந்தும் அமெரிக்க டொலரே விளங்கும் மத்திய வங்கி சந்தை விலையில் அதற்கு அண்மித்ததான விலைகளில் வாங்கலிலும் விற்றலிலும் தீவிரமாகப் பங்கேற்கும். அமெரிக்க டொலரினதும் ஏனைய வெளிநாட்டு நாணயங்களினதும் சந்தை விலைகளை வர்த்தக வங்கிகளே தீர்மா

(8ஆம் பக்கம் பார்க்க)

விடை தேடும் கேள்விகள்

போரைத் தொடர்ந்துகொண்டே போனால், தமிழர் தரப்பில் உயிர், உடைமைகளின் அழிவும் சிதைவும் தொடர்ந்து கொண்டே போகும் என்பதாலும் –

ஏதோ ஒரு கட்டத்திலே போர் நிறுத்தப்பட்டு, பேச்சுவார்த்தை மூலமே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும். என்பதில் அவர்களுக்கு என்றுமே நம்பிக்கை இருந்து வந்துள்ளபடியாலும் –

அந்த ஏதோ ஒரு கட்டம், தானாகவும் கனியாது தடியால் அடித்தும் கனியாது என்பதையும் அவர்கள் உணர்ந்திருந்தபடியாலும் –

தாமாகவே அந்தக் கட்டத்தை உருவாக்கினால் - அதற்கிணங்க, அரசும் போர் நிறுத்தத்தை மேற்கொண்டால் - அமைதியான ஓர் சூழ்நிலையில் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளலாம், பூரணமான தீர்வொன்றைக் காணலாம் என அவர்கள் எதிர்பார்த்தபடியாலும் –

விடுதலைப் புலிகள் ஒருதலைப்பட்சமான போர் நிறுத்தத்தை ஒரு மாத காலத்துக்கு கடைப்பிடிக்கப் போவதாகக் கடந்த ஆண்டு டிசம்பர் 24ல் அறிவித்தார்கள்; அரசு அதை நிராகரித்து விட்ட போதிலும் – தொடர்ந்து தனது போர் நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்திய போதிலும் –

தம்மைக்காக்கும் போரிலே புலிகள் ஈடுபட்டார்களே தவிர, படையினரை வலிந்து சென்று தாக்கும் போரில் ஈடுபடவில்லை!

புலிகள் அறிவித்த போர் நிறுத்தத்தைப் புலிகளே மீறிவிட்டார்கள் என்று அரசு சார்பான ஊடகங்கள் நாளிலும் பொழுதிலும் கூறிக்கொண்டிருந் போதிலும் –

புலிகள் பொறுமையை இழக்கவில்லை; போர் நிறுத்தத்தைக் கைவிடவில்லை!

அதுமட்டுமல்ல –

போர் நிறுத்தத்துக்குரிய கால எல்லை முடிவடைய இருந்த இறுதி நேரத்தில், அதை மேலும் ஒருமாத காலத்துக்கு நீடித்ததுமிருக்கிறார்கள்!

முன்னைய அறிவிப்பையும் பின்னைய நீடிப்பையும் –

தொண்ணூற்றொன்பது வீதமான தமிழர் அமைப்புக்கள் வரவேற்றுள்ளன.

நீதியையும் சமாதானத்தையும் நிலைநாட்டுவதில் நேர்மையான ஆக்கறை கொண்டுள்ள சிங்கள அமைப்புக்கள் வரவேற்றுள்ளன.

பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.க.வரவேற்றுள்ளது.

இந்தியா உள்ளிட்ட சர்வதேச சமூகம் வரவேற்றுள்ளது.

அத்துடன் நிற்காமல், அரசும் போர் நிறுத்தம் செய்து, சமாதானப் பேச்சுவார்த்தைகளில் உடனடியாக ஈடுபட வேண்டும் என நேரடியாகவும் மறைமுகமாகவும் வலியுறுத்தியும் வருகின்றன!

ஆனால் –

சர்வதேச அழுத்தங்களுக்குத் தலைசாய்க்க மாட்டோம் எனக் கூறும் சந்திரிகா அரசு –

புலிகளை நம்ப முடியாது. பலவீனப்பட்டுள்ள அவர்கள், ஆளணியைத் திரட்டித் தங்களைப் பலப்படுத்தவே போர் நிறுத்தத்தைப் பயன்படுத்துவார்கள் என்ற புளித்துப்போன குற்றச்சாட்டை அழுத்தி அழுத்திச் சொல்லிக்கொண்டே -

போர் நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தி வருகின்றது: மீட்டெடுத்த பிரதேசங்களைச் சதுரமைல் கணக்கிலே பெருக்கிக் காட்டிக் கொண்டே - வெற்றிப் பாதையில் வீறு நடைபோடும் அரச படையில் இணைந்து அன்னை பூமியைக் காக்க வேண்டும் என அப்பாவிச் சிங்கள இளைஞர்களுக்கு வேண்டுகோள் விடுக்கின்றது: விளம்பரம் செய்கின்றது!

போர் நிறுத்தம் என்ற பேச்சுக்கே இடமில்லை என 'வெட்டொன்று துண்டு இரண்டாக வெடுவெடுக்கிறார் நாட்டின் பிரதமர்!

போர் மேலும் தீவிரப்படுத்தப்படும் என்கிறார் இராணுவத் தளபதி: அதை ஆமோதிக்கின்றார் அனுரத்த ரத்வத்தை

சமாதானந்தான் எங்கள் இலட்சியம். சண்டையைத் தொடர்ந்து கொண்டே சமாதான முயற்சிகளிலும் ஈடுபடுவோம் என - சமாதானத்துக்கான போர் என்ற தனது 'புரட்சிகரமான தத்துவத்திற்கு' விளக்கமும் வியாக்கியானமும் தருகிறார் நாட்டின் ஜனாதிபதி.

ஒரு கையால் நெய்யைச் சொரிந்து நெருப்பைச் சுவாலிக்கச் செய்து கொண்டே மறுகையால் நீரைத் தெளித்து அதை அணைக்க முயலும் இந்தச் 'சூட்சும'த்தை விளங்கிக் கொள்ள முடியாமல் விசனப்படும் தமிழ் மக்களை வேறும் பல வினாக்கள் விரக்தியின் விளிம்பிற்கே விரட்டிக் கொண்டிருக்கின்றன!

புலிகளைப் பலவீனப்படுத்தினாற் தான் அவர்கள் பேச்சு வார்த்தைக்கு இணங்குவார்கள்: அவர்களைப் பலவீனப்படுத்தவே போர் செய்கின்றோம் என முன்னர் கூறிய அரசு, புலிகள் மிகவும் பலவீனப்பட்டுவிட்டார்கள் என இப்போது கூறுகின்றது. இத்தனைக்கும் சமாதானப் பேச்சு

மணிமண்டபம்

வார்த்தையில் ஈடுபடத் தயார் எனப் புலிகள் கூறிவிட்டார்கள்!

பேச்சுவார்த்தையை உடனே தொடங்காமல், இந்தப் பொன்னான சந்தர்ப்பத்தை அரசு ஏன் மண்ணாக்கிக் கொண்டிருக்கிறது?

புலிகளைத் தடைசெய்யும் படி வெளிநாட்டு அரசுகளை அமைச்சர் கதிர்காமர் ஏன் அடிக்கடி வேண்டுகிறார்?

கோடி கோடியாகக் கொட்டிக் கொடுத்தும் கெஞ்சி மன்றாடிக் கேட்டுப் பெற்றும் அரசு வாங்கிக் குவித்துள்ள நவீன ஆயுதங்களுக்கும், போர் விமானங்களுக்கும், கப்பல்களுக்கும் இலட்சக்கணக்கான இராணுவ வீரர்களுக்கும் சவால் விடும் வகையில் ஒரே ஒரு மாதத்துக்குள் தம்மைப் பலப்படுத்திக் கொள்ளும் வல்லமையும் வசதியும் புலிகளிடம் இருக்கின்றன என அரசு நம்புகின்றதா?

சந்தேகத்தின் பேரில் கைது செய்து, சிறையில் அடைத்து- சிதிரவதைக்கு உள்ளாக்கி- ஒப்புதல் வாக்குமூலத்துக்கு ஒப்பத்தைப் பெறுவது போல்-

போரைத் தீவிரப்படுத்தி, புலிகளின் கொட்டத்தை அடக்கி, தான் முன்னர் தயாரித்த அரைகுறைத் தீர்வுத் திட்டத்துக்கு அவர்களின் கையடையாளத்தைப் பெறுவதுதான் அரசின் நோக்கமா?

விடையைத்தேடி விண்ணில் வலம்வரும் இத்தகைய வினாக்களுக்கு அரசோ அதை ஆதரிப்பவர்களோ விடைகளைக் கொடுத்தால் மக்களுக்கு விளக்கம் உண்டாகும்.

- சித்தன்.

31ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணகம் 23 - 07 - 1918

விண்ணகம் 29 - 12 - 2000

திருமதி மாணிக்கம் பிலிப் ஞானம்மா

"உயிர்ப்பும் உயிரும் நானே
என்னில் விசுவாசம் கொள்பவன்
இறப்பிலும் வாழ்வான்"

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக மல்வம் திருக்குடும்ப ஆலயத்தில் இன்று (28-01-2001) ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கு நடைபெறவிருக்கும் இரங்கல் திருப்பலியிலும் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்:
மா.சிலுவைராசா
கோணாவில்,
கிளிநொச்சி.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள்,
மைத்துனர்கள்.

(83421)

இலவச ஆங்கில பாடநெறி V.P.P மூலம்

சரளமாக ஆங்கிலம் எழுத, பேச, வாசிக்க 90 நாள்களில் பயிற்சி அளிக்கும் தபால் மூல பாடநெறி

SPOKEN ENGLISH

பாடநெறிப் பதிவுக் கட்டணம் மட்டும் அறவிடப்படும்

3 பாடத்தொகுதிகள், இலவச File கவர் இலவச மாணவ அடையாள அட்டை

என்பன உங்கள் வீட்டுக்குக் கிடைத்ததன் பின்னர் பாடநெறிப் பதிவுக் கட்டணத்தைச் செலுத்தலாம்.

மேலதிக விவரங்களுக்கு ரூபா 2/- முத்திரை ஒட்டப்பட்ட நீள் கடித உறையை அனுப்பவும் or தொடர்பு கொள்ளவும்.

J.E.I கல்வி நிலையம்
No.4.a, Dharmasena Mw, Kandy
(c/14951) 074-475121

உ

ஓம் ஸ்ரீ விராட் விஸ்வப்பிரம்மனே நம!

புதுமனைப் புகுவிழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விக்கிரம வருடம் தைத்திங்கள் 15 ஆம் நாள் (28-01-2001) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணிமுதல் 12.30 (ப.நே)மணிவரை வரும் சுபவேளையில் எம்மால் அமைக்கப்பெற்ற

மணிபல்லவம்

என்னும் புது மனையில்

புகுவிழா நடத்த ஸ்ரீ பார்வதி பரமேஸ்வரன் திருவருளால் நிச்சயித்திருப்பதால் அவ்வமயம் தாங்களும் வருகை தந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்
திருமதி கிருஸ்ணசாமி
திரு.கி.சாந்தசற்குணநாதன்
(சற்குணம்)
திருமதி சா.சிவபாக்கியம்

ஸ்ரீநாகபூசணி,
நகை தயாரிப்பாளர்,
671/1, கே.கே.எஸ். வீதி,
பூநாறி மரத்தடி,
யாழ்ப்பாணம்.

(83423)

பரீட்சைகள் ஆரம்பம்

வலி.தெற்கு,ஜன.28

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி தொழில்நுட்ப நிறுவனத்தின் பயிற்சி நெறிகளுக்கான பரீட்சைகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இந்நிறுவனத்தின் அனைத்துத் துறைகளுக்குமான முதலாம் அரையாண்டு, இரண்டாம் அரையாண்டு பரீட்சைகள் நேற்றுமுன்தினம் முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.(ஐ152)

ஒலிப்பதிவு நாடா வெளியீடு

யாழ்ப்பாணம்,ஜன.28

யாழ்.பாண்டியன்தாழ்வு புனித அன்னம்மாள் ஆலய பாடகர் குழாம் தயாரித்த 'பாமலர்கள் சந்தானாள் பாதங்களில்' பாடல் ஒலிப்பதிவு நாடா வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக் கிழமை யாழ். மறைக்கல்வி நிலையத்தில் நடைபெறும். (ஐ-173)

அல்லாரை மாணவர் கவனத்துக்கு!

யாழ்ப்பாணம்,ஜன.28

அல்லாரை அரசினர் தமிழ் வித்தியாலய மாணவர்களுக்கான இலவச சீருடை, இலவச புத்தக விநியோகத்தை மேற்கொள்ளும் பொருட்டு தங்களின் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளுமாறு அதிபர் எஸ்.சிவபாத சுந்தரம் கேட்டுள்ளார். (க)

கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜன.28

ஆசிரியர் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றி இதுவரை நியமனம் பெறாத 96, 97ஆம் ஆண்டுகளில் பட்டம் பெற்ற- பட்டதாரிகளுக்கான கலந்துரையாடல் ஒன்று இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10மணிக்கு கந்தர்மடத்தில் உள்ள வேலையற்ற பட்டதாரிகள் சங்க அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது. (உ-3)

சஞ்சிகை வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம்,ஜன.28

தொண்டைமானாறு, கெருடாவில் கலை இலக்கிய சாகரத்தின் 'சக்தி' சஞ்சிகை வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2மணிக்கு செல்வச்சந்நிதி ஆலயத்தின் தென்புறத்தில் உள்ள பொன்னொளி வாசிகசாலை முன்றலில் இடம் பெறவுள்ளது.

சாகரத்தின் தலைவர் இ.நவநீதன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் கவிஞர் சோ.பத்மநாதன் வெளியீட்டுரையையும் யாழ்பல்கலைக் கழக தமிழ்த்துறைத் தலைவர் கலாநிதி எஸ்.சிவலிங்கராசா ஆய்வுரையையும் நிகழ்த்துவர்.

சுழலும் சொற்போர், நாட்டியம், இசைநாடகம் ஆகியனவும் இடம் பெறும். (உ-3)

நகரில் தேடுதல்

யாழ்.நகரப் பகுதியில் நேற்று முன்தினம் நண்பகல் 2.30 மணியளவில் படையினர் திடீர்த் தேடுதல் நடத்தினர். வீதியால் சென்றோர், கடைகளில் பணிபுரிந்தவர்கள், பஸ் நிலையப் பகுதியில் நின்றோர் கடும் சோதனைக்கு உள்ளாக்கப்பட்டனர்(உ-3-139)

31ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்

அமரர்

கதிரவேலு விஜயரத்தினம்

(அட்டகிரி முருகன் ஆலய வழிபடுவோர் சங்கத் தலைவரும், திருப்பணிச் சபைப்பொருளாளரும்)

தாயின் மடியில் 07-05-1951

முருகன் அடியில் 29-12-2000

குடும்பத்தின் குல விளக்கே எங்களப்பா!
எம்மையெல்லாம் கலங்க வைத்து நீங்கள் சென்று
மாதமொன்று ஆகியும் ஆறவில்லை எம் துயரம்!
உங்கள் பிரிவு எம்மை வாட்டுகின்றதே நிதம்!

இன்று (28-01-2001) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரணக் கிரியைகளிலும், மதியபோசனத்திலும் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

'விதுளகம்'
டச் வீதி,
மானிப்பாய்.

தாய், மனைவி,
மகன்.

(83370)

பாராட்டி வாழ்த்துகிறோம்

திரு.வே.பொ.பாலசிங்கம்

தன்னலமற்ற சேவையை தரணிக்குத் தளராது ஈந்து பன்னலம் புரிந்த யாழ்.மாநகரசபையின் ஆணையாளர் திரு.வே.பொ.பாலசிங்கம் அவர்கள் வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளராக நியமிக்கப்பட்டதைக் கிலாகித்து, அவர்தம் தனித்தன்மை குன்றாது தொடர்ந்தும் உள்ளூராட்சி ஆணையாளர் பதவி மூலம் சிறப்புச் சேவையாற்ற மனதார பாராட்டி வாழ்த்துகின்றோம்!

தலைவர், உறுப்பினர்கள்,
செயலாளர், உத்தியோகத்தர்கள்,
நகரசபை, சாவகச்சேரி.

(C/15012)

உ

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம!

திருமாங்கல்ய தாரண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் விக்கிரம வருடம் தைமாதம் 16 ஆம் நாள் (29-01-2001) திங்கட்கிழமை காலை 10.10 மணிமுதல் 11.00 மணிவரையுள்ள வளர்பிறை பஞ்சமி திதியும் உத்தரட்டாதி நட்சத்திரமும் மீனலக்கினமும் சித்தயோகமும் கூடிய சுபமுகூர்த்த நல்வேளையில்

எமது புத்திரன்
திருநிறை செல்வன்
கருணானந்தராசா
(கருணா)
அவர்களுக்கும்

எமது புத்திரி
திருநிறை செல்வி
அனித்தா
அவர்களுக்கும்

திருமணம் செய்யப் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு கொழும்பு கதிரேசன் வீதி, 109, ஸ்ரீகதிரேசன் கல்யாண மண்டபத்தில் நடைபெறும் திருமாங்கல்யதாரண வைபவத்துக்கு வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து விருந்துபசாரத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கும்

திரு.திருமதி நடராசா
கிருபாகரன் (கிருபா) } சகோதரர்கள்
பிரபாகரன் (பிரபா) } (நியூ,சிலாந்து)
95/1.4, ஐயனார் கோயிலடி, யாழ்ப்பாணம்.
93/G1 கொலிஜ் கோட், கொலிஜ் ஸ்ரீட்,
கொட்டாஞ்சேனை, கொழும்பு--13
TEL. 077-321206

திரு.திருமதி ரவீந்திரன்
திரு.திருமதி கணேசலிங்கம் (சகோதரி)
78A, குட்செட் வீதி,
தோணிக்கல்,
வவுனியா.

(இரு வீட்டார் அழைப்பு)

(C/15011)

கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய

திருமண மண்டபத் திறப்பு விழா

28-01-2001

நல்லை முதல்வர் ஆசி

அன்பு நெஞ்சத்தீர்,

கொக்குவில் நந்தாவில் கற்புலம் பகுதியில் எழுந்தருளி இருந்து அருளாசி புரியும் மனோன்மணி அம்பிகையின் அருளால் பதிதாக அமைக்கப்பட்டுள்ள மனோன்மணி திருமண மண்டபத் திறப்பு விழா நடைபெறுவதையிட்டு மனமகிழ்ச்சி அடைகின்றோம்.

மக்களுடைய தேவைகளை நிறைவு செய்வது தர்மப்பணியாகும். காலத்தின் தேவையறிந்து ஆலயப் பணிகளை விஸ்தீரணப்படுத்துதல் ஆலய நிர்வாகத்தின் பணியாகும். அவ்வகையில் இவ்வாலய பரிபாலன சபையினர் கொக்குவில் வாழ் மக்களின் தேவையை உணர்ந்து, மங்களகரமான நிகழ்ச்சிகளுக்காகவும் ஏனைய சமூக நிகழ்ச்சிகளுக்காகவும் மண்டபத்தை அமைத்து சிறப்பித்தது வரவேற்பதற்குரியதாகும். மக்கள் மண்டபத்தை நன் முறையில் பயன்படுத்தி, ஆலயப்பணிகளுக்கு ஊக்கம் கொடுக்க வேண்டும். இம் மண்டபத்தை அமைத்த கட்டடக் கலைஞர்களுக்கும் ஆலய பரிபாலன சபையினருக்கும் இறைவனது ஆசி கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய ஸ்வாமிகள்
நல்லை குரு மகா சந்நிதானம்.

ஆலய பிரதம குருவின் ஆசி

சர்வமும் வல்ல ஆதிபராசத்தியாகிய மனோன்மணி அம்பாள் ஆலய இரண்டாம் பிரகாரத்திலே அமைந்துள்ள இக்கல்யாண மண்டபம் மிகவும் குறுகிய காலத்திலே அழகான முறையிலே அமைத்து வர்ணம் தீட்டப்பெற்று, இன்றைய புனிதமான நன்னாளிலே அங்குரார்ப்பண வைபவம் இடம்பெறுவதையிட்டு மிகவும் மகிழ்வடைகிறோம்.அம்பிகையின் திருவருளினாலே இத்திருப்பணி செவ்வனே பூர்தியடைந்துள்ளது.

சகல கலை நிகழ்ச்சிகள், சமயசம்பந்தமான மங்கள வைபவங்கள் சிறப்பாக நடைபெற வசதியாக இம்மண்டபத்தை அமைத்துத் தந்த ஆலய பரிபாலன சபையினருக்கும் இவ்வூர் மக்களுக்கும் சகல சௌபாக்கியங்களும் கிடைக்கவேண்டுமென்று பிரார்த்திக்கின்றேன்.

ஆகம கிரியா திலகம்
சிவஸ்ரீ ந.சபாரத்தினக் குருக்கள்
ஆலய பிரதம குரு.

மனோன்மணி

திருமண மண்டபத் திறப்பு விழா

கொக்குவில் நந்தாவில் மனோன்மணி அம்பாள் ஆலய முன்றலில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள "மனோன்மணி மண்டபம்" என்னும் பெயரில் அமைந்த கல்யாண மண்டபத்தின் திறப்புவிழா இன்று (28.01.2001) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் நடைபெற அம்பாளின் திருவருள் கூடியுள்ளது. அச்சிறப்பு நிகழ்வில் அம்பாள் அடியார்கள் யாவரும் கலந்துகொண்டு விழாவைச் சிறப்பிக்கும் வண்ணம் பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

தலைவர்: திரு.து.வைத்திலிங்கம்
(ஆலய பரிபாலன சபைத் தலைவர்)

ஆசியுரை: ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய ஸ்வாமிகள்
(நல்லை ஆதீன முதல்வர்)
"ஆகம கிரியா திலகம்"
சிவஸ்ரீ ந.சபாரத்தினக் குருக்கள்
(ஆலய பிரதம குருக்கள்).

சிறப்பு விருந்தினர்கள்:
நல்லூர் பிரதேச செயலாளர்,
திரு.செ.செல்வரட்ணம்
(நல்லூர்ப் பிரதேசசபை செயலாளர்),
திரு.கு.சாந்தமோகன் (J/126 கிராம அலுவலர்)

கௌரவ விருந்தினர்: S.சுந்தரகுமார்
(நிறைவேற்று பொறியியலாளர், கட்டடப் பகுதி)

நிகழ்ச்சி நிரல்

7.30 மணி : அம்பாளுக்கு விஷேட பூஜை
8.00 மணி : வரவேற்புரை
தலைமையுரை
ஆசியுரை
சிறப்பு விருந்தினர் உரை
கௌரவ விருந்தினர் உரை
ஸ்தபதியர் கு.நவரட்ணம் அவர்களைக் கௌரவித்தல்
நன்றியுரை - செயலாளர்

கொக்குவில் நந்தாவில் கற்புலத்து, மனோன்மணி அம்பாள் ஆலயம். -ஆலய பரிபாலன சபை.

நீண்ட நாள் கனவு நிறைவேறுகின்றது

கொக்குவில் கிழக்கு வாழ் இந்து மக்களின் நீண்டநாள் கனவொன்று இன்று நிறைவேறுகின்றது.திருமணம் போன்ற மங்களகரமான காரியங்களை சிறப்பாக நடத்துவதற்கு தகுந்த மண்டபம் ஒன்று இல்லாமல் பெரிதும் கஷ்டப்பட்ட காலம் முடிவடைந்துவிட்டது. கொக்குவில் கிழக்கு நந்தாவில் பதிமில அமைந்துள்ள கற்புலத்து மனோன்மணி அம்பாள் தேவஸ்தானத்தில் அழகிய கல்யாண மண்டபம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

சென்ற வருடம் ஏற்கனவே ஓர் அழகிய உள் மண்டபம் அமைக்கப்பட்டது.

தென்னஞ் சோலைகளின் மத்திமில் அழகிய கோலத்துடன் காட்சி அளிக்கின்ற அம்பாள் ஆலயம் மிகப் பிரசித்தமானது. அடியார்கள் வேண்டும் வரங்களை வழங்கிவரும் அம்பாளின் ஆலயம் வரலாற்றுப் புகழ் கொண்டது.

கடந்த சில ஆண்டுகளாக நடந்துவரும் போரினால் இந்த ஆலயம் பெரிதும் பாதிப்படைந்தது.ஆனால் இன்று ஆலயம் புதுப் பொலிவுடன் காணப்படுகிறது. புதிதாக அமைக்கப்பட்ட இம்மனோன்மணி மண்டபத்தில் இந்து சமய கோட்பாடுகளுக்கு இணங்க எந்தவொரு சமய வைபவத்தையும் நடத்துவதற்கு தேவஸ்தானத்தினர் ஒழுங்கு செய்துள்ளன. இம்மண்டப நிர்மாணம் இந்து மக்களுக்கு பெரிய வரப்பிரசாதமாய் அமைந்துள்ளது.

து.வைத்திலிங்கம்,
தலைவர், ஆலய பரிபாலன சபை.

பிள்ளையார் அரைக்கும் ஆலையும் அம்பாள் தொலைத்தொடர்பு நிலையமும்
T.P. No. - 021-3003, I.D.D - 0094213003
பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு.

பெஷன் ஹவுஸ்
65, கே.கே.எஸ். றோட்,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல. 021-2197

சி.கே.பி. தொலைத்தொடர்பு சேவை
30, ஸ்ரேசன் றோட், கோண்டாவில்.
தொ.பே.இல. 021-2907, தொலை நகல் 021-3189
I.D.D - 0094212907, 0094213189

V.K. தொலைத்தொடர்பகம்
79, ராசாவின் தோட்டம் றோட்,
(றக்கா றோட் சந்தி) யாழ்ப்பாணம்.
தொ.பே.இல. 021-2521, 021-2216
வெளிநாடு : 0094212521, 0094212216

நிரு ரியூசன் சென்ரர்
ஸ்ரேசன் றோட்,
கோண்டாவில்.

சிவாஸ் கிறீம் ஹவுஸ்
கோயில் வீதி,
கொக்குவில் கிழக்கு.

சண்முகா வர்த்தக நிலையமும் தொலைத்தொடர்பு சேவையும்
கே.கே.எஸ். றோட், கொக்குவில்.
தொலைபேசி, தொலைநகல்: 021-2637, 070-21-2236.
I.D.D. - 0094212637

சரஸ்வதி அரைக்கும் ஆலையும் தொலைத்தொடர்பு சேவையும்
ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கு.
தொ.இல.: Local 021-3105, 070-21-2220, 021-3299
I.D.D. - 0094213105, 0094213299.

ராஜேந்திரா வர்த்தக நிலையம்
கண்ணாடி வகைகள், படவகைகள் என்பவற்றைப் பெற்றுக்கொள்ளலாம்.
192(108), கே.கே.எஸ். றோட், யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல. 021-2669.

அஜந்தாஸ் ரெக்ஸ்ரைல்
54, பெரியகடை,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல. 021-2839.

ஜெசிபா ஏஜென்சி
ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
மிற்சுயி சிமெந்து ஏக விநியோகஸ்தர்
தொலைபேசி இல. 021-2407.

வினாயகன் தொலைத்தொடர்பு சேவை
மாவடிச் சந்தி, தாவடி.
தொலைபேசி இல. 021-3532, 021-2977, 070-212213
வெளிநாடு 0094213532, 0094212977 தொ.நகல் : 021-2977

விக்னேஸ்வரா கல்வி நிலையம்
பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு.

வதனா களஞ்சியம்
நந்தாவில் அம்மன் கோயிலடி, புகையிரத வீதி, கொக்குவில்
கிளை - துர்க்கா களஞ்சியம்
பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு.

இ.ச.பேரம்பலம் சக நிறுவனம்
50, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

வினோ நகைப் பூங்கா
தங்க, வைர நகை வியாபாரம்
185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021-2824

ஓஷன் றேட்
11, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்

சின்னஞ்சிறு விளம்பரம்

விற்பனைக்கு

DIGITAL DRUM (7 DRUMS) MODEL D.D.50), PIANO (பெரியது) **LONDON MAKE** என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:திரு.பாலு அஸ்பரி, சேர்ச் லேன், அராலி வடக்கு. (83312)

மிகவும் நல்ல நிலையிலுள்ள சிவப்புநிற **HONDA C.D 200C.C ROAD MASTER** மோட்டார் சைக்கிள் (**195T** சைலன்சர்) உடன் விற்பனைக்கு உண்டு. விலை **1,50,000/-** தொடர்பு: இல.41, இராசாவின் தோட்ட வீதி, யாழ்ப்பாணம். **T.P.2226.** (83306)

வேப்பமரம் ஒன்று விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: நா.ரகுமார், 134, செல்லர் வீதி, நல்லூர். (83447)

Alsation 8 மாதம் வயதுடைய தூயஇன ஸண் நாய் ஒன்றும் **DA SH HUND 1 1/2** மாத இரு ஆண் குட்டிகளும் **LOVE BIRDS**களும் விற்ப னைக்கு உண்டு. மனேன் மாஸ்ரர், அரசடி, நவாலி தெற்கு, மானிப்பாய். (83445)

படிவம்

சிறைச்சாலை காவல் பதவிக்கான படிவம் விற்பனையாகின்றது. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். வயது: 18 வயதிற்கு மேற்பட்டோர். கல்வித் தகைமை: க.பொ.த (சா.த) இரண்டு தடவைக்கு மேற்படாது கணிதம், தமிழ் உட்பட 6 பாடங்களில் சித்தியெய்த வேண்டும். இரண்டு பாடங்களில் திறமைச் சித்தி வேண்டும். விவரம் 05.01.2001வர்த்தமானி - நாயகபாலன் - மானிப்பாய். (83448)

இறைச்சிக் கோழி

இறைச்சிக் கோழி (**Broilers**), கல்பேட்ஸ் என்பன விற்பனைக்குண்டு. தினமும் சுத்தம் செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு:- இல.15, 6ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (83384)

இறைச்சிக்கோழி புறொயிலர், கல்பேட்ஸ், சேவல் என்பன சுத்தம் செய்து தினமும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) முத்திரைச் சந்தையடி, நல்லூர். (83388)

நிறை கூடிய இறைச்சிக்கோழி புறொயிலர் (**BROILER**) மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 139, 141, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (83389)

கல்பேட்ஸ் (**1kg 160/-**), புறொயிலர், சேவல் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்தல் இலவசம் 31, மான்ஸ பாடசாலை வீதி, உடுவில், சுன்னாகம் (கண்ண வீடியோ சென்ரர் வளவு) (83396)

இறைச்சிக்கோழி (**Broiler**) விற்பனைக்கு உண்டு. தொடர்பு 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) நல்லூர். (83413)

புறொயிலர் விற்பனைக்கு

இறைச்சிக்கோழி (**BROILERS**), கல்பேட்ஸ் என்பன விலை குறைக்கப்பட்டு விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: 40, (கோயில் வீதி, யாழ்ப்பாணம். (83315)

இறைச்சிக்கோழி (**Broiler**), கல்பேட்ஸ் (**1kg 160/-**) மொத்தமாகவும், சில்லறையாகவும் சுத்தம் செய்து வேண்டிய நிறையில் பெற்றுக் கொள்ளலாம். இலவசம். பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம். (மீண்டும் வாடிக்கையாளரின் நலன்மை கருதி மேற்கானும் முகவரியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது) (83440)

சுத்தம் செய்யப்பட்ட **BAIRAHA FARN** புறொயிலர் இறைச்சிக்கோழி **CHICKEN SAUSAGES, CHICKEN MEAT BALLS** எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: 145, நவீன சந்தை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். **T.P.: 2868.** (83442)

மணமகன் தேவை

கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த செவ்வாய்க் குற்றமற்ற, ரோகிணி 3ஆம் பாதம், 5-7-1967இல் பிறந்த மணமகளுக்கு பொருத்தமான மணமகன் உடன் தேவை. தனியார் மற்றும் அரசாங்கத் தொழில் புரிபவர்களும், ஏனையவர்களும் உடன் தொடர்பு கொள்க.**UNITED** திருமண சேவை, **c/o** க.ஜெயராணி, நவாலி வடக்கு. **(C/15015)**

கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 2இல் செவ்வாய், பூரட்டாதி 2ஆம் பாதம், 11.09.1965இல் பிறந்த (21 பாவம்) பெண்ணுக்கு அரசாங்க உத்தியோகம் பார்க்கும் மணமகன் உடன் தேவை. சீதனம் பேசித் தீர்க்கலாம். தொடர்பு: **UNITED** திருமண சேவை, மே/பா.க.ஜெயராணி, நவாலி வடக்கு. **(C/15013)**

திருமண சேவை

ஸ்ரீராகவேந்திர ஜோதிட நிலையத்தில் சகல வயது ஆண், பெண் திருமண ஜாதகங்கள் கைவசம் உண்டு. ஜாதக கிரக தோஷங்களுக்கும், செவ்வாய் கிரக தோஷத்துக்கும் பரிகாரம் செய்து திருமணப் பொருத்தம் செய்து வைக்கப்படும். தொடர்பு: ஸ்ரீராகவேந்திர ஆலயம், **159A**, கோயில் வீதி, நல்லூர். (83410)

மணமகள் தேவை

கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 8இல் செவ்வாய், சதய நட்சத்திரம், 2ஆம் பாதம், 01.07.1972இல் பிறந்த (65 பாவம்), சுவிஸ் நாட்டு மணமகனுக்கு அழகான மணப்பெண் தேவை. மணமகன் யாழ். வந்து திருமணம் செய்து திரும்புவார். உடன் தொடர்பு கொள்க. **UNITED** திருமண சேவை. மே/பா க.ஜெயராணி, நவாலி வடக்கு.**(C/15014)**

தவறிவிட்டது

கரவெட்டியைச் சேர்ந்த கோமதி சிவகுமார் ஆகிய எனது தே.அ அட்டை(இல.767220650V),வி.அடையாள அட்டை (இல.0909024184), பல்கலைக்கழக அ.அட்டை என்பன தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் திரு.சிவகுமார், முகாமையாளர், மக்கள் வங்கி, நெல்லியடி. (தொ.பே. இல.3256) அல்லது திருமதி சொக்சீலன் போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (83435)

தவசிகுளம், மிருசுவில் எனும் முகவரியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை பகவதி, தங்கராசா பூபதி என்பவர்களது விசேட அடையாள அட்டை (இல.091019249), (இல. 091033743), கடவுச் சீட்டு, இலங்கை வங்கி கணக்குப் புத்தகம் என்பன கொக்குவிலுக்கும் யாக்கரைக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து **K.P.** பாலகிருஷ்ணன், கொக்குவில் கிழக்கு, பூநாறி மரத்தடி எனும் விலாசத்தில் ஒப்படைத்துதவவும். (83419)

கோண்டாவில் மேற்கு, கோண்டாவில் என்னும் முகவரியைச் சேர்ந்த சின்னராசா கஜீபன் என்பவரது விசேட அடையாள அட்டை (0906002311), பாடசாலை அடையாள அட்டை (கொக்குவில் இந்துக் கல்லூரி) இரண்டும் 20-01-2001 அன்று கோண்டாவில் ஈசன் கல்வி நிலையத்திற்கு அண்மையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஈசன் கல்வி நிலையத்தில் ஒப்படைத்துதவவும். (83414)

மனைப்பெண்கள் தேவை

உள்ளூர் உத்தியோக, வெளிநாட்டில் தொழில் புரியும் மணமகன்களுக்கும், 1974இல் பிறந்த எண்டன் பொறியியலாளர், அவுஸ்திரேலியா **B.Sc** பொறியியலாளர் ஆகியோருக்கும் படித்த பட்டதாரி மணப்பெண்கள் தேவை. தொடர்பு: 'அபிராமி திருமண சேவை', மகாராஜாத்தி, ஆடியபாதம் சந்தைவீதி, முதலாம் ஒழுங்கை கொக்குவில். (83437)

காணி விற்பனைக்கு

மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கு சமீபமாக கிணற்றுடன் 8 பரப்புக் காணி உடன் விற்பனைக்கு உள்ளது. தொடர்பு, **M.**மனோகரன், 'மனோ அம்பிஸ்', மானிப்பாய். (83305)

SPOKEN ENGLISH

அடிப்படையில் இருந்து ஆங்கிலம் பயில வேலை பார்ப்பவர்களுக்கு தனிப்பிரிவு, தபால் மூலமும். ஆசிரியர்: ந.விக்கினேஸ்வரன் ஆச்சாரி, நாகலிங்க சுவாமிகள் வீதி, சங்கானை (நாகலிங்க சுவாமிகள் நினைவாலயம் அருகில்). (83364)

வீடு வாடகைக்கு

35, சோமசுந்தரம்.அவனியு, சுண்டுக்குளியில் உள்ள மாடி வீடு வாடகைக்குக் கொடுக்கப்படும். நேரில் வரவும். (83412)

வீடு விற்பனைக்கு

நாவலர் வீதியில், இலுப்பையடிச் சந்திக்கும், ஆனைப்பந்திச் சந்திக்கும் இடையில் 375/14, முதலியார் முத்துத்தம்பி லேனில் சகல வசதிகளும் கொண்ட, குடியிருப்பதற்கு உகந்த வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: திரு.இரட்ணசிங்கம், 175, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.(83444)

நிரந்தர நியமனம்

நல்லூர் பிரதேச சபையில் ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றி வந்த 15 ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

காரியாலய காரியசகாயர், மருந்துக் கலவையாளர், வருமான மேற்பார்வையாளர் தரம் **II**, இடுகாடு தொழிலாளர், சந்தைத் தொழிலாளர், வீதித்தொழிலாளர் ஆகிய பதவிகளைச் சேர்ந்த 15ஊழியர்களுக்கே நிரந்தர நியமனம்வழங்கப்பட்டுள்ளது. (ஐ-69)

வைரவர் ஆலயத்திற்கு சிறு சேதங்களே!

மட்டுவில் தெற்கு மருதங்குளம் வைரவர் கோயில் ஷெல்வீச்சுகளின் மத்தியிலும் சிறு சேதங்களுடன் தப்பியுள்ளது. ஆனால் ஆலய புனருத்தாரண வேலைக்காக உள்ளே அடுக்கி வைக்கப்பட்டிருந்த சிமெந்து பைக்கற்றுகள் காணாமல் போய் விட்டன.

சுற்றாடலில் ஷெல்கள் வீழ்ந்து வெடித்து பாதிப்புகள் ஏற்பட்டுள்ளதை காணக்கூடியதாக இருந்த போதிலும் ஆலயத்துக்கு சிறு சேதங்களே ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது (க-117)

கண்காட்சி

யாழ்ப்பாணம்,ஜன.28

யாழ்.கல்விக்கோட்டப் பாடசாலைகளைச் சேர்ந்த ஆரம்பக் கல்வி நெறி ஆசிரியர்களுக்கான கற்பித்தல் உபகரணப் போட்டியும் கண்காட்சியும் நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு யாழ் புனித மரியாள் வித்தியாலயத்தில் இடம் பெறவுள்ளன.

ஆரம்பக்கல்விநெறி ஆசிரியர்கள் தமது ஆக்கங்களை காலை 7 மணிக்கு முன்பு காட்சிப்படுத்துவதற்கு ஏற்ற ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு கல்வி யாழ்.வலய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வலய மட்டத்திலான போட்டிகள் பற்றிப் பின்னர் அறிவிக்கப்படும் என்றும், ஆசிரியர்கள் மற்றும் ஆரம்பப் பிரிவு மாணவர்கள் கண்காட்சியைப் பார்வையிட்டுப் பயன்பெறக்கூடியவாறு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (ஐ-10)

கும்பாபிஷேகம்

வலிகாமம் தெற்கு,ஜன.28

சங்கானை திருக்கு நிகரை ஞானவைரவர் ஆலய சம்பூரோட்சண பஞ்ச குண்டபட்ச மகா கும்பாபிஷேகம் நாளை திங்கட்கிழமை காலை ஆறு மணிக்கும் எட்டு மணிக்கும் இடையில் நடைபெற உள்ளது.

கும்பாபிஷேக கிரியைகள் கடந்த 25 ஆம் திகதி காலை ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன. நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை பக்தர்கள் எண்ணெய்க் காப்பு சாத்துதல் நடைபெறும்.

சிவஸ்ரீ பாலசுப்பிரமணிய குருக்கள் தலைமையில் கும்பாபிஷேகம் நடைபெறும்.

செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகனின் ஆசியுரை இடம்பெறும்.

கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 45 நாள்களுக்கு மண்டலாபிஷேகம் நடைபெறும்.

மார்ச் மாதம் 13 ஆம் திகதி புதன்கிழமை மஹா சங்காபிஷேகம் இடம்பெறும். (ஐ-152)

தென்மராட்சி வலய அதிபர்கள் கூட்டம்

தென்மராட்சி,ஜன.28

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் அதிபர்களுக்கான கூட்டம் எதிர்வரும் 31 திகதி புதன் கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறும்.

பாடசாலையில் தற்போது கல்வி கற்கும் மாணவர்களின் விவரங்களை எடுத்து வருமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (க-117)

விற்பனைக்கு!

நவாலி தெற்கு கலோடை அம்மன் கோயில் ஒழுங்கையில் 5 3/4பரப்புக் காணியுடன் தனிக்கிணறு, மலசலகூட வசதியுடன் நல்ல நிலையில் உள்ள கல்வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:-

62/2, இந்துக் கல்லூரி ஒழுங்கை, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

(83436)

சந்தை இடம் மாறும்

கொக்குவில்,ஜன.28

கொக்குவில் சந்தியில் இயங்கி வரும் பொதுச்சந்தை குளப்பிட்டிச் சந்திப் பகுதிக்கு விரைவில் மாற்றியமைக்கப்பட உள்ளதாக நல்லூர் பிரதேச சபை செயலாளர் தெரிவித்தார். (ஐ-69)

போர்முனையில்....

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

னிக்கின்ற போதும் அவைபற்றி மத்தியவங்கி தொடர்ந்து அறிவிக்கும். மிகைப் பெறுமானத்தை நீக்குதல்.

* தொடர்ந்து வீழ்ச்சியடைந்து செல்லும் ரூபாவின் பெறுமதியை உறுதிப்படுத்தல்
* ஏற்றுமதி வருமானத்தைப் பெருக்குதல்.
* வெளிநாட்டு முதலீடுகளை வரவழைத்தல்.
* உயர்ந்துவரும் வட்டிவீதத்தைக் குறைதல்.
* மேலும் திறந்த சந்தைப்பொருளாதாரமாக (More Open Market Economy) இலங்கையை மாற்றுதல்.

ஆகிய நோக்கங்களைப் பின்னணியாகக் கொண்டே ரூபா சுதந்திரமாக மிசுக்கவிடப்பட்டுள்ளது.

(வளரும்)

மரண அறிவித்தல்கள்

ஏகாம்பரநாதன் (குட்டிப்பிள்ளையார்)

காரைநகர், தங்கோடையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஏகாம்பரநாதன் (குட்டிப்பிள்ளையார்) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா பரமசாமி மற்றும் காமாட்சி தம்பதிகளின் அன்பு மகனும், சோமசுந்தரம் (லண்டன்), உதயகுமார் (லண்டன்), சண்முகநாதன் (சுவிஸ்), சிவலோகநாயகி (தேவி, லண்டன்) ஆகியோரின் சகோதரனும், நல்லதம்பி, அன்னம்மாவின் பெறாமகனும், காலஞ்சென்ற சண்முகம் அம்பலவாணர் (தபால் அதிபர்), காலஞ்சென்ற சண்முகம் பொன்னம்பலம் (**D.L.O**) ஆகியோரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (27-01-2001) சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சாம்பலோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

பரமசாமி காமாட்சி (தாய்)

புளியம்குளம், அருளானந்தப் பிள்ளையார் கோயிலடி, தங்கோடை, காரைநகர்.

(83434)

திருமதி பாக்கியம் கனகரத்தினம்

மடத்தடி, மாவிட்டபுரத்தைச் சேர்ந்த திருமதி பாக்கியம் கனகரத்தினம் அவர்கள் நேற்று (27-01-2001) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகரத்தினம் அவர்களின் மனைவியும், இராசமணி (கனடா), அமரர் சோதிமலர் (வவுனியா), மகாலிங்கம் (நீர்வேலி), இரத்தினசிங்கம் (அமெரிக்கா), பாலசிங்கம் (மாவிட்டபுரம்), தவமணி (உடுவில்), சந்திரமலர் (கனடா), தனையசிங்கம் (கனடா), சண்முகலிங்கம் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், அமரர் பேரின்பநாயகம், கந்தசாமி, குமாரசாமி, அமரர் மகாதேவன், சரோஜினிதேவி, இந்திரா, மகாலட்சுமி, சகுந்தலாதேவி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28-01-2001) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.00மணிக்கு அன்னாரின் சுதிபுரம் 'மது' இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இணுவில் பூவோடை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகின்றோம்.

நிரந்தர முகவரி: மடத்தடி, மாவிட்டபுரம், தெல்லிப்பழை.

தற்காலிக முகவரி: அம்மன் வீதி, உடுவில், சுன்னாகம்.

தகவல்: க.மகாலிங்கம் (மகன்)

(83450)

சின்னையா அப்புத்துரை

(இளைப்பாறிய கிராமத் தலைவர்)

சுழிபுரம் சின்னையா (முன்னாள் கிராமத் தலைவர்) - அமுதம் தம்பதிகளின் மூத்த புதல்வனும், சுழிபுரம் கந்தையா - தையல்முத்து தம்பதிகளின் மூத்த மருமகனும் இளைப்பாறிய கிராமத் தலைவரும் ஆகிய அப்புத்துரை அவர்கள் 25-01-2001 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திலகவதி அவர்களின் அன்புக் கணவரும், சாந்தகுமாரி (ஆஸ்திரேலியா), சதாசுந்தரேஸ் (ஓமான்), நிர்மலாதேவி, நித்தியானந்தமநுநீதி (ஓமான்), கிருபானந்தமநுநீதி (சேவைக்கால ஆசிரிய ஆலோசகர், வடமராட்சி கல்வி வலயம்), நளாயினி (டுபாய்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கந்தசாமி (ஆஸ்திரேலியா), காலஞ்சென்ற சச்சிதானந்தராணி, கலாவதி (ஓமான்), சுந்திரகுமார் (ஆசிரியர், வதிரி திரு இருதயக் கல்லூரி) தயாபரன் (டுபாய்) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஈஸ்வரநாதன் (ஓமான்), அருணகிரிநாதன் (ஆஸ்திரேலியா), செந்தில்நாதன் (ஆஸ்திரேலியா), மனுஆனந்தன் (அமெரிக்கா), நிலா (லண்டன்), மதுரன் (ஆஸ்திரேலியா), மதுமதி (யாழ்பல்கலைக்கழகம்), மதுமிதா (மெதடிஸ்த பெண்கள் உயர்கல்லூரி, பருத்தித்துறை), மதுமயூரன் (ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை), தர்சனா (டுபாய்) ஆகியோரின் அருமைப் பேரனும், தாற்பிகா (ஓமான்), அவர்களின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற தெய்வநாயகி, முத்துக்குமாரசாமி (கனடா), இராசமோ ஆகியோரின் அருமைச் சகோதரனும் சிவசுப்பிரமணியம் (கனடா), தெய்வரூபிகை (கொழும்பு) ஆகியோரின் மைத்துனரும் செல்லத்துரை அவர்களின் மாமனாரும் ஆவார்.

இறுதிக்கிரியைகள் இன்று (28-01-2001) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11.00மணிக்கு அன்னாரின் சுழிபுரம் 'மது' இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக சுழிபுரம் திருவடிநிலை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

அ.கிருபானந்தமநுநீதி (சேவைக்கால ஆசிரிய ஆலோசகர், வடமராட்சி கல்வி வலயம்)

'மது' சுழிபுரம் மத்தி, சுழிபுரம்.

(C/15017)

'மாட்டுப் பைத்திய' நோய் எங்கும் பரவும் ஆபத்து!

ஐ. நா. உணவு நிறுவனம் எச்சரிக்கை!!

ரோம், ஜன. 28

உயிராபத்தை ஏற்படுத்தும் 'மாட்டுப் பைத்திய' நோய் உலகமெங்கும் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக ஐ. நாவின் உணவு மற்றும் விவசாய நிறுவனம் எச்சரித்துள்ளது.

இது தொடர்பாக விடுத்துள்ள அறிக்கையில், மூளையில் பாதிப்பை ஏற்படுத்தும் 'மாட்டுப்பைத்திய' நோய் பிரிட்டன் உட்பட ஐரோப்பாவின் பல பாகங்களிலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

முதலில் கால்நடைகளைப் பாதித்த இந்த நோய் நாளடைவில் மனிதர்களையும் பீடித்துள்ளது.

80 களின் பிற்பகுதியில் மேற்கு ஐரோப்பிய நாடுகளில் குறிப்பாகப் பிரிட்டனில் இருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட மாடுகள் மற்றும் பதப்படுத்திய மாட்டிறைச்சி ஆகியவற்றில் மாட்டுப்பைத்திய நோயை ஏற்படுத்தும் கிருமிகள் இருந்ததாகவும்—

இதன் மூலம் இந்த நோய் வேகமாகப் பரவியதாகவும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மேற்கு ஐரோப்பிய நாடுகளில் இருந்து மாட்டிறைச்சி மற்றும் மாடுகளை இறக்குமதி செய்தோ அல்லது உதவிப் பொருள்களாகப் பெற்றோ பயன்படுத்தும் நாடுகள் மாட்டுப் பைத்திய நோய் அபாயத்துக்கு உள்ளாகியுள்ளன.

இந்த வகையில் மத்திய கிழக்கு, கிழக்கு ஐரோப்பா, வட ஆபிரிக்கா ஆகிய பகுதிகளில் உள்ள நாடுகளும் இந்தியாவும் இந்த நோயால் தாக்கப்படும் வாய்ப்புகள் அதிகம் உள்ளன.

இவ்வாறு உணவு மற்றும் விவசாய நிறுவனம் தெரிவித்துள்ளது.

மாட்டுப் பைத்திய நோய் 1984 ஆம் ஆண்டில் பிரிட்டனில் மாடொன்றில் முதன் முதலில் கண்டுபிடிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

(ஒ–7)

புலிகளின் அறிவிப்பை வரவேற்க பழ.நெடுமாறன் வலியுறுத்தல்

புதுவை, ஜன. 28

முன்னாள் கொள்ளைக்காரி பூலான்தேவிக்கு வழங்கப்பட்டது போன்ற பொது மன்னிப்பை சந்தனமரக் கடத்தல்காரன் வீரப்பனுக்குத் தமிழக கர்நாடக அரசுகள் வழங்க முன்வந்தால் வீரப்பனைச் சந்தித்துச் சரணடையச் செய்வதற்காக மீண்டும் தான் காட்டுக்குச் செல்லத் தயாராக இருப்பதாகவும் நெடுமாறன் கூறியுள்ளார்.

காஷ்மீரில் இந்தியா அறிவித்துள்ள யுத்த நிறுத்த அறிவிப்பை வரவேற்பவர்கள் இலங்கையில் விடுதலைப் புலிகள் அறிவித்துள்ள போர் நிறுத்தத்தையும் வரவேற்க வேண்டும்.

இவ்வாறு பாண்டிச்சேரியில் செய்தியாளர்களிடம் பேசிய தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன் வலியுறுத்தினார்.

இது தொடர்பாக அவசிய மேற்பட்டால் மத்திய உள்துறை அமைச்சர் அத்வானியைச் சந்தித்து தான் பேச உள்ளதாகவும் அவர் கூறினார்.

ஐரோப்பிய ஒன்றியம் வரவேற்பு

லண்டன், ஜன. 28

காஷ்மீரில் இந்திய அரசின் யுத்த நிறுத்த அறிவிப்பு நீடிக்கப்பட்டுள்ளதை ஐரோப்பிய ஒன்றியம் வரவேற்றுள்ளது.

இதனைத் தெரிவித்த ஐரோப்பிய ஒன்றிய வெளியுறவுத்துறைக்கான ஆணையர் பேட்டன் யுத்த நிறுத்த அறிவிப்புக்கு ஊக்கமளிக்கும் வகையில் பாகிஸ்தான் பதிலளிக்கும் என்று நம்புவதாகவும் கூறியுள்ளார்.

உள்விவகாரங்களில் தலையிடும் அமெரிக்காவுக்கு எச்சரிக்கை!

சீன அரசு விருத்தது

பெய்ஜிங், ஜன. 28

தனது உள் விவகாரங்களில் தலையிடவேண்டாம் என்று அமெரிக்காவுக்கு சீன அரசு எச்சரிக்கை விடுத்துள்ளது

கணிசமான எண்ணிகையிலான சீனர்கள் பின்பற்றுவதாகக் கூறப்படும் 'பலூன் கொங்' என்ற மதப்பிரிவை சீன அரசு தடை செய்துள்ளது.

இதனைச் சுட்டிக் காட்டி பலூன் கொங் மதத்தினரை அடக்கி வைப்பதன் மூலம் மனித உரிமைகளைச் சீனா மீறியுள்ளதாக அமெரிக்கா சமீபத்தில் கண்டனம் தெரிவித்திருந்தது.

அமெரிக்காவின் கண்டனத்தை சீன வெளியுறவுத் துறை உயரதிகாரி நிராகரித்தார்.

பலூன் கொங் தீய வழிபாட்டுக் கும்பல் என்றும்—

நோயுற்ற சுமார் ஆயிரத்து 60 தொண்டர்கள் மருத்துவ உதவிகளை ஏற்காமல் உயிரிழக்க இந்த மதம் காரணமாக இருந்தது என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

இந்த விடயத்தில் சீன அரசை ஆதரிக்குமாறும் அவர் அமெரிக்காவைக் கேட்டுக் கொண்டார்.

(ஒ–7)

நீதிமன்றத்தில் ஜோர்ஜ் ஸ்பைட்

பிஜியில் கிளர்ச்சித் தலைவர் ஜோர்ஜ் ஸ்பைட்மீதான 21 தேசத்துரோகக் குற்றச்சாட்டுகளின் விசாரணைகள் ஆரம்பமானதை யொட்டி அவர் நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்.

கடந்த மே மாதம் பிரதமர் மகேந்திர சௌத்திரியையும், அமைச்சர்களையும் நாடாளுமன்றக் கட்டடத்துக்குள் ஸ்பைட்டும், ஆதரவாளர்களும் சிறைவைத்தது தொடர்பாகவே குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. (ஒ)

மேற்காசிய அமைதி உடன்பாடு இஸ்ரேலிய தேர்தலின் பின்னராம்!

இடைக்காலப் பிரதமர் எகுட்பராக் தெரிவிப்பு

டெல்அவிவ், ஜன. 28

மேற்காசிய அமைதிப் பேச்சில் உடன்பாட்டு அம்சங்களை முடிவு செய்யும் சாத்தியம் உடனடியாக ஏற்படப் போவதில்லை என்று இஸ்ரேலிய இடைக்காலப் பிரதமர் எகுட்பராக் தெரிவித்துள்ளார்.

எகிப்தின் கடற்கரையோர சுற்றுலா நகரான தாபாவில் இருதரப்பு பிரதிநிதிகள் இடையே இடம்பெறும் பேச்சில் முன்னேற்றமான நிலை காணப்படுவதாகக் கூறப்படுவதை பராக் ஒப்புக் கொண்டார்.

ஆனாலும், அடுத்த மாதம் 6 ஆம் திகதி நடைபெறவுள்ள இஸ்ரேலியப் பிரதமர் பதவிக்கான தேர்தலின் முன்னர் திட்ட வட்டமான உடன்பாட்டை வரைய முடிகொண்டு பராக் உடன்பாடு யாது என்றும் —

இருதரப்பும் புரிந்துணர்வையும், நல் இணக்கத்தையும்

வலுப்படுத்திக் கொண்டால் தேர்தலின் பின்னர் உடன்பாடு எட்டப்படலாம் என்றும் பராக் மேலும் தெரிவித்தார்.

இதே சமயம், பிரதமர் பதவித் தேர்தலை மனதில் ஏற்படுவதைத் தள்ளிப்போட முயற்சிப்பதாகக் கூறப்படுகிறது.

பிரதமர் தேர்தல் தொடர்பான கருத்துக் கணிப்புகளில் லிகுட் கட்சித் தலைவரான ஏரியல் ஷெரோன் முன்னணியில் இருப்பது தெரியவந்துள்ளது.

பராக் வெற்றியடைய வேண்டுமானால் இஸ்ரேலிய அரேபியர்களின் வாக்கு மொத்தமாக அவருக்கே கிடைக்க வேண்டும்.

இதனால் அடுத்த பிரதமராக தான் வந்தாலே உடன்பாடு எட்டப்படும் என்ற தோற்றத்தை உருவாக்க பராக் முயற்சிப்பதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

(ஒ-7)

நட்சத்திரப் போர்த் திட்டத்தை தொடர்வதில் அதிபர் புஷ் உறுதி

வாஷிங்ரன், ஜன. 28

அமெரிக்காவின் நட்சத்திரப் போர்த்திட்டத்தை மேம்படுத்தும் நடவடிக்கைகளைத் தொடரப் போவதாக புதிய அதிபர் ஜோர்ஜ் டபிள்யு - புஷ் உறுதி தெரிவித்தார்.

நேச நாடுகள் சில நட்சத்திரப் போர்த் திட்டம் குறித்து கவலை தெரிவித்திருந்தன. அத்துடன் சீனா, ரஷ்யா ஆகிய நாடுகளும் இத் திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

இருந்த போதிலும் சர்ச்சைக்குரிய இத் திட்டம் மேற்கொள்ளப்படும் என்று புஷ் உறுதியாகக் கூறியுள்ளதாக அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் டொனால்ட் ஜோன்ஸ்பெர்க் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவைத் தாக்கவரும் ஏவுகணைகளை எதிர்ப்பு ஏவுகணைகள் மூலம் வானிலேயே தாக்கியழிப்பது உட்பட விண்ணில் யுத்தத்தை மேற்கொள்வதே 'ஸ்டார் வோர்' எனப்படும் நட்சத்திரப் போர் ஆகும்.

கடந்த ஆண்டு பல கோடி டொலர்கள் செலவில் தயாரிக்கப்பட்ட அமெரிக்க எதிர்ப்பு ஏவுகணையின் மூன்றாவது சோதனையும் தோல்வியில் முடிவடைந்தது குறிப்பிடத்தக்கது.

(ஒ—7)

உலக அமைதிக்காகப் பிரார்த்தித்து

மூன்று நாள்கள் மண்ணுக்குள் புதைந்திருந்த பெண் யோகி!

கும்பநகர், ஜன. 28

3 நாள்களாக மண்ணுக்குள் புதைந்திருந்து வெளியே உயிருடன் வந்த ஜப்பானிய பெண்யோகியிடம் இந்து யாத்திரிகர்கள் ஆசி பெற்றனர்.

இந்தியாவின் அலகாபாத் நகரில் இடம் பெற்று வரும் மகாகும்பமேளா விழாவில் ஜப்பானிய கெய்ரோ அங்காவா என்ற பெண் யோகியும் கலந்து கொண்டார்.

இவர் உலக சமாதானத்துக்காகப் பிரார்த்தனை செய்வதற்காக மூன்று நாள்களுக்கு முன்னர் குழியொன்றினுள் இருத்தப்பட்டு தகரங்களாலும் மண்ணாலும்மூடப்பட்டார்.

உணவு, குடிதண்ணீர் எதுவுமின்றி குழிக்குள் 75 மணிநேரம் இருந்த அவர் பின்னர் வெளியே வந்தார்.

கும்பமேளாவில் கலந்து கொண்ட யாத்திரிகர்கள் பயிரும் யோகி அங்காவாவிடம் ஆசி பெற்றனர்.

(ஒ-7)

இந்தியப் பூமியதிர்ச்சியில்

3,000 சடலங்கள் இதுவரை மீட்பு!

புதுடில்லி, ஜன. 28

இந்தியாவின் குஜராத் மாநிலத்தை நேற்று முன்தினம் தாக்கிய பூமியதிர்ச்சியால் உயிரிழந்தவர்களில் 3 ஆயிரத்துக்கும் மேறபட்டோரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

இறந்தவர்களின் எண்ணிக்கை 6 ஆயிரத்தைத்தாண்டும் என அஞ்சப்படுகிறது.

மீட்புப பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது நேற்றுக் காலை 9 மணியளவில்

பாதிக்கப்பட்ட அகமாதாபாத்தில் மீண்டும் நில அதிர்வு ஏற்பட்டதாகவும்—

இதனால் பாரிய அளவில் சேதங்கள் ஏற்படாத போதும் மீட்புப் பணிகள் பாதிக்கப்பட்டதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன

பூமியதிர்ச்சி மையம் கொண்டிருந்ததால் மோசமாகப் பாதிக்கப்பட்ட புஜ்நகரில் இருந்து சுமார் ஒன்றரை லட்சம் பேர் பக்கத்து மாவட்டங்களில் தஞ்சமடைந்துள்ளனர்.

இதேசமயம் நிலநடுக்கத்தின் பின் விளைவாக ஏற்படும் அதிர்வுகள் குறித்து எச்சரிக்கப்பட்டுள்ளது

இந்தப் பூமியதிர்ச்சியை அடுத்து—

தெற்காசியப் பகுதி நிலநடுக்க அபாயப் பிரதேசமாகும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. [ஒ-7]

அமெரிக்க அதிபராக விருப்பிய அல்கோர் ஆசிரியரானார்!

வாஷிங்டன், ஜன. 28

அமெரிக்காவின் முன்னாள் உப ஜனாதிபதியும், அதிபர் தேர்தலில் ஜனநாயகக் கட்சி சார்பில் போட்டியிட்டவருமாகிய அல்கோர் பட்டதாரிகள் பாடசாலை ஒன்றில் ஆசிரியராகப் பணியேற்றார்.

கொலம்பியா பல்கலைக் கழகத்தின் நியூயோர்க்வளாகத்தில் பத்திரிகையாளர்களுக்கான பட்டப்படிப்பு வகுப்புகளில் அவர் ஆசிரியராக உள்ளார்.

1976 ஆம் ஆண்டு காங்கிரஸ் பிரதிநிதிகள் சபைக்குத் தெரிவாகும் முன்னர் அல்கோர் ஆய்வு நிருபராகப் பணியாற்றி வந்தார்

இதே சமயம் 2004 ஆம் ஆண்டில் நடைபெற உள்ள ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயகக் கட்சி சார்பில் மீண்டும் அல்கோர் போட்டியிட வேண்டும் என்று கட்சித் தலைவர்கள் சிலர் கூறி வருகின்றனர்.

ஆனால் 2004 ஆம் ஆண்டில் அல்கோருக்கு 56 வயதாகி விடும் என்றும் அப்போது அவர் தேர்தலில் போட்டியிடுவதை கட்சியில் உள்ள இளைய தலைமுறைத் தலைவர்கள் எதிர்க்கக் கூடும் என்று கூறப்படுகிறது.

பிரிவுத்துயர் பகிர்வு

இராமலிங்கம் வேலுப்பிள்ளை

(இளைப்பாறிய அதிபர் — நெடுந்தீவு மேற்கு சைவப்பிரகாச வித்தியாலயம்)

அவர்களின் பிரிவுத் துயர் கேட்டு எங்கள் கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பழைய மாணவர்கள்,
சைவப்பிரகாச வித்தியாலயம்,
நெடுந்தீவு. (83520)

கண்ணீர் அஞ்சலி

எமது நிறுவன அங்கத்தவர்

செல்வி பிருந்தா பத்மநாதன்

அவர்கள்

இறைபதம் அடைந்த செய்திகேட்டு ஆழ்ந்த கவலை அடைந்தோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மகளிர் சிக்கன கடனுதவி
கூட்டுறவுச் சங்கம்.

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி. (சி-15030)

கண்ணீர் அஞ்சலி

எமது கல்வி நிறுவன
முன்னாள் மாணவியும் ஆசிரியையுமான

செல்வி பிருந்தா பத்மநாதன்

அவர்கள்

திடீர் மரணமடைந்த செய்தி அறிந்து ஆழ்ந்த கவலை அடைந்தோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நிர்வாகி,
ஆசிரியர்கள் மாணவர்கள், ஊழியர்கள்.
ஐடியல் கல்வி நிலையம்,
நீர்வேலி.
(சி/15029)

மரண அறிவித்தல்கள்

திருமதி தனேஸ்வரி இராசையா (பேபி)

தொல்புரத்தைப் பிறப்பிடமாகவும் 57, வித்தியாலய வீதி, திருமலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தனேஸ்வரி இராசையா (பேபி) 24-01-2001 புதன்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் ஆறுமுகம் இராசையா (துறைமுக அதிகார சபை - திருமலை) அவர்களின் அன்பு மனைவியும் திருமதி உமா தட்சன் (கடற்றொழில் திணைக்களம், திருமலை), திருமதி கோமளா சிவகுமார் (பிரான்ஸ்), குமரன் (மருத்துவபீடம், யாழ்ப்பாணம்), குகன் (பொறியியல் பீடம், பேராதனை) ஆகியோரின் அன்புத் தாயாரும் க. தட்சன் (Ray Band, திருமலை), க. சிவகுமாரன் (பிரான்ஸ்), திருமதி பிரியா குமரன் (ஆசிரியை, திருமலை) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் விபிஸ்டன், அபிஸ்டன், பிரம்மியா ஆகியோரின் அன்புப் பாட்டியுமாவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (28-01-2001) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மாணிக்கவாசகர் கோணேஸ்
(பெறாமகன்)
57, வித்தியாலய வீதி,
திருமலை.
T. P. 026-20152
026-20612
சுழிபுரம் மேற்கு,
சுழிபுரம்.
(83517)

குமாரவேலு பழனிமலை

(தவில் வித்துவான் - கைதடி)

கைதடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட குமாரவேலு பழனிமலை நேற்று [27-01-2001] சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் திலகவதியின் அன்புக் கணவரும், ஜெயவதி, லீலாவதி [மலேசியா], புஸ்பவதி [கொழும்பு], ஜெயபாலன் [பிரான்ஸ்], பஞ்சமூர்த்தி, பாலநந்தீஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சபேசன் [ஹொலன்ட்], முருகையா [மலேசியா], ரவிதாஸ் [கொழும்பு], இந்துமதி, தங்கரூபி, ஹேமதி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று [27-01-2001] சனிக்கிழமை நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கே. பஞ்சமூர்த்தி
[மகன்]
4 ஆம் கட்டை ஒழுங்கை,
இணுவில் மேற்கு,
இணுவில். [83519]

இலவச திருமணப் பதிவு

வடமராட்சி லயன்ஸ் கழகத்தின் ஆதரவில் துன்னாலை வேம்படிப் பகுதியில் திருமணப் பதிவு இன்றி வசித்து வந்த 30 தம்பதிகளுக்கு இலவச திருமணப் பதிவு மேற்கொள்ளப்பட்டது.

வடமராட்சி லயன்ஸ் கழக தலைவர், லயன் என். சோமசுந்தரம் தலைமையில் இவ் வைபவம் இடம்பெற்றது.

கரவெட்டி பிரிவு, பிறப்பு இறப்பு, விவாகப் பதிவாளர் க. அருட்பிரசாதம் முன்னிலையில் திருமணப் பதிவுகள் நடைபெற்றன (க-109)

பருத்தித்துறையில் சிறுவருக்கு நூலகம்

பருத்தித்துறை நகர சபையின் முன்னாள் தலைவர் அமரர். வ. விஜயரத்தினம், நகர சபை ஊழியர் அமரர் ப. பகீரதன் ஆகியோரின் ஒரு வருட நினைவு தினத்தை முன்னிட்டு, சிறுவர் பகுதி நூலகம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை நகர சபைக்கு அருகில் இடம் பெற்ற இவ் வைபவம் உப தலைவர் என். மணிவண்ணன் தலைமையில் நடைபெற்றது.

பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி, டாக்டர் எஸ். கதிரவேல்பிள்ளை நூலகத்தைத் திறந்து வைத்தார்.

இவ் விழாவில், பருத்தித்துறை பிரதேச செயலர் ஆ. சிவசுவாமி, முன்னாள் நகர சபை செயலாளர் என். சோமசுந்தரம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

விளையாட்டு நிகழ்வுகள்

யாழ். மாவட்ட கல்வி வலயங்களுக்கு இடையே தெரிவு செய்யப்பட்ட பாடசாலை அணிகளின் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு யாழ். இந்து மைதானத்தில் நடைபெறும். பங்கு பற்றும் அணிகள் விவரம் வருமாறு:-

16 வயதுப் பிரிவு

யாழ். மத்திய கல்லூரி எதிர் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி.

18 வயதுப் பிரிவு

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி எதிர் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம். (க-86)

★ ★ ★

நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையேயான ஆண்களுக்கான எல்லே கால் இறுதிப் போட்டிகள் நாளை திங்கள் பிற்பகல் 3 மணிக்கு அரியாலை கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறும். (க-86)

★ ★ ★

ஊர்காவற்றுறை பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான வலைப்பந்தாட்டப் போட்டிகள் புனித மரியாள் பாடசாலை மைதானத்திலும், கரப்பந்தாட்டப் போட்டிகள் ஊர்காவற்றுறை பொது விளையாட்டு மைதானத்திலும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும் என்று விளையாட்டு உத்தியோகத்தர் அ. வசந்தன் அறிவித்துள்ளார். (க-16)

★ ★ ★

ஏழாலை மேற்கு சைவசன் மார்க்க வித்தியாசாலை வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அடுத்த மாதம் 3 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் செ. சிவநடராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

உடுவில் கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் அ. தற்பரானந்தன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்வார். [க-173]

சுந்தர ஆஞ்சநேயர் ஆலய மகா கும்பாபிஷேகம் நாளை

யாழ்ப்பாணம், ஜன. 28

இணுவில், மருதனார்மடம் அருளமிகு ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் ஆலயத்தின் மகா கும்பாபிஷேகம் நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

அன்றையதினம் அதிகாலை 5-30 மணிக்கு விக்கினேஸ்வர பூசையுடன் கிரியைகள் ஆரம்பமாகித் தொடர்ந்து கும்பாபிஷேகம் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடந்த 25 ஆம் திகதி தொடக்கம் கும்பாபிஷேகம் தொடர்பான கிரியாகாலநிகழ்வுகள் ஆலயத்தில் நடைபெற்று வருகின்றன. எண்ணெய்க் காப்புச் சாத்துதல் நேற்றும் நேற்று முன்தினமும் இரு தினங்களாக இடம் பெற்றன. எனினும் அடியார்களின் அதிகரித்த வருகையினால் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிவரை எண்ணெய்க் காப்புச்சாத்தும் நிகழ்வு நீடிக்கப்பட்டுள்ளதாக ஆலயக் குருக்கள் அறிவித்துள்ளார்.

நாளை காலை 7-33 மணி தொடக்கம் 8 மணி வரையான சுபவேளையில் ஆலயத்தின் பிரதமகுரு இ. சுந்தரேஸ்வரக்குருக்கள் தலைமையில் மகா கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.

நாளை நடைபெறவுள்ள கும்பாபிஷேகத்திற்கும் குடாநாட்டின் பல பகுதிகளிலிருந்தும் அடியார்கள் வருகை தருவர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மகா கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 45 நாள்கள் மண்டலாபிஷேகம் நடைபெறவுள்ளது. (உ-10-15-152-173)

மகா கும்பாபிஷேக சிறப்பு மலர்

நாளைய உதயனில் சுன்னாகம் துர்க்கா ஸ்ரேஷனேர்ஸ் ஸ்தாபனத்தினர் தயாரித்து வழங்கும் மருதனார்மடம் ஸ்ரீ ஆஞ்சநேயர் கோயில் மகா கும்பாபிஷேக சிறப்பு மலர் பிரசுரமாகிறது.

துன்னாலையில் இடம் பெற்ற

மிதிவெடிச் சம்பவம் தொடர்பாக ஐந்து பேர் பொலீஸாரிடம் சரண்

தென்மராட்சி, ஜன. 28

துன்னாலை வேம்படிப் பகுதியில் கடந்த 12 ஆம் திகதி இடம்பெற்ற மிதிவெடிச் சம்பவம் தொடர்பாக இதே இடத்தைச் சேர்ந்த — ஒரே குடும்பத்தைச் சேர்ந்த — மூவர் உட்பட ஐந்து பேர் நெல்லியடிப் பொலீஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளனர்

இந்த ஐந்து பேரும் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட போது அவர்களை பெப்ரவரி இரண்டாம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

காலையில் கடையைத் திறந்த வேளையில் அங்கு வைக்கப்பட்டிருந்த மிதிவெடியில் அகப்பட்டு வர்த்தகரான கணபதி அரசன் (வயது45) என்பவர் வலதுகாலை இழந்த நிலையில் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

இச்சம்பவம் தொடர்பாக படையினர் சுற்றி வளைத்துத் தேடுதல் நடத்தியதையடுத்து இந்த ஐந்து பேரும் பொலீஸில் சரணடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-117)

சீனி விலை திடீர் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 28

யாழ். குடாநாட்டில் சீனியின் விலை திடீரென அதிகரித்துள்ளது.

கொழும்பில் சீனியின் விலை 38 ரூபாவாக உயர்த்தப்பட்டதையடுத்தே குடாநாட்டிலும் ஒரு கிலோ சீனி 40 ரூபா முதல் 45 ரூபா வரை விற்கப்படுகின்றது.

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் கிலோ 38 ரூபாவுக்கு விற்பனையாகி வந்த சீனி 43 ரூபாவாக தற்போது அதிகரித்துள்ளது. (க-17)

கண்ணீர் அஞ்சலி

நீர்வேலி றோ. க. த. க. பாடசாலை
பகுதிநேர ஆங்கில ஆசிரியை

செல்வி பிருந்தா பத்மநாதன்

அவர்களின் பிரிவால் எமது பாடசாலைச் சமூகம் மிகவும் வேதனையடைகின்றது.

குடும்பத்தாருடன் இணைந்து ஆன்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
றோ. க. த. க. பாடசாலை,
நீர்வேலி. (83510)

கண்ணீர் அஞ்சலி

எமது சகோதர ஊழியர்

வே. குமரகுருபரசுந்தரம் (V. K. சுந்தரம்)

அவர்களின் அன்புத் தந்தையார்

இராமலிங்கம் வேலுப்பிள்ளை

(இளைப்பாறிய அதிபர்,
நெடுந்தீவு மேற்கு சைவப்பிரகாச வித்தியாலயம்)

அவர்களின் பிரிவுச் செய்தி கேட்டு வேதனை அடைவதுடன், அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஊழியர்கள்,
வட பிராந்திய போக்குவரத்துச் சபை,
கோண்டாவில்.
(83521)

இந்த வார இராசி பலன்

28-01-2001 - 03-02-2001



மாற்றம்

28. 1. 2001 இல் பூரட்டாதி, கும்பம் இராசியில் சந்திரன் நிற்கும்.

28 1. 2001இல் மீனம் இராசியில் வெள்ளிமாறும்

சமாதானப் பேச்சு என்ற பேச்சு, உலகநாடுகளின் நிர்ப்பந்தங்கள் தொடர்ந்தபடிஇருக்கும். 7. 2 2001— 13. 4 2001 செவ்வாய் விருச்சிகம் இராசியில் மாறும் காலத்தில் சமாதானப் பேச்சு சாதக சூழ் நிலையைக் கொடுக்க இடமுண்டு. இந்தியாவில் - தீவிரவாதிகள் மறைமுகத் தாக்கங்களைச் செய்வார்கள். அரசியலில் குழப்பநிலை இந்தியாவில் ஏற்பட இடமுண்டு. மேற்கு நாடுகளின் பொருளாதார அழுத்தங்கள் மத்திய கிழக்கு நாடுகளுக்கு பாதிப்புக்களைக் கொடுக்கும் எனக் கிரக நிலைகள் காட்டுகின்றன.

மேடம்

நம்பிக்கைப் பாத்திரமாக நாமிருந்து உண்மை, நேர்மையாக எல்லோரும் நடந்து வந்தால் பிரச்சினைகள் தானாக மறைந்து விடும். தொழில் நிலையில் மாற்றங்கள், வருமானச் சிறப்புக்கள் கொடுக்க இடமுண்டு. எதிர்ப்பாலாருடன் வாக்குக்கலகம் ஏற்படலாம். காணி பூமி சம்பந்தமான பேச்சுக்கள் தொடர இடமுண்டு. வயிற்று வலி, உஷ்ண பீடைகள், தோல் வருத்தங்கள், சளித்தொல்லை என்பன வரலாம். தூரதேசச் செய்திகளால் மனக்கஷ்டங்கள் வர இடமுண்டு. ஹோட்டல்துறை, மருந்து வகைத் துறை, இரும்புத்துறை, சினிமாத்துறை போன்றதுறையினர்களுக்கு அதிக முன்னேற்றங்கள் நடக்கும்.

★ அதிர்ஷ்டநாள்:— திங்கள்.

இடபம்

ஒருவருக்கு ஒருவர்பகைமை கொண்டு பழிக்குப் பழி வாங்க எண்ணுவார்களாயின் எவருமே இவ்வுலகில் மிஞ்சமாட்டார்கள். எனவே தொழில் ஸ்தானத்தில் வரும் மனக்சருத்து, பகைமைகளை மன்னித்துவிடுங்கள். இடமாற்றம் வரலாம். தொண்டை வருத்தம் நெஞ்சுப்படபடப்பு, சலவருத்தம் போன்ற தொல்லைகள் வரலாம். மருந்துச் செலவுகள் அதிகரிக்கலாம். வாகனத்தால் செலவுகள் வரும். தந்தைவழி உறவினர்களின்— உதவிகள் அல்லது செய்திகள் வரலாம் - நீதித்துறை, குருத்துறை, பாதுகாப்புத்துறை, மருந்துத்துறை போன்றதுறையினர்களுக்கு மாற்றங்கள் வர இடமுண்டு.

★ அதிர்ஷ்டநாள்:— திங்கள்.

மிதுனம்

இவ்வுலகில் பாசம், நேசம், அன்பு, காதல் என்பதெல்லாம் ஒன்றுடன் ஒன்றாகவும், ஒருயிருடன், ஒருயிராகவும் கலந்து பின்னிப் பிணைந்து உள்ளன. எனவே அடிக்கடி கோபிக்காதீர்கள். பெற்றோர் வழியிலிருந்து உதவிகள் கிடைக்கும். அரச அதிகாரிகள், பெரியவர்கள் உதவி தருவார்கள். தோல்வருத்தங்கள், அடிகாயங்கள், நாரிவலி, தலைவலி, களைப்பு என்பன வர இடம் உண்டு. பொருள்களில் கவனமாக இருக்கவும். மாற்றங்களை நிதானமாகச் செய்யவும். விவசாயத்துறை நீதித்துறை, சங்கீதத்துறை, கோயில்துறை, நகைத்துறை போன்ற துறையினர்கள் நற்பலன்கள் அடைவார்கள்.

★ அதிர்ஷ்டநாள்:— திங்கள்.

கடகம்

நல்லவர்கள் மற்றவர்கள் மீது ஒரு குறை காண்பார்களாயின் தள்ளி நின்று வாழ விரும்புவார்கள். தொழில் ஸ்தானத்தில் சில தீய சக்திகளின் தலையீடுகள் ஏற்படலாம். எனவே நிதானமாக இருக்கவும். குடும்பத்தில் சகோதரங்களுடன் வாக்குக் கலகம் ஏற்படலாம். யாத்திரைகள், இடமாற்றம், பிரயாணம் வரலாம். 'கடன்பட்டார் நெஞ்சம் போல' கலங்க நேரிடலாம். வயிற்று வருத்தம், தோல் வருத்தம், சல வருத்தம், மனப்பயம் என்பன ஏற்படலாம். வாகனத்தில் கவனம் தேவையாகும். எண்ணெய்த்துறை, அரசியல் துறை, வியாபாரத்துறை, இலக்கியத்துறை, நீதித்துறை, ஆசிரியத்துறை போன்ற துறையினருக்கு மாற்றங்கள் ஏற்பட இடமுண்டு.

★ அதிர்ஷ்ட நாள்கள்: திங்கள், சனி.

சிங்கம்

உலகத்தில் எப்பொருளின் எந்த நிறைக்கேட்டாலும் இறைவா? உன்னைத் தினமும் தரிசித்து. உன் பாதத் திருவடியில் இருக்கும் பேற்றை எனக்குத் தா எனப் பலபக்தர்கள் வேண்டியுள்ளார்கள். இந்நிலையை உங்கள்தொழில் ஸ்தானத்துடன் பின்னிப் பிணைத்துள்ளீர்கள். குற்றம் செய்தவர்களே தாம் குற்றமற்றவர்கள் என வாதாடும் காலமாகும். கிலிரின் அவசரப் புத்தி உங்கள் மனதை நோகச் செய்யும். எனினும் பொறுமையாக இருக்கவும். தொழில் ஸ்தானத்தில் பதற்ற நிலை, மறைமுக எதிர்ப்பு, வதந்தி பரப்புபவர்கள் போன்றவர்களின் தொல்லைகள் என்பன இருக்கும். உங்கள் நேர்ப்பாதையில் உறுதியுடன் சென்று கொண்டிருப்பீர்கள். உஷ்ண பீடைகள், கண் வருத்தம், கைகாலில் அடிபடல் என்பன வரலாம். வங்கித்துறை, நகைத்துறை, தோட்டத்துறை, மின்சாரத் துறை, மருந்துத் துறை, குருத்துறை போன்றவர்களுக்கு நன்மைகள் ஏற்பட இடமுண்டு.

★ அதிர்ஷ்ட நாள்: சனி.

கன்னி

உண்மையான நம்பிக்கையையே இறைவன் என்றும் ஏற்றுக்கொள்வான். வன்செயல் மனோபாவத்தால் பிறரைப் பயமுறுத்தி, பிரச்சினைகளைப் பெரிதாக்கி எவரும் எந்தக் காரியத்தையும் சாதித்து அதிக நன்மைகளை எந்தக் காலத்திலும் பெற்றுவிட முடியாது எனவே தொழில் ஸ்தானத்தில் எந்தவிதமான பிரச்சினைகள் வந்தாலும் பொறுமையாக நன்மைகள், இலாபங்கள் வரப் பாடுபடுங்கள். சிலர் அவசரப்படுவதனால் எத்தனையோ நல்லவர்களுக்குத் தீங்குகள் நடக்கின்றன. இறுப்புவலி, உஷ்ண பீடைகள், சளித் தொல்லைகள் என்பன வரப் பலன் உண்டு. பொருள் வரவுகள் வாய் பலன் உண்டு. சட்டத்துறை, பாதுகாப்புத்துறை, குருத்துறை போன்ற துறையினர்களுக்கு இலாபங்கள் அதிகரித்தபடி இருக்கும்.

★ அதிர்ஷ்ட நாள்: சனி

துலாம்

உங்களை நம்பி அநேகர் இருக்கின்றார்கள். எனவே நம்பிக்கையுடன் கடைசி வரை செயற்பட்டபடி இருங்கள். அதனால் இலாபங்களும் முன்னேற்றங்களும் அடைவீர்கள் பயந்து-பயந்து இருந்த காரியமொன்று முடிந்துவிட்ட நிலையில் ஒரு திருப்தி தான். எல்லாம் விதிவிட்ட வழியின்படிதானே நடக்கும். தொழில்ஸ்தானத்தில் விட்டுவிட்டுப் பலன் நடக்கும் தோல், கட்டி உபாதைகள், மனப்பதற்ற நிலை அடிக்கடி வரும். சளி வாய்வத் தொல்லைகள் ஏற்பட இடம் உண்டு. சிரித்துச் சிரித்துப் பேசி காரியத்தைச் சாதுரியப் படுத்துவீர்கள். செய்தித்துறை, சட்டத்துறை, பிரயாணத்துறை, ரீவித் துறை, போன்ற துறையினர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

★ அதிர்ஷ்டநாள்கள்: ஞாயிறு, சனி.

விருச்சிகம்

நல்லவற்றுக் காகவோ — தீயவற்றுக்காகவோ இவ்வுலகைச் சிலர் எதிர்த்தபடி இருக்கின்றார்கள். இவர்கள் கருதி கயதலம் உந்திச் செயற்பட்டபடி இருக்கின்றார்கள். எனவே நீங்கள் உங்கள் தொழில்ஸ்தானத்தில் நிதானமாக இருந்து வாருங்கள். உங்களைப் போன்ற நல்லவர்கள் வல்லவர்களை நம்பித்தான் இந்த நாடு — உலகம் இருக்கின்றது என நீங்கள் செயற்பட்டபடி இருக்கிறீர்கள் அது உண்மையாகும். நாகி, சிரசுவருத்தங்கள், நெஞ்சுப்படபடப்பு, உஷ்ண பீடைகள் என்பன இருக்கும். அயலவர்கள், நீங்கள் இருக்கும் இடத்திலுள்ளவர்களால் பதற்றம் அடைவீர்கள். நீதித்துறை, பாதுகாப்புத்துறை, மருந்துத் துறை போன்ற துறையினர்கள் அதிக நன்மைகள் அடைவார்கள்.

★ அதிர்ஷ்—நாள்கள்: ஞாயிறு, சனி.

தனுசு

தள்ளித் தள்ளி மெல்ல மெல்லப் போகிறவர்களை— நம்பமுடியாது — அவர்களை அனந்தறிந்து தெரிந்து கொள்வது கடினமாகும். எனவே உங்கள் தொழில்ஸ்தானத்தில் இப்படியானவர்களுடன் நிதானமாக இருக்கவும். தூரதேசச் செய்திகள் சிலருக்கு வர இடமுண்டு. உடல் வேதனை கொடுக்கும்—விண் தொல்லைகள் தேடிவரும் ஏன் கண்டபடி மற்றவர்களைப்பற்றிக்கதைக்கிறீர்கள் அதனால் உங்களைப் பற்றி நாலுபேர் பலவிதமாகப் பேசித்திரிகிறார்கள் என்பதனை நீங்கள் அறியாதவா? வயிற்றுப்பொருமல், குடல் வருத்தங்கள், சளித்தொல்லைகள், இரத்த வருத்தங்கள் என்பன வரஇடமுண்டு. தகைத்துறை, புடைவைத் துறை, பிரயாணத்துறை, குருத்துறை போன்றவர்களும் என்ன என்ன குழப்பங்களை இவ்வுலகில் செய்கிறார்கள். இதற்காக உலக நாடுகள் — அரசாங்கங்கள் இயங்காமல் விடுவதில்லை. எனவே நீங்களும் உங்கள் தொழில்ஸ்தானத்தில் உறுதியுடன் செயற்பட்டு இலாபங்களை அடைவீர்கள். கலகம் பிறந்து நியாயம் பிறக்கும். காலமாகும். குடும்பத்தில் கூடிய அக்கறை இருக்கும். பல காரியங்களைச் சாதனைப்படுத்துவீர்கள். கைகால்களில் அதிகநேர இருக்கும். வாய்வுத் தொல்லை குடல் வருத்தம், நாரிஉழைவு, மலச்சிக்கல், தலையிடி பயப்பாடு என்பன மாறி மாறி வரும். அதிகம் யோசிக்காமல் வைத்தியம் செய்து வர சுகம் வரும். அரசியல்துறை, நீதித்துறை, வியாபாரத்துறை, ஆசிரியத் துறை, போன்ற துறையினர்கள் அதிக நன்மைகள் அடைவார்கள்.

★ அதிர்ஷ்டநாள்கள்:- திங்கள், சனி,

மகரம்

சாவு என்பது இயற்கையின் நியதியாகும். இதற்காக அழுவதனால் எவ்வித இலாபமும் இல்லை. இறை நம்பிக்கை உறுதி நிலையால் பலர் நன்மைகள் அடைகின்றார்கள். எனவே உங்கள் தொழில்ஸ்தானத்தில் ஊக்கமாக இருங்கள். வீண் வதந்திகளைப் பரப்பாதீர்கள். அதனால் உங்களுக்கு இழப்புகள் வருகின்றன. உங்கள் புத்தியால் பொருள் வரும். உணர்ச்சிவசப்பட்டுப் பிரச்சினைகளை வெளிக்காட்டுவதனால் நஷ்டம் அடைவீர்கள். பெரியார்களின் உதவிகள் கிடைக்கலாம். சிலருக்கு பிரயாணப்பலன்கள் கொடுக்கும். குழப்ப நிலை — முழங்கால் வருத்தம், சளி வருத்தம், மூட்டு வலி. நரம்புச் சோர்வு என்பன கொடுக்கும். கோயில் பணிகள் வியாபாரம், மருந்துத்துறை கூலி உழைப்பு போன்ற துறையினர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

★ அதிர்ஷ்டநாள்கள்:- திங்கள், சனி.

கும்பம்

மக்களை நம்பவைக்க அரசியல்வாதிகளும் — தீவிவாதிகளும் என்ன என்ன குழப்பங்களை இவ்வுலகில் செய்கிறார்கள். இதற்காக உலக நாடுகள் — அரசாங்கங்கள் இயங்காமல் விடுவதில்லை. எனவே நீங்களும் உங்கள் தொழில்ஸ்தானத்தில் உறுதியுடன் செயற்பட்டு இலாபங்களை அடைவீர்கள். கலகம் பிறந்து நியாயம் பிறக்கும். காலமாகும். குடும்பத்தில் கூடிய அக்கறை இருக்கும். பல காரியங்களைச் சாதனைப்படுத்துவீர்கள். கைகால்களில் அதிகநேர இருக்கும். வாய்வுத் தொல்லை குடல் வருத்தம், நாரிஉழைவு, மலச்சிக்கல், தலையிடி பயப்பாடு என்பன மாறி மாறி வரும். அதிகம் யோசிக்காமல் வைத்தியம் செய்து வர சுகம் வரும். அரசியல்துறை, நீதித்துறை, வியாபாரத்துறை, ஆசிரியத் துறை, போன்ற துறையினர்கள் அதிக நன்மைகள் அடைவார்கள்.

★ அதிர்ஷ்டநாள்கள்:- திங்கள், சனி,

மீனம்

இவ்வுலகில் ஒருவரை ஒருவர் ஏதாவது சொல்லி ஏமாற்றியபடி இருப்பதனால் பல இழப்புக்களைச் சந்தித்தபடி இருக்கின்றார்கள். எனவே நீங்கள் தொழில்ஸ்தானத்தில் நல்லவற்றைச் செய்து உண்மைப்படிநடந்து வாருங்கள். அதனால் நன்மைகள் ஏற்படும். குடும்பத்தில் கலகலப்பு இருக்கும் சளிக்காய்ச்சல் இடுப்பு வலி, சுவாச நோய்கள், கை கால் பிடிப்பு என்பன வரும். தைலங்கள் பூசுங்கள். கீரை வகைகளை உணவில் சேர்த்துக் கொள்ளுங்கள். பிரயாணத்துறை, கடல்துறை, ஹோட்டல் வியாபாரம், குருத்துறை போன்ற துறையினர்களுக்கு மாற்றங்கள் அதிகரிக்கும். ஏப்ரல் 2001 வரையும் கவனமாக இருக்கவும். தெய்வ வழிபாடு முக்கியமாகும்.

★ அதிர்ஷ்டநாள்கள்:- திங்கள், சனி.

மகாதேவா ஜோதிடம்

பாதாள உலகக் கும்பல்களுக்கு துப்பாக்கி வழங்கியவர் கைது!

கொழும்பு, ஜன. 28

நூற்றுக்கும் மேற்பட்ட உள்ளூர் துப்பாக்கிகளைத் தயாரித்து பாதாள உலகக் கோஷ்டிகளுக்கும், இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்களுக்கும் விநியோகித்து வந்த கொல்லவேலை செய்பவர் ஒருவரை மாதம்பைப் பொலீஸார் கைதுசெய்துள்ளனர்.

உரப்பை ஒன்றுடன் மாதம்பை பஸ் நிலையத்தில் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடிய இவரைப் பற்றிப் பொலீஸாருக்குக் கிடைத்த தகவலின் பேரில் அங்கு விரைந்த பொலீஸார் இவரை விசாரணைக்குட்படுத்தி உரப்பையை சோதனையிட்டபோது அதற்குள் சில உள்ளூர் துப்பாக்கிகளை அவதானித்து அவரைக் கைது செய்தனர்.

அத்துடன் அப்பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த மற்றொரு பையிலிருந்து ரி. 56 ரகத் துப்பாக்கி ரவைகளும், துப்பாக்கிகள் தயாரிப்பதற்கான உதிரிப்பாகங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

பொலீஸ் நிலையத்தில் இவர் தீவிர விசாரணைக்குட்படுத்தப்பட்டபோது இதுவரை நூற்றுக்கும் மேற்பட்ட உள்ளூர் துப்பாக்கிகளைத் தயாரித்துப் பாதாள உலகக் கோஷ்டிகளுக்கும், இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்களுக்கும் விநியோகித்தது தெரியவந்துள்ளது.

இந்தத் துப்பாக்கிகளைக் கொள்வனவு செய்தவர்களைப்பொலீஸார் தற்போது தேடி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

காலனோடை செல்லும் பக்தர்களுக்கு நாளை விசேட பஸ்சேவை

காரைநகர், ஜன. 28

காரைநகர் பானாவோடை ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயகும்பாபிஷேகத்தையொட்டி நாளை திங்கட்கிழமை காலை 5.45 மணி முதல் யாழ். பஸ் நிலையத்தில் இருந்து கோயில் வரை விசேட பஸ்சேவைகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வெளியிடங்களில் இருந்து வருபவர்கள் பொன்னாலை காவலரணில் காலை 5 மணி முதல் அனுமதிக்கப்பட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக ஆலய அறங்காவல் குழுவினர் தெரிவித்துள்ளனர். (ஒ)

தொழிற்சங்கக் கூட்டம்

கைத்தொழில் பொதுத் தொழிலாளர் சங்கத்தின் (லங்கா கிமெந்து நிறுவனக் கிளை) பொதுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இணுவிலில் உள்ள தற்காலிக பணிமனையில் நடைபெறவுள்ளது.

முன்னாள் தொழிற்சங்கத் தலைவர் பெர. தங்கராஜா இக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளார். (ஐ)

வாழ்த்துகிறோம்

வேலுப்பிள்ளை மார்க்கண்டு

கைதடி முன்னாள் கிராம உத்தியோகத்தரும், கைதடி தக்கடியன் புலம் ஞானவைரவர் தேவஸ்தான தலைவருமாகிய

திரு. வேலுப்பிள்ளை மார்க்கண்டு

அவர்கள் 15 – 01 – 2001 ஆம் திகதி கொழும்பு உயர் நீதிமன்றத்தில் அகில இலங்கை சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டதை விட்டு எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

கைதடி வாழ் மக்கள்

(83438)

ஸ்ரீலங்கா தேசிய

நிர்மாண ஒப்பந்தகாரர் சங்கத்தின் யாழ். பிராந்தியக் கிளை கலந்துரையாடல்

காலம்: 4-2-2001 ஞாயிறு மு ப. 10.30
இடம்: 14/A, அன்னசத்திரலேன், யாழ்ப்பாணம்.

அங்கத்தவர்களுக்கும், அனைத்து ஒப்பந்தகாரர்களுக்கும் இவ்வருட வேலைத் திட்டங்கள் பற்றிய முக்கிய கலந்துரையாடல் நிகழவுள்ளது. இந்நிகழ்வில் அங்கத்தவர்களையும், அனைத்து ஒப்பந்தகாரர்களையும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

[83343] தலைவர்.

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மாரக்கண்டு இராஜரட்ணம்

(கணனி விஞ்ஞானபீட எழுதுவினைஞர் - யாழ். பல்கலைக்கழகம்)

மலர்வு 20 - 02 - 1953 உதிர்வு 09 - 02 - 2000

திதி:- 28 - 01 - 2001 தைச் சதுர்த்தி

ஈருடற்கு ஒருயிராய் இணைந்திருந்தோம் எட்டரையாண்டு
என்றனுயிர்க் கணவரே நீர் எனைப்பிரிந்து போயின்று
ஓராண்டு சென்றதையா உயிரில்லா உடலானேன்
கொடியநோய் வந்துன்னைக் கொடுமை செய் வேளையிலே
எத்தனைதான் விலைகொடுத்தும் உங்களுயிர் காத்திடவே
என்னாலே ஆனதெல்லாம் நான்செய்தும் வீணாச்சே!
கொடுநோயின் பிடியினிலும் வாடாத உன்வதனம்
கடும்துன்பம் துயர்களையும் காட்டாத உன்இயல்பு
பிறரெவர்க்கும் துன்பமெதும் நினைக்காத உன் உள்ளம்
தனக்கில்லா விட்டாலும் தக்கார்க்கு ஈயும்கை
கடமையதே கண்ணாக வாழ்ந்திட்ட உன் வாழ்வு
திடமான உன்மனமும் சிலைபோலே நிலைத்திருக்கும்
எம்பெருமான் திருவடியில் என்னுயிரே நீர் இருப்பீர்
இங்கிருந்தென் மனக்கோயிலில் உமை இருத்தி நான்தொழுவேன்

உமது பிரிவால் துயருறும்
அன்பு மனைவி
திருமதி றஞ்சலாதேவி இராஜரட்ணம்

வடலித்தோட்டம்,
மானிப்பாய் வடக்கு,
மானிப்பாய்.

(83381)

ஜனாதிபதி பதவி விலகுவதற்கு

இதுவே கடைசிச் சந்தர்ப்பமாம்!

நாடு அழிவும் பாதையில் என்கிறார் ரணில்

கொழும்பு, ஜன. 28

நாட்டின் பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள மோசமான நிலை காரணமாக நாடு அழிந்து கொண்டு போகின்றது. இதன்காரணமாக ஜனாதிபதி பதவியில் இருந்து விலகுவதற்கான கடைசிச் சந்தர்ப்பம் ஒன்று சந்திரிகா குமாரதுங்கவுக்கு தற்சமயம் ஏற்பட்டுள்ளது.

இப்படிக் கூறியுள்ளார் ஐ. தே. கவின் தலைவரும் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க.

ஐ. தே. க. ஆரம்பித்துள்ள 'யுனைட்டட் நெற்' என்ற வெப்தளத்தின் அங்குரார்ப்பண வைபவம் நேற்று முன்தினம் கொழும்பில் இடம் பெற்றது. அதில் கலந்து கொண்டு பேசுகையில் அவர் இப்படிக் கூறினார்.

ஐ.தே.கவின் கோட்டேத் தொகுதி அமைப்பாளரான ரவி கருணநாயக்க தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

அரசின் தவறான — திட்டமிடப்படாத — அணுகுமுறையால் நாடு அழிவை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது. இன்றைய மோசமான நிலையால் மக்கள் தமது வாழ்க்கையைச் சீராக மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. மக்கள் மீது சுமத்தப்பட்டுள்ள சுமையைக் குறைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். பொருவாதாரச் சீர்திருத்தம் என்று ளாயளவில் மட்டுமே அரசு பேசுகின்றது. இன்றுள்ள நிலைமையை சீராக்க இந்த அரசால் முடியாது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பதவி விலக இறுதிச் சந்தர்ப்பம் ஒன்று இன்று வந்துள்ளது. இதை அவர் சரியாகப் புரிந்து நடக்காவிட்டால் மக்களே அவரை விரட்ட வேண்டிய நிலை ஏற்படும் —என்றார் ரணில்.

(ஐ-3)

பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஜன. 28

சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலையின் பரிசளிப்பு விழாவும் நூல்வெளியீடும் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு அதிபர் இ. கணேசராசா தலைமையில் வித்தியாசாலையில் நடைபெறவுள்ளது.

(ஐ-10)

முத்திரை தட்டுப்பாடு

வடமராட்சி, ஜன. 28

வடமராட்சிப் பகுதியில் முத்திரை வகைகளுக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

இப்பகுதியில் உள்ள தபால் நிலையங்களில் அனைத்து கட்டணங்களிலான முத்திரை வகைகளை பெறமுடியாத நிலை இருந்து வருகிறது.

(ஐ 173)

செஞ்சிலுவை அழைப்பு

யாழ்ப்பாணம், ஜன. 28

மீசாலை பழைய ரயில் நிலையத்துக்கு அருகில் வசிக்கும் கந்தையா ரத்தினம் என்பவரை தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு கேட்டுள்ளது.

(உ-3)

பாடசாலை அலுவலகம் உடைக்கப்பட்டுச் சூறை

கோப்பாய், ஜன. 28

ஊரெழு கணேச வித்தியாலயத்தில் அலுவலகக் கதவு இரவுவேளை உடைக்கப்பட்டுப் பொருள்கள் சூறையாடப்பட்டுள்ளன.

பாடசாலைக்கு அன்பளிப்புச் செய்யப்பட்ட வானொலிப் பெட்டி, மாணவர்களுக்கான கல்வி உபகரணங்கள் போன்றவையே கடந்த 25 ஆம் திகதி இரவு திருடப்பட்டுள்ளன.

இது தொடர்பாகக் கோப்பாய்ப் பொலீஸார் விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர். (க-72)

கட்டாக்காலி நாய்கள் ஒழிப்பு

வடமராட்சி, ஜன. 28

மத்திகைப் பகுதியில் கட்டாக்காலி நாய்கள் பிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டு வருகின்றன.

பருத்தித்துறை பிரதேச சபையினால் இவை பிடிக்கப்பட்டு வருகின்றன.

(ஐ-173)

கிராம அபிவிருத்திச் சங்கம் புனரமைப்பு

கோப்பாய் ஜன. 28

சுமார் 15 வருட காலம் புனரமைப்புச் செய்யப்படாதிருந்த கோப்பாய் தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கம் மிக விரைவில் புனரமைக்கப்படவிருக்கின்றது.

இதற்கான நடவடிக்கைகளை வலி. கிழக்குப் பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் கே. ஐங்கரவேலும், முன்னாள் செயலாளர் எம்.கே இளையப்பாவும் மேற்கொண்டு வருகின்றனர்.

(க-72)

ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

தீவகம் வடக்கு ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நாளை மறுதினம் செவ்வாய்க் கிழமை காலை 10.00 மணிக்கு ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் உதவி அரசாங்க அதிபர் ஜே. எக்ஸ். செல்வநாயகம் தலைமையில் நடைபெறும்.

(ஐ-73)

முறைசாராப் பயிற்சிக்கு விண்ணப்பம்

வடமராட்சி, இந்து மகளிர் கல்லூரியின் முறைசாராக் கல்விப்பிரிவினால் ஆரம்பிக்கப்பட உள்ள கற்கை நெறியில் பயில விரும்புவோர் விண்ணப்பப் படிவங்களை கல்லூரியில் பெற்று இம்மாத இறுதிக்குள் பூர்த்தி செய்து தருமாறு அதிபர் செல்வி அ. கனகரத்தினம் தெரிவித்துள்ளார். (ஐ-10)

உ
குருமயம்
கைதடி

சுவாமி சச்சிதானந்த செல்லம்மா

அம்மையார் அவர்களின்

முதலாம் வருடக் குருபூசை

காலம்:- 02-02-2001 வெள்ளிக்கிழமை காலை 9.30 மணி

இடம்:- தெல்லிப்பழை அருள்மிகு துர்க்காதேவி தேவஸ்தான அன்னபூரணி மண்டபம்

தலைமை:-
சிவத்தமிழ்ச்செல்வி
கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி
அவர்கள்

"ஆத்மீக நெறியின் குருவழிபாடு"
பேராசிரியர் நா. ஞானகுமாரன் அவர்கள்
[மெய்யியல் துறை யாழ். ப. கழகம்]

பஜனை:- திருமதி கி. சிவலோஜினி (B.A)
அவர்களின் தலைமையில் ஆச்சிரம மாணவிகளும், துர்க்கா மகளிர் இல்லப்பிள்ளைகளும்.

சிறப்புரைகள்:-
சுவாமி சச்சிதானந்த செல்லம்மா அம்மையாரின் அருட்கடாட்சம் பெற்ற அடியார்கள், அன்பர்கள். அடியார்கள் யாவரும் இந்நிகழ்வில் கலந்து குரு அருள் பெற்று மகேஸ்வர பூசையிலும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

இ. குழந்தைவடிவேலு J.P.
தலைவர்

சு. செல்வராஜா G.S
பொதுச்செயலாளர்

பொ. கந்தசாமி A.R
நிதிச்செயலாளர்

ஸ்ரீ சச்சிதானந்த ஆச்சிரமம் கைதடி

விளம்பர அன்பளிப்பு:

ஆனந்தம் சீயாக்காய்ப் பவுடர்

தயாரிப்பாளர்கள்: கைதடி

மொத்தமாகக் கிடைக்குமிடம்:

ஆனந்தா ஸ்ரோர்ஸ்

மானிப்பாய். T.P- 2762

[83439]

கப்பல் கட்டணத்தை ரூபாவில் அறவிடப் பின்னடிப்பது ஏன்?

யாழ். வணிகர் கழகம் கேள்வி

யாழ்ப்பாணம்.ஜன.28

குடாநாட்டுக்குப் பொருள்கள் ஏற்றி வரும் கப்பல்களுக்கான கட்டணத்தை இலங்கை நாணயத்தில் வழங்க விடுக்கப்பட்ட கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக டொலரின் பெறுமதி அதிகரிக்க, பொருள்களின் விலைகளும் அதிகரிக்கின்றன.

யாழ்.வணிகர் கழகம் மேற்கண்ட தகவலை வெளியிட்டுள்ளது.

வணிகர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை விளக்குவதற்காக அவர்கள் ஏற்பாடு செய்த பத்திரிகையாளர் சந்திப்பிலேயே இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

'மேர்க்கன்ரைல்' சிப்பிங் கம்பனியால் குடாநாட்டு மக்களுக்கு விடுக்கப்பட்டுள்ள அறிவித்தல் உண்மைக்குப் புறம்பானதாகும். தமது தவறுகளை மறைப்பதற்காக அவர்கள் மேற்படி அறிக்கையை வெளியிட்டுள்ளனர்.

வர்த்தகர்கள் என்ற ரீதியிலும் நுகர்வோர் என்ற ரீதியிலும் நாம் எதிர்நோக்கும் போக்குவரத்துப் பிரச்சினைகள் தொடர்பாக பொது மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும்.

யாழ்ப்பாணத்துக்கு 1990 ஆம் ஆண்டில் இருந்து தரைவழிப்பாதை இல்லாத காரணத்தால் கப்பல் மூலமாகவே பொருள்களை குடாநாட்டிற்கு ஏற்றி வருகின்றோம்.

இதற்கான கப்பற் கட்டணமாக 45 அமெரிக்க டொலர் வரை கப்பல் கம்பனியால் அறிவிடப்பட்டது. ஓர் அமெரிக்க டொலரது பெறுமதி 70 ரூபாவில் இருந்து நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றது. இந்நிலையிலும் கப்பல் கம்பனி தனது கட்டணத்தைக் குறைக்கவில்லை.

இதன் பின்னர் நாம் கப்பலில் பொருள்கள் ஏற்றுவதை இடைநிறுத்தி போராட்டம் நடத்திய பின்னரே 30 அமெரிக்க டொலராகக் குறைத்துள்ளனர். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவர்கள் தாமாக கப்பல் கட்டணத்தைக் குறைக்கவில்லை. எமது அழுத்தம் காரணமாகவே கப்பல் கட்டணத்தைக் குறைத்தனர்.

'மேர்க்கன்ரைல் சிப்பிங் கம்பனி' இலங்கையில் பதியப்பட்டு, இலங்கைச் சிப்பந்திகளைக் கொண்டு உள்நாட்டுக்குள் மட்டும் சேவையைச் செய்து வருகின்றது. தனது கொடுப்பனவுகளையும் இலங்கை ரூபாவிலேயே மேற்கொண்டு வருகிறது.

ஆனால் கப்பல் கட்டணத்தை எம்மிடம் அறவிடும் போது மட்டும் அமெரிக்க டொலரில் அறவிடுகின்றது.

கப்பல் கட்டணத்தையும் இலங்கை ரூபாவிலேயே அறவிட வேண்டும். இந்தக் கோரிக்கையை நாம் பல தடவைகள் வடக்கு புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சரிடம் முன்வைத்தோம்.

இது தொடர்பாக இதுவரை எமக்கு எதுவித பதிலும் கிடைக்கவில்லை. இன்றும் இந்தக் கோரிக்கையை வலியுறுத்துகின்றோம். யாழ்.மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றிணைந்து கப்பல் கட்டணத்தை இலங்கை ரூபாவில் வசூலிப்பதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு தர வேண்டும்.

கப்பல் கம்பனி எம்மிடமிருந்து பொருள்கள் சேவைகள் வரியை அறவிடும் போதும் அமெரிக்க டொலரிலேயே அறவிடுகிறது. ஆனால் அரசிற்கு வரியைச் செலுத்தும் போது மட்டும் இலங்கை ரூபாவில் செலுத்துகின்றது. இதன் மூலம் குடாநாட்டு மக்களின் பணத்தினை வர்த்தகர்களாகிய எமக்கு ஊடாகக் கப்பல் கம்பனியே கொள்ளையடித்து வருகின்றது.

கப்பலில் பொருள்களை நாம் ஏற்றும் போது அதற்குத் தாமே பொறுப்பு என்று கப்பல் கம்பனியால் உறுதியளிக்கப்பட்டது. இன்று 5 கப்பல்கள் கடலில் மூழ்கியுள்ளன. இவற்றில் ஏற்றப்பட்ட வர்த்தகர்களின் பொருள்களுக்கு ஏற்பட்ட நஷ்டஈடு தொடர்பாக இன்றுவரை எவ்வித கொடுப்பனவுகளும் தரப்படவில்லை.

ஆனால் காப்புறுதி கம்பனியிடம் இருந்து இதற்கான நஷ்டஈட்டை கப்பல் கம்பனி பெற்றுள்ளது.

எனவே இந்த விடயங்கள் தொடர்பாக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினர்கள் ஒன்றிணைந்து செயற்பட்டு எமது கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும்.

பொருள் சூறை

கொழும்பில் இருந்து பொருள்களை கப்பல் மூலமாக குடாநாட்டிற்கு கொண்டுவரும் போது பொருள்களும் சூறையாடப்படுகின்றன. இந்த விடயத்தில் யாழ்.அரச அதிபருக்கும் தொடர்புள்ளதால் அவர் இது குறித்து விசாரிக்க வேண்டும்.

கப்பலில் இருந்து பொருள்களை இறக்கும் போது கொழும்பில் கப்பலில் ஏற்றப்பட்ட பொருள்பட்டியலுடன் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்டே இறக்கப்படுகின்றன.

எனவே கப்பலில் பொருள்கள் சூறையாடப்பட்டால் இது தொடர்பாக அரசாங்க அதிபரால் நியமிக்கப்பட்டுள்ள அதிகாரிகளுக்கு உடனடியாகத் தெரியவரும். அப்படிப் பொருள்கள் குறையும் போது எவ்வாறு அந்த அதிகாரியால் அனைத்து பொருள்களும் சரியாக வந்து இறங்கியுள்ளன என்று கப்பல் தலைவருக்கு உறுதிப்படுத்தி கடிதம் வழங்க முடியும்?

இந்தப் பொருள்கள் பருத்தித்துறை இறங்குதுறையிலேயே களவாடப்படுகின்றன என்பதை அந்த அதிகாரிகள் தமது கையெழுத்து மூலம் நிரூபித்துள்ளார்கள். ஆனால் இது தொடர்பாக அரச அதிபரிடம் கேட்டால் தனக்குத் தெரியாது என்று கையை விரிக்கின்றார்.

இவற்றைக் கருத்தில் எடுத்தே வர்த்தகர் சங்கமும் வர்த்தக சம்மேளனமும் ஒன்றிணைந்து பருத்தித்துறை இறங்குதுறையில் பொருள்களை இறக்கும் போது எம்மிடம் பொறுப்பை ஒப்படையுங்கள் என்று பல தடவைகள் கோரிக்கை விடுத்தோம். இதற்கு உரிய பதில் இதுவரை எமக்குக் கிடைக்கவில்லை.

கப்பலில் களவு போகும் பொருள்களுக்கும் தமக்கும் தொடர்பு இல்லை என்றால் இவர்கள் எதற்காக கொழும்பில் ஏற்றப்பட்டுள்ள அனைத்துப் பொருள்களும் இங்கே சரியாக இறக்கப்பட்டுள்ளன எனக் கூறிக் கையெழுத்து இட வேண்டும்?

லொறிக் கூலி

பருத்தித்துறையில் இருந்து பொருள்களை லொறியில் ஏற்றுவதற்கு ஒரு லொறிக்கு 200 ரூபா வீதம் கச்சேரியால் அறவிடப்படுகிறது. ஆனால் தொழிலாளர்களுக்கு 125 ரூபா படியே வழங்கப்படுகிறது. அத்துடன் தொழிலாளர்களையும் குறைவாக நியமித்து இதன்மூலமும் பெருந் தொகையான பணத்தை மோசடி செய்து வருகிறார்கள். இவை அனைத்தையும் கவனத்தில் எடுத்து பொதுமக்களின் நன்மை கருதி உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோருகின்றோம்.

இவ்வாறு வணிகர் கழகப் பிரதிநிதிகள் விளக்கமளித்தனர்.

(ஐ-6-5-10)

யாழ். ஆஸ்பத்திரியில் 'பேர்ஸை' பறிகொடுத்த பெண்மணி

யாழ்ப்பாணம், ஜன.28

யாழ். ஆஸ்பத்திரியில் வெளி நோயாளர் பிரிவுக்கு - கடந்த வெள்ளிக்கிழமை சிகிச்சைபெற வந்த பெண்மணி ஒருவர் தமது 'பேர்ஸைப்' பறிகொடுத்தார்!

'பேர்ஸில்' 21,600 ரூபா பணமும் ஒரு சோடி தோடும் இருந்தன என்று சம்பந்தப்பட்ட பெண் தெரிவித்தார்.

தெல்லிப்பழை பன்னாலையைச் சேர்ந்த இராஜேஸ்வரி என்ற இந்தப் பெண் இது குறித்து ஆஸ்பத்திரிப் பொலீஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

இதேவேளை -

அந்தக் கறுப்பு நிற 'பேர்ஸ்' ஆஸ்பத்திரியில் உள்ள சைக்கிள் தரிப்பிடப் பகுதியில் எறியப்பட்டு இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

நோயாளர்கள் தேவைக்கு அதிகமான பணத்துடனும் நகைகளுடனும் ஆஸ்பத்திரிக்கு வர வேண்டாம் என்று நிர்வாகத்தினர் பல தடவைகள் எச்சரித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (சு-139)

மூவர் மீதான சித்திரவதை குறித்து விசாரிக்க சி.ஐ.டி. குழு யாழ்.வரும்

உரியவர்களைத் தொடர்பு கொள்ளக் கோரிக்கை

யாழ்.மாவட்டத்தில் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருந்த சமயம் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ள மூவர் தொடர்பான வாக்குமூலங்களைப் பெறுவதற்கு குற்றப்புலனாய்வுக் குழு ஒன்று யாழ்ப்பாணம் வரவிருக்கின்றது.

குருந்தரைச் சேர்ந்த ஞானசிங்கம் அன்ரோ குலசிங்கம், அரியாலை ஸ்ரான்லிக் கல்லூரி அவனியுவைச் சேர்ந்த வல்லிபுரம் சுகந்தி, சாவகச்சேரி, சங்கத்தானையைச் சேர்ந்த புஸ்பமலர் ஆகியோர் தொடர்பாகவே இந்தக்குழு விசாரணைகளை மேற்கொள்ளவிருக்கின்றது.

இந்த மூவர் தொடர்பான விசாரணைகளைத் தாம் தற்சமயம் மேற்கொண்டு வருவதாகவும் -

பிரஸ்தாப நபர்கள் அல்லது அவர்களின் உரித்துடையோரின் வாக்குமூலங்களைப் பெற குழு யாழ்ப்பாணம் வரவிருக்கின்றது என்றும் -

குற்றவியல் புலனாய்வுத் திணைக்களப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இந்தக்குழு யாழ்.வர வசதியாக சம்பந்தப்பட்டவர்களைத் தம்முடன் தொடர்பு கொண்டு பெருத்தமான திகதியைத் தெரிவிக்குமாறும் அவர் கேட்டுள்ளார்.

இது தொடர்பாக "பணிப்பாளர், குற்றப்புலனாய்வுத் திணைக்களம், த.பெ.இல.534, கொழும்பு" என்ற முகவரிக்கு அவர்களைத் தொடர்பு கொள்ளுமாறு அவர் கோரியுள்ளார். (உ-3)

உள்ளூராட்சித் தேர்தல்கள் வட்டார அடிப்படையில்!

பழைய முறையில் நடத்த முடிவு

கொழும்பு,ஜன.28

அடுத்து வரும் மாதங்களில் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ள உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல்களை பழைய தேர்தல் முறைகளின்படி - வட்டார ரீதியில் - நடத்துவதற்குப் பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் செயற்குழு முடிவு செய்துள்ளது.

கடந்த வியாழக்கிழமை ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற இந்தச் செயற்குழுக் கூட்டத்தில் உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்துவது தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

1977 ஆம் ஆண்டு முன்பு நடைபெற்ற முறையில் இருந்த - வட்டார ரீதி யிலான - தேர்தல் முறையின் கீழ் இந்தத் தேர்தலை நடத்துவது என்றும் -

இந்த முறையை அமுல் செய்யும் வகையில் சட்டத் திருத்தத்தை மேற்கொள்வது என்றும் - முடிவு செய்யப்பட்டது.

அதே சமயம் -

இந்த வட்டார முறையிலான தேர்தல் முறையைக் கைவிட வேண்டும் என்று கோரி மலையகத்தில் 17 தொழிற்சங்கங்கள் கண்டனக் கூட்டம் ஒன்றை நடத்தவிருக்கின்றன.

மலையகத்தின் பிரதான கட்சிகளான இ.தொ.கா, மலையக மக்கள் முன்னணி, ஆகியவற்றின் தலைவர்களும் இதில் பங்குபற்றுகின்றனர். (உ-3)

குடாநாட்டுக்கான ஐ.நா. திட்ட உதவி கைநழுவிப் போனது!

யாழ்ப்பாணம்.ஜன.28

கால்நடை சுகாதாரத் திணைக்களத்தின் அசமந்தப் போக்கினால் யாழ்.மாவட்டத்தில் நல்லின ஆடுகளின் உற்பத்தி நிறுத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தியாவில் இருந்து நல்லின ஆடுகளை இறக்குமதி செய்வதற்கென ஐ.நா.அபிவிருத்தித்திட்ட (யு.என்.டி.பி) நிறுவனத்தினால் 3 கோடியே 55 லட்சம் ரூபா வழங்கப்பட்டது.

ஆனால் கடந்த இரண்டரை வருடங்களாக இந்த ஆடுகள் இறக்குமதி செய்யப்படாமையினால் இத் திட்டத்துக்கு வழங்கப்பட்ட நிதி யு.என்.டி.பி. நிறுவனத்தினால் மீளப்பெறப்பட்டு விட்டது.

ஆடுகளை இறக்குமதி செய்வதற்கென நிதியைப் பெற்றுக்கொண்ட கால்நடை அபிவிருத்தி அமைச்சு இந்த விடயத்தில் அக்கறையுடன் செயற்படாமையினால் உரிய நேரத்தில் ஆடுகள் வந்து சேரவில்லை.

இதனால் நல்லின ஆடுகளின் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. அத்துடன் யாழ்ப்பாண மக்களுக்குக் கிடைக்க வேண்டிய பெரிய திட்டமும் வீணாகப் பறிபோய் விட்டதாக யு.என்.டி.பி. நிறுவன அதிகாரிகள் கவலை தெரிவித்தனர். (க-5)

பாடசாலைச் சிறுவர் செயற்பாட்டுக் குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம்.ஜன.28

யாழ்.பிரதேச செயலகத்தினால் பாடசாலைச் சிறுவர் செயற்பாட்டுக் குழுக் கூட்டம் இரு நாள்கள் நடத்தப்படவுள்ளன.

நாளை திங்கட்கிழமை புனித சாள்ஸ் மகா வித்தியாலயத்திலும் மறுதினம் செவ்வாய் புனித ஜேம்ஸ் மகளிர் பாடசாலையிலும் பிற்பகல் ஒரு மணிக்கு இந்தக் குழுக் கூட்டம் நடைபெறும். (க-5)

கடன் திட்டம் விஸ்தரிப்பு

யாழ்ப்பாணம்.ஜன.28

ஐநா. அபிவிருத்தித்திட்ட (யுஎன்டிபி) நிறுவனத்தினால் தெல்லிப்பழை மற்றும் தீவுப்பகுதிகளில் அமுல் செய்யப்பட்டுள்ள கிராமியக் கூட்டுறவு வங்கிகள் மூலமான சுழற்சி முறைக்கடன் திட்டம் குடாநாட்டின் பல இடங்களுக்கும் விஸ்தரிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மீளக்குடியமர்ந்த மக்களின் சுய தொழில் முயற்சியை மேம்படுத்தும் நோக்குடன் இத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. தெல்லிப்பழை, தீவுப்பகுதிகளில் அமுல் செய்யப்பட்ட இந்தக்கடன் திட்டத்தினால் ஆயிரத்து 500 பேர் பயனடைந்துள்ளனர்.

இத் திட்டத்தின் கீழ் 5 ஆயிரம் ரூபா முதல் 50 ஆயிரம் ரூபாவரை ஒருவருக்கு கடன் வழங்கப்பட்டு வருகிறது. (க-5)

திருவாசக முற்றோதல்

யாழ்ப்பாணம்.ஜன.28

மல்லாகம் நீலியம்பனை விநாயகர் திருக்கோயிலில் திருவாசக முற்றோதல் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணி முதல் சிவத திருசிவசண்முகவடிவேல் தலைமையில் இடம்பெறவுள்ளது.

விசேட எந்தன அபிஷேக ஆராதனைகளும், சதுர்த்தி உற்சவமும் இடம்பெறும். (ஐ-3)

செயலகத்துக்கு மீள அனுப்பப்பட்ட நிவாரண அரிசி

சங்கானை, மூளாய் பகுதிகளில உள்ள சில பயோகூசங்கக் கிளைகளில் பாவனைக்கு உதவாத அரிசி, நிவாரணத்துக்கு வழங்கத் தயார் நிலையில் இருந்த போது கண்டு பிடிக்கப்பட்டு விநியோகம் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மேற்கொண்ட திடீர் நடவடிக்கையின் போது இந்தச் சங்கங்களில் லண்டு மற்றும் புழுக்கூடு கட்டிய நிலையில் நிவாரணத்துக்கு விநியோகிக்கத் தயார் நிலையில்இருந்த அரிசி மூடைகள் கண்டுபிடிக்கப்பட்டன.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட சங்கத்தின் இயக்குநர் சபைக்கு அறிவிக்கப்பட்டு சபை உடனடியாகக் கூட்டப்பட்டது.

மனித பாவனைக்கு உதவாத இந்த அரிசி விநியோகத்தினை நிறுத்தி, யாழ்.செயலகக் கலஞ்சியத்துக்கு திருப்பி அனுப்புவது என சபையினர் முடிவு செய்தனர். (க-5)

இன்றைய கிரிக்கெட்

யாழ்ப்பாணம்.ஜன.28

யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் அனுமதியுடன் கொக்குவில் வண்மதி முன்னேற்றக் கழகமும் சனசமூக நிலையமும் நடத்தும் 'விக்டம் - ராஜன் - கங்கு' குழுக்களுக்கிடையிலான கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

✪ காலை 9.00 மணி:- மானிப்பாய்ப்பரிஷ் விக. அணி எதிர் கொக்குவில் யாத்திய சனசமூக நிலைய விக. அணி.

✪ பிற்பகல் 1.00 மணி:- யாழ். பல்கலைக்கழக அணி எதிர் ஜெஸிஸ் ராஸ் விக. அணி. (உ)

ஸ்ரீராம ஜெயம்

அருள்வளர் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோயில்

மஹா கும்பாபிஷேகம் நாளை (29.01.2001)

திங்கட்கிழமை காலை 7.33 - 8.00 மணி வரை.

எண்ணெய்க்காப்புச் சாத்தும் வைபவம்

இன்று 28.01.2001 காலை 6.00 - 11.00 மணி வரை நடைபெறும்.

இணுவில்,
மருதனார்மடம்,
சுன்னாகம்.

சிவஸ்ரீ சுந்தரேஸ்வரக் குருக்கள்,
தர்மகர்த்தா.

(83508)

நாணயமாற்றுச் சந்தையில்

முறைகேடு இடம்பெற்றால் மத்திய வங்கி தலையிடும்

உறுதி கூறுகின்றார் ஆளுநர்

கொழும்பு,ஜன.28

வெளிநாட்டு நாணயங்களுக்கு எதிரான ரூபாவின் பெறுமதியை மிதக்கவிடுவது என்ற தீர்மானத்தை யடுத்து, நாணயமாற்றுச் சந்தையில் முறைகேடுகள் இடம்பெற்றால் அவ்விடயத்தில் தலையிடுவதற்கு மத்திய வங்கி தயாராகவே உள்ளது.

- இவ்வாறு மத்திய வங்கி ஆளுநர் ஏ.எஸ்.ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

"நாணயமாற்று வீதத்தை மத்திய வங்கியோ அல்லது வேறு எந்த நிதி நிறுவனமோ தனது விருப்பப்படி தீர்மானிக்க முடியாது. ரூபாவின் பெறுமதியை மிதக்க விடுவது என்று எடுக்கப்பட்டுள்ள தீர்மானத்தால் உள்ளூர் கைத்தொழிலாளர்கள் பாதிக்கப்படுவார்கள் என்ற குற்றச்சாட்டுக்களையும் ஏற்க முடியாதுள்ளது.

"இறக்குமதிப் பொருள்களின் விலை அதிகரித்தால் உள்ளூர் உற்பத்திப் பொருள்களின் விலைகள் சுயமாகவே அதிகரிக்கும். இதன் மூலம் உள்ளூர் உற்பத்தியாளருக்குப் பாதுகாப்புக் கிடைக்கும். உள்ளூர் உற்பத்தியாளர்கள் தமது உற்பத்திச் செலவினத்தை குறைக்கக்கூடிய வழிவகைகளைக் கண்டு பிடிக்க வேண்டும்" -

என்று கூறினார். (உ-6)

AVAILABLE AT OUR SHOW ROOM

PENTIUM III
(700 MHZ To 800 MHZ)
COMPUTERS
WITH
CD WRITERS
MULTI MEDIA KID
NET 2 PHONE

ALDI ELECTRONICS
15, STANLEY ROAD,
JAFFNA. (C/15028)

முடிவுகள் வெளியாகிவிட்டன!
Scholarship 2001/2002

DCS இனால் நடத்தப்பட்ட கணனிக் கற்கை நெறிக்கான நுழைவுத் தேர்வுப் போட்டிப் பரீட்சை முடிவுகள் யாவும் வெளியிடப்பட்டு உரியவர்களுக்குத் தபாலில் சேர்க்கப்பட்டுள்ளன. கிடைக்கப் பெறாதவர்கள் அலுவலகத்துடன் தொடர்புகொண்டு பெறுபேற்றை அறிந்து கொள்ளமுடியும்.

DCS
COLLEGE OF COMPUTER TECHNOLOGY
124/2, Palaly Road, Thirunelvely.
N.M.M.V. Road, Nelliyadi. (C/14999)

IBMS இன் மாபெரும் புலமைப்பரிசில் 2001

மேற்படி புலமைப்பரிசில் மூலம் தெரிவுசெய்யப்பட்ட பரீட்சார்த்திகளுக்கான விரிவுரைகள் 03.02.2001 சனிக்கிழமை முதல் ஆரம்பமாகும். இவர்களுக்கான விரிவுரை நேரங்களை இன்று முதல் அலுவலகத்தில் பார்வையிடலாம்.

Note:-

- புலமைப்பரிசிலில் இணையத்தவறியவர்களுக்கான அனுமதிகள் விசேட கழிவுக்கட்டண முறை அடிப்படையில் வழங்கப்படுகிறது.
- புலமைப்பரிசில் மூலம் தெரிவுசெய்யப்பட்ட பரீட்சார்த்திகளில் இதுவரை பதிவுசெய்யத் தவறியவர்கள் 31.01.2001 புதன்கிழமைக்கு முன்னர் பதிவினை மேற்கொள்ளலாம். முன்கூட்டியே பதிவு செய்வதன் மூலம்உங்களுக்கு வசதியான விரிவுரை நேரத்தை தெரிவு செய்யலாம்.

IBMS
Head Office:
No.701,K.K.S Road,Jaffna.
Branches:
Near M.P.C.S Chankanai
N.M.M.V Road, Nelliyadi

இளைஞன் காயம்

மல்லாகம் சோடாக் கம்பனி ஒழுங்கைக்கு அருகில் இடம் பெற்ற இராணுவ பிக்அப் வாகனம் - சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் காயமடைந்தார்.

சிறு காயங்களுக்குள்ளான அந்த இளைஞர் தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றார். (க-86)

குடா நாட்டு மோதலில் ஒரு சிப்பாய் பலி 8 படையினர் காயம்

யாழ்ப்பாணம்,ஜன.28

நேற்றும் நேற்று முன்தினமும் குடா நாட்டின் யுத்தமுனைகளில் இடம்பெற்ற சம்பவங்களில் ஓர் இராணுவச் சிப்பாய உயிரிழந்தார்; ஓர் அதிகாரி உட்பட எட்டுப் படையினர் காயமடைந்தனர் என விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்தது.

நேற்று அதிகாலை 4 மணிக்கு முகமாலைப் பகுதியில் உள்ள படையினரின் முன்னரங்க நிலைகள் மீது மோட்டார்கள் மற்றும் சிறுரக ஆயுதங்களைக் கொண்டு புலிகள் நடத்திய தாக்குதலில் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார்;மற்றொரு சிப்பாய் காயமடைந்தார்.

நேற்று முன்தினம் நாகர்கோவில் பகுதியில் புலிகளின் மோட்டார்த் தாக்குதலுக்கு இலக்காகி ஓர் அதிகாரியும் மூன்று சிப்பாய்களும் காயமடைந்தனர்.

கிளாலிக்கு ஒன்றரைக் கிலோ மீற்றர் தெற்கில் படையினர் புதிதாகக் கைப்பற்றிய பகுதியில் - உள்ளூர்த் தயாரிப்பு வெடிகுண்டு ஒன்று வெடித்ததில் மூன்று சிப்பாய்கள் காயமடைந்தனர்.

பொன்னார், அவரைக்காடு, அரியாலைப் பகுதிகளில் தேடுதல் நடத்திய படையினர் மிதிவெடிகள், ரி56 ரகத் துப்பாக்கிகள் என்பவற்றைக் கைப்பற்றினர்.

-இவ்வாறு விசேட ஊடகத் தகவல் நிலையம் மேலும் தெரிவித்தது.

10 மாதங்கள் ஆகியும் 2 ஆயிரம் கொடுப்பனவு இதுவரை இல்லை

தென்மராட்சி,ஜன.28

பளைப் பிரதேச மக்கள் தமது சொந்த இருப்பிடங்களை விட்டு வெளியெறி 10 மாதங்கள் பூர்த்தியடைந்துள்ள போதிலும் பலருக்கு இதுவரை உடனடி நிவாரணக் கொடுப்பனவுத் தொகையான2 ஆயிரம் ரூபா வழங்கப்படவில்லை எனக் கூறப்படுகிறது.

கடந்த ஜூலை மாதம் இக் கொடுப்பனவு பெறுவதற்கான சிட்டையில் (வவுட்சர்) முத்திரை பொட்டி கையொப்பமிட்டும் இது வரை கைக்கு எட்டவில்லை என்று சம்பந்தப்பட்டவர்கள் அங்கலாய்க்கின்றனர். (க-117)

பொங்கு தமிழை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனப் பல்லாயிரக்கணக்கானோர் பங்கு பற்றினர்.

'பொங்கு தமிழ்' நிகழ்வுக்கு ஆதரவு தெரிவிக்கும் பிரகடனம் ஒன்று அந்த நிகழ்வின் முடிவில் வெளியிடப்பட்டது. (உ-164)

தெற்கிலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாக்கும் நோக்குடன் சீனியைப் பங்கீட்டு அடிப்படையில் விநியோகிக்கும் திட்டத்தை நடைமுறைப் படுத்தத் தீர்மானித்திருப்பதாக உணவு மற்றும் சந்தைப்படுத்தல் அமைச்சர் றெஜி ரணதுங்கா தெரிவித்தார்.

இதுவரை காலமும - அவ்வப்போது ஏற்படும் சீனித் தட்டுப்பாடு மற்றும் போக்குவரத்து நெருக்கடிகள் காரணமாக வடக்கில் மட்டுமே சீனி விலை உயர்வதும், அதையடுத்து இங்கு மட்டுமே அதனைப் பங்கீட்டு அடிப்படையில் விநியோகிப்பதும் இடம்பெற்று வந்தமை தெரிந்ததே. (உ-6)

தென்மராட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீளக்குடியமர விரும்புபவர்கள் இனுவிலில் உள்ள தென்மராட்சிப் பிரதேச செயலகம் அல்லது நெல்லியடியில் இயங்கும் தென்மராட்சிப் பிரதேச செயலகத்தின் உப அலுவலகம் ஆகியவற்றில் தத்தமது கிராம அலுவலர்களைச் சந்தித்து, விவரங்களைப் பதிவு செய்து கொள்ள வேண்டுமென இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (உ-7-117)

பூமியதிர்ச்சியால்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிக்குண்டுள்ளனர். இவர்கள் இன்னமும் உயிருடன் இருப்பதாக நம்பப்பட்டது.

புஜ், குச், அன்ஜார் போன்ற குஜராத் நகரங்களில் தொண்ணூறு வீதமான கட்டடங்கள் தகர்ந்து போய்க் கிடக்கின்றன.

நேற்றுப் பிற்பகல் வரை - பெரும் பூமியதிர்ச்சிக்குப் பின்னான- வலுக் குறைந்த - இருநூறுக்கும் அதிகமான - சிறிய நில அதிர்வுகள் இப்பிரதேசத்தில் உணரப்பட்டதாக அறிவிக்கப்படுகின்றது.

உயிரிழந்தவர்களில் சுமார் நாலாயிரம் பேரின் சடலங்கள் இது வரை மீட்கப்பட்டுவிட்டன. சடலங்களை மீட்கும் பணி தொடர்கின்றது.

பேரனர்த்தம் நிகழ்ந்து ஒன்றரை நாள்கள் கடந்த நிலையில் மீட்புப் பணியில் ஈடுபட்டிருக்கும் தொண்டர்கள், தாங்கள் இடிபாடுகளுக்கு இடையில் உயிருடன் இருப்போரை மீட்கும் முயற்சியில் இப்போது நம்பிக்கை இழந்துவிட்டதாகவும் உயிரிழந்தோரின் சடலங்களை மீட்கும் நடவடிக்கையைத் தொடர்வதாகவும் குறிப்பிட்டனர்.

மீட்கப்பட்ட சடலங்கள் பல இடங்களில் அரை குறையாகப் புதைக்கப்பட்டுக் கிடப்பதாகவும் கூறப்பட்டது.

பூமியதிர்ச்சியால் பாதிக்கப்பட்ட பல்வேறு நகரங்களிலும் குடி தண்ணீர், மின்சாரம், எரிபொருள் விநியோகங்கள் இல்லாத நிலையில் - தொடர்ந்து வரக்கூடிய பூமி அதிர்ச்சி பற்றிய பயத்துடன்-

வெட்டவெளித் தரைகளிலும் வீதியோரங்களிலும் - குளிர் நடுக்கத்துக்கு மத்தியில் - மக்கள் பகலையும் இரவையும் கழிப்பதாகக் கூறப்படுகின்றது.

இப்பிரதேசங்களில் கட்டுப்படுத்த முடியாத தொற்றுநோய்கள் பரவும் ஆபத்து இருப்பதாகவும் அஞ்சப்படுகின்றது.

அகமதாபாத் நகரில் உள்ள ஆஸ்பத்திரிகள் அனைத்தும் காயமடைந்தவர்களால் நிரம்பி வழிகின்றன. வீதியோரங்களில் வைத்தும் காயமடைந்தோருக்குச் சிகிச்சையளிக்கப்படுகின்றது.

புஜ் பகுதியில் விமானப்படை அதிகாரிகளின் வீடுகள் அமைந்த கட்டடத் தொகுதி இடிந்து வீழ்ந்ததில் விமானப்படையினரின் குடும்பத்தவர்கள் 100 பேர் வரை உயிரிழந்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

புஜ் விமான நிலையமும் பெருஞ் சேதங்களுக்கு உள்ளாகியுள்ளது.

அண்டை நாடான பாகிஸ்தான் உட்பட பல்வேறு நாடுகளிலிருந்து அவசர உதவிகள் இந்தியாவுக்கு வந்து குவிந்து கொண்டிருக்கின்றன.

யுத்தத் தீவிரத்துடன் மீட்புப் பணிகள் தொடர்வதாக பிரதமர் வாஜ்பாய் அறிவித்துள்ளார். (உ-7-6)

CLASSES O/L 2001,GR.10,GR.9

யாழ்,கொழும்பு பிரபல முன்னணி ஆசிரியரினால்
- பிரத்தியேக வகுப்புக்கள்
- குழு வகுப்புக்கள்
- கல்வி நிலையங்களில் வகுப்புக்கள்

?

விவரம் 01.02.2001 உதயனில் எதிர்பாருங்கள். (8341)

துரிதமீட்டல் - வினா விடை வகுப்பு
LOGIC-A/L2001
எஸ். எஸ். மனோகரன்
ஆரம்பம்: இன்று (28.01.2001) ஞாயிறு மு.ப. 8.00

அத்தியாயம்	காலப்பகுதி
குறியீட்டு அளவையியல் / விஞ்ஞானிகள்-கொள்கைகள்	மாசி, பங்குனி
விஞ்ஞான முறை / வென் படம்	சித்திரை,வைகாசி
உடன் அனுமானம் / ஊடக அனுமானம்	ஆனி
சிறு குறிப்புகள் (பகுதி) / போலிகள்	ஆடி

BEACON யாழ்நகர் (வெலிங்டன் சந்தி) (83443)

ஒரே ஒரு கணம் இவர்களுக்காக....

தொடரும் யுத்தத்தின் வடுக்கள்....
உதிர்கின்ற உயிர்கள் மட்டுமல்ல
சிதைகின்ற கட்டடங்கள் மட்டுமல்ல
உடைகின்ற உள்ளங்களும் தான்.

மனநலம் மங்கிய மனிதர்களின் மறு வாழ்வுக்காக
மருத்துவ மாணவர்களால்
STR FILMS ஆதரவில் காண்பிக்கப்படும்
நிதி உதவிப் படக்காட்சி
இடம்: ராஜா திரையரங்கு, யாழ்ப்பாணம்.
திகதி: 07.02.2001 புதன்கிழமை
உவகையுடன் உதவிக் கொண்டிருக்கும்
உள்ளங்களின் வரிசையில் உங்களையும்
இணைத்துக் கொள்வீர்களா?

விளம்பர அனுசரணை:
SPEED RITE TECHNICIANS
RAM PRINTERS
51, PALALY ROAD, JAFFNA (83422)

இப்பத்திரிகை நயினாதீவு, உதயன் பப்பளிகேசன் (பறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பண்மனையில் 28.01.2001 இல அச்சிடப் வெளியிடப் பெற்றது.